# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 066 வள்ளுவர் ஆண்டு: 2046

தை 17, சனிக்கிழமை 31.01.2015


மேகமூட்டமான வானிலை காணப்படும் மாலை, இரவு வேளையில் குளிரான கால நிலை காணப்படும்.

## உரிமையையும் உறுதி செய்ய வேண்டும் அரசு

புதிய அரசு சிறுபான்மையினர் உட்பட அனைத்து மக்களுக்கும் நீதியையும், உரிமைகளையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது மனித உரிமைகள் கண்காணிப்பகம். பக்.23

## பல்கலை பேரவையை தூய்மைப்படுத்தும் போராட்டம்

யாழ்.பல்கலைக் கழகப் பேரவையைத் தூய்மைப்படுத்தல் என்ற கருப்பொருளில் இன்று போராட்டம் நடத்தவுள்ளது யாழ்.பல்கலை ஊழியர் சங்கம். பக்.02

## கடமைகளை ஏற்றார் ஒஸ்ரின்

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ஒஸ்ரின் பெர்னாண்டோ நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். பக்.24

## தமிழர் தீர்வுக்கு முன்னுரிமை தருக!

நீண்ட காலம் தீர்க்கப்படாத தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை காண்பதற்கு 100 நாள் வேலைத் திட்டத்தில் முன்னுரிமை வழங்குமாறு கோரி, யாழ்.இந்து சமயப் பேரவையால் ஜனாதிபதிக்கு மனு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பக்.04



## பிரதம நீதியரசராக பதவியேற்றார் ஸ்ரீபவன்

இலங்கையின் 44 ஆவது பிரதம நீதியரசராக கே.ஸ்ரீபவன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ந)

# தேர்தல்

### கரைத்துறைப்பற்று, புதுக்குடியிருப்பு சபைகளுக்கு எதிர்வரும் 28 ஆம் திகதி நடத்தப்படும்

யாழ்ப்பாணம், ஜனவரி 31

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்புப் பிரதேச சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்தத் தகவலை பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

குறித்த இரண்டு பிரதேச சபைகளுக்கான தேர்தலை இடைநிறுத்துமாறு தாக்கல் செய்யப்பட்ட இரு வழக்குகளையும் உயர் நீதிமன்றம் நிராகரித்தது. வழக்குக் காரணமாக இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட தேர்தல் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இலங்கையிலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி நடைபெற்றது. அப்போது வடக்கு மாகாணத்திலும் தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

எனினும், அப்போதைய ஆளுங்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்புமனு சகல தேர்தல் தொகுதிகளிலும் நிராகரிக்கப்பட்டிருந்தது. அதனை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ஒத்திவைக்கப்பட்ட தேர்தல், பக்.25

## தேர்தல் தினத்தன்று இரவு மஹிந்த அருகே மொஹான்

### நேரில் கண்டேன் என்கிறார் ரணில்

கொழும்பு, ஜன. 31

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாகத் தொடங்கியது முதலே, முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அலரி மாளிகையில் மஹிந்தவுடன் இருந்துள்ளார் என்று தெரிவித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

வரவு – செலவுத் திட்டம் பக்.22

## மொஹான் பீரிஸ் விவகாரத்தால் குழப்பம்

### பெப்.15 வரை ஒத்திவைக்கப்பட்டது நாடாளுமன்றம்

கொழும்பு, ஜன.31

பிரதம நீதியரசராக இருந்த மொஹான் பீரிஸ் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை, அந்தப் பதவிக்கு கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க மீண்டும் நியமிக்கப்பட்டமை ஆகியன தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் நேற்று வழங்கிய விளக்கம் குறித்து உடனடியாக விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியதால் நாடாளுமன்றத்தில் கடும் சர்ச்சை மூண்டது.

இதனால் இரண்டு தடவைகள் நாடாளுமன்றம் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது. பக்.25

## பாடசாலை வெட்டுப் புள்ளி வெளியானது

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பிரபல பாடசாலைகளில் சேர்ப்பதற்கான வெட்டுப் புள்ளிகள் கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளன. பக்.24

## இலங்கை வருகின்றார் கமலேஷ் சர்மா

கொழும்பு, ஜன.31

பொதுநலவாய செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா மூன்றுநாள் பயணத்தை மேற்கொண்டு இன்று கொழும்புக்கு வருகை தரவுள்ளார். அவர் இலங்கையின் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திக்கவுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலையடுத்து ஜனாதிபதி சிறிசேன பொதுநலவாயத்தின் தலைவராகியிருந்தார். ஜனாதிபதியுடனான சந்திப்பைத் தவிர பக்.25

## மைத்திரி அரசின் 'பட்ஜெட்' தாக்குப்பிடிப்பது கடினம்

### பொருளாதார நிபுணர் கலாநிதி சர்வானந்தா கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜன. 31

மைத்திரி அரசின் புதிய வரவு – செலவுத் திட்டம், தற்காலிக நிவாரணமே என்று சுட்டிக்காட்டியுள்ள பொருளாதார நிபுணர் கலாநிதி முத்துகிருஷ்ணர் சர்வானந்தா, நாடாளுமன்றத் பக்.25

## மூன்றரை கொள்கலன் தங்கம் மறைந்துபோன மாயமென்ன?

### நாடாளுமன்றில் கேட்டார் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க

கொழும்பு, ஜன. 31

"வடக்கு மக்களின் கைப்பற்றப்பட்ட தங்கம் நான்கு கொள்கலன்களில் அப்போதைய ஜனாதிபதியிடம் கொடுக்கப்பட்டது. அதில் மூன்றரை கொள்கலன் தங்கம் இப்போது எங்கே என்று தெரியாது. அவற்றுக்கு என்ன நடந்தது?" – நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

மைத்திரி அரசின் வரவு – செலவுத் திட்டத்தை, நிதியமைச்சர் பக்.[illegible]

## "காணாமற்போனோரை மைத்திரி அரசே மீட்டுத் தா!"

### மட்டக்களப்பில் நேற்று உறவுகள் ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு, ஜன.31

காணாமற்போனோரின் உறவினர்களால் மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. பக்.25

## காணிகளை மீளளித்தால் தாயகம் திரும்பத் தயார்

### ஈழ அகதிகள் இந்திய நாடாளுமன்ற நிலைக்குழுவிடம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 31

இராணுவத்தினரால் பறிக்கப்பட்ட காணிகள் மீள வழங்கப்பட வேண்டும். வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இவற்றுக்கான உறுதிமொழிகள் வழங்கப்பட்டால், இலங்கைக்குத் திரும்புவதற்கும் தாம் தயாராக இருப்பதாக தமிழகத்திலுள்ள அகதிகள் தெரிவித்துள்ளனர் – இவ்வாறு இந்திய நாடாளுமன்ற நிலைக்குழு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் பக்.25

## வடக்கில் எரிவாயு 1,808 ரூபா!

### போக்குவரத்துச் செலவின் காரணமாகவாம்

யாழ்ப்பாணம், ஜன. 31

புதிய வரவு – செலவுத்திட்டத்துக்கு அமைய, சமையல் எரிவாயுவின் விலை ஆயிரத்து 596 ரூபா என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும், போக்குவரத்துச் செலவைக் கருத்தில் கொண்டு வடக்கு மாகாணத்தில் எரிவாயு ஆயிரத்து 808 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் பக்.25

செய்திகள்

# யாழ்.பல்கலைக்கழகப் பேரவையை தூய்மைப்படுத்த இன்று போராட்டம்

## நேற்றிலிருந்து பணிப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

பல்கலைக்கழகப் பேரவையைத் தூய்மைப்படுத்துதல் என்ற கருப்பொருளில் யாழ்.பல்கலைக்கழக முன்றலில் இன்று போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

இன்று காலை 8 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை போராட்டம் இடம்பெறவுள்ளது. இதில் அனைவரையும் கலந்து கொண்டு பல்கலைக்கழகப் பேரவையைத் தூய்மைப்படுத்தும் முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்குமாறு பல்கலைக்கழக சமூகத்தினரையும் பல்கலைக்கழக நலனில் அக்கறை கொண்டோரையும் யாழ். பல்கலைக்கழக ஊழியர்சங்கம்கேட்டுக்கொண்டுள்ளது.

ஏற்கெனவே கூறியதன்படி நேற்று மதியத்திலிருந்து கல்வி சாரா ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்துச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

27 அங்கத்தவர்களைக் கொண்ட யாழ். பல்கலைக்கழகப் பேரவை 14 வெளிவாரி உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. பல்கலைக்கழகச் சட்டம் 1985 பிரிவு 44(1) கல்வி, தொழில்சார் நிபுணத்துவம், வர்த்தகம், கைத்தொழில், விஞ்ஞான, நிர்வாக வட்டங்களில் கௌரவிக்கத்தக்க வகையில் சேவையாற்றியோரிடமிருந்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் வெளிவாரி உறுப்பினர்களானவர்கள் தெரிவுசெய்யப்படவேண்டுமெனக் குறிப்பிடுகின்றது.

2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னர் இங்கு அமைச்சராக இருந்தவர் யாழ். பல்கலைக்கழகத்துக்குள் தனது முழுமையான ஆதிக்கத்தைச் செலுத்தத் தொடங்கினார். பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களை படமாளிகைக்குத் தவறாது ஒவ்வொரு மாதமும் அழைத்து மாத இறுதியில் இடம் பெறவுள்ள பேரவைக் கூட்டத்தில் எடுக்கப்படவேண்டிய விடயங்களையும் அதற்கான முடிவுகளையும் அவரே தீர்மானிப்பார் என்பதும், துணைவேந்தரும் சில பீடாதிபதிகளும் படமாளிகைக்கு அழைக்கப்பட்டு அறிவுறுத்தல் வழங்கப்படுவதும், அவர்கள் அவற்றைச் சிரமேற்கொண்டு கருமமாற்றுவதும் பல்கலைக்கழக சமூகத்தில் பரவலாகப் பேசப்படும் சாதாரண விடயமாகும்.

இதுவரை காலமும் பல்கலைக்கழகச் சுற்றுநிருபங்கள், தார்மீகம், மனச்சாட்சி அனைத்தையும் புறந்தள்ளித் தனியொரு கட்சியின் நலன் கருதியே பேரவையில் முடிவுகள் அனைத்தும் எடுக்கப்பட்டன.

பல்கலைக்கழகத்தில் கல்வி சாரா ஊழியர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் எவரும் (ஒரு சில புறநடைகள் நீங்கலாக) உயர்கல்வி அமைச்சில் தமது பெயர்களைப் பதிவு செய்தல் வேண்டும். ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் பொதுமக்கள் உயர்கல்வி அமைச்சில் அப்பதிவுகளை மேற்கொள்ள முடியும். இது சகல பல்கலைக்கழகங்களுக்கும் பொதுவான விதியாகும். ஆனால் யாழ். பல்கலைக்கழகத்தில் வேலை வேண்டிப் பதிவுகள் மேற்கொள்ள வருபவர்களை மட்டும் உள்ளூர் அமைச்சரின் சிபார்சுக் கடிதத் துடன் வருமாறு உயர் கல்வி அமைச்சில் உள்ள அதிகாரிகள் பல தடவைகள் திருப்பி அனுப்பி உள்ளனர். இதனையும் மீறி நல்லிதயம் கொண்ட அதிகாரிகள் சிலர் மூலம் பதிவுகளை மேற் கொண்டால் அந்தப் பெயர்ப்பட்டியல் உள்ளூர் அமைச்சருக்கு யாழ். பல்கலைக்கழகத்தால் அனுப்பி வைக்கப்படும். அவர் அந்தப் பட்டியலைப் பரிசீலித்துத் திருத்தித் திருப்பிக் கொழும்பிலுள்ள உயர் கல்வி அமைச்சு மூலம் யாழ். பல் கலைக்கழகத்துக்கு அனுப்பி வைப்பார். இவ்வாறு நூறு வீதம் அமைச்சர் விரும்பும் நபர்கள் மட்டுமே வேலை வாய்ப்புப் பெறக்கூடியதாக யாழ். பல்கலைக்கழகக் கல்வி சாரா ஊழியர் நியமன முறைமை மாற்றியமைக்கப் பட்டிருந்தது.

கணினிப் பிரயோக உதவியாளர் பதவிக்கு 2011 இலும், 2012 இலும் அனுப்பப்பட்ட பெயர்ப் பட்டியல்களில் உள்ளூர் அமைச்சரின் சிபார்சைப் பெறாதவர்களும் இடம்பெற்றமையால் எழுத்துப் பரீட்சை, செய்முறைப் பரீட்சை, நேர்முகத் தேர்வு முதலியவற்றில் சித்தி பெற்று நியமனக் கடிதம் வழங்கும் தருணத்தில் ஐம்பதுக்கு அதிகமானவர்களின் நியமனம் வழங்கல் உடனடியாக நிறுத்தப்பட்டது. இவ்வாறு சுருக்கெழுத்தாளர், எழுதுவினைஞர் நியமனங்களிலும் தகுதி வாய்ந்தவர்களின் நியமனங்கள் தடை செய்யப்பட்டன. தெரிவுப் பரீட்சைகளில் சித்திபெறாதவர்களும் கணினிப் பிரயோக உதவியாளர்களாகவும், எழுதுவினைஞர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதற்குக் காரணம் பேரவையிலுள்ள வெளி உறுப்பினர்களே. எனவே அவர்கள் வெளியேறவேண்டும். கடந்த காலங்களில் இடம்பெற்றமுறைகேடான சம்பவங்கள் பற்றிய விசாரணைகள் பக்கச்சார்பின்றி இடம்பெறுவதற்கு பேரவையின் வெளியேற்றம் மிக அவசியம் என்று சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (த–4)

## பேரவைக்கு எதிரான போராட்டத்துக்கு மாணவரும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்.பல்கலைக்கழகப் பேரவையின் வெளிவாரி உறுப்பினர்கள் பதவி விலக வேண்டும் என்று கோரி இன்று நடைபெறும் யாழ்.பல்கலை ஊழியர் சங்கப் போராட்டத்துக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

யாழ்.பல்கலைக்கழகப் பேரவையின் வெளிவாரி உறுப்பினர்கள் தாமாகப் பதவி விலக வேண்டும் என்று நாம் வெளியிட்ட வலியுறுத்தியிருந்தோம். இன்னும் அது நடக்காதது யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் கோரிக்கைகளை உதாசீனம் செய்வதாகவே நாம் கருதுகின்றோம். இத்தகைய சூழ்நிலையில் நாளை நடைபெறவிருக்கும் பேரவைக் கூட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊழியர் சங்கத்தினர் அடையாள வேலை நிறுத்தத்திலும் போராட்டத்திலும் ஈடுபடவுள்ளனர். அதற்கு நாம் பூரண ஆதரவை வழங்குகின்றோம்.

அதேவேளை, இப்போராட்டமானது ஒரு ஆரம்ப கட்ட நடவடிக்கையேயாகும். இதை உணர்ந்து தாமாகவே அவர்கள் பதவி விலகவேண்டும். அவ்வாறு பதவி விலகாதபட்சத்தில் பல்கலைக்கழக அனைத்து மாணவர்களோடு ஒட்டு மொத்த பல்கலைக்கழக சமூகத்தினரையும் உள்ளடக்கி மாபெரும் போராட்டங்களில் ஈடுபடுவோம் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–4)

## நாளை மின் தடை

யாழ்ப்பாணம், ஜன. 31

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை யாழ். பிரதேசத்தில் தீவகப் பிரதேசம் முழுவதும், நுணாவில், கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தனங்களப்பு, தச்சன் தோப்பு, மண்கும்பான் தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை, மண்கும்பான் கடற்படை முகாம், ஊர்காவற்றுறை நீதிமன்றக்கட்டடத்தொகுதி, புங் குடு தீவு இலங்கைக் கடற்படை முகாம், கைதடி சங்கன் கொன்ஸ்ரக்சன், கைதடி வடமாகாண முதலமைச்சர் அலுவலகம் ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில் மாமடுவிலிருந்து மகாகச்சக் கொடிய வரை, பூம்புகார், விளாத்தி குளம், இரணை இலுப்பைக்குளம், சின்ன வலயன்கட்டு, பரசங்குளம், கோவில்புளியங்குளம், சி.ஈ.சி கல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (த)

## பாப்பரசரின் பிரதிநிதி மன்னாருக்கு வருகை

மன்னார், ஜன. 31

பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் மேதகு பியரே நியுபென் வன்ரொட் ஆண்டகை நேற்று வெள்ளிக்கிழமை மன்னாருக்கு வருகை தந்தார்.

நேற்று மாலை 4 மணியளவில் மன்னார் பிரதான பாலத்தில் வைத்து மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தலைமையில் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் நந்தினி ஸ்ரான்லி டி மெல், மன்னார் நகர முதல்வர் எஸ். ஞானப்பிரகாசம், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அன்ரனி விக்டர் சோசை உட்பட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் ஆகியோர் இணைந்து பாப்பரசரின் பிரதிநிதியை வரவேற்றனர்.

இதன் பின்னர் மன்னார் பிரதான பாலத்தில் இருந்து மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயம் வரை திறந்த வாகனத்தில் பாப்பரசரின் பிரதிநிதி மன்னார் ஆயரால் அழைத்துச் செல்லப்பட்டார்.



பேராலயத்தில் விசேட திருப்பலி இடம்பெற்றதோடு நற்கருணை ஆசீர்வதமும் இடம் பெற்றது. இதில் மாணவர்கள், ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

மன்னார் மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்டு 34 ஆம் ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு தோட்டவெளி மறைசாட்சியர் அன்னை ஆலயத்தில் கொண்டாடப்படவுள்ளது. இதில் பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் மேதகு பியரே நியுபென் வன்ரொட் ஆண்டகை தலைமையில் திருப்பலி இடம் பெறவுள்ளது.

## கடமைகளை ஏற்றார் கிழக்கு மாகாண ஆளுநர்

மட்டக்களப்பு, ஜன. 31

கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ நேற்றுத் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். மதத் தலைவர்களின் ஆசீர்வாதத்தை தொடர்ந்து ஆளுநர் செயலகத்தில் இவர் தனது பணிகளை ஆரம்பித்தார்.

இலங்கை நிர்வாக சேவை மூத்த அதிகாரியான இவர் 50 வருடங்களுக்கு மேல் மக்கள் சேவையோடு அனுபவமுள்ளவர். 1963 ஆம் ஆண்டு ஆசிரியர் சேவையில் இணைந்த ஒஸ்ரின் பெர்னாண்டோ, 1967ஆம் ஆண்டு இலங்கை சிவில் சேவைக்கு தெரிவு செய்யப்பபட்டார். அதன் பின்னர் மட்டக்களப்பு மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் உதவி தேர்தல் ஆணையாளராகவும்கடமையாற்றியுள்ளார்.

பொலனறுவை மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் அரசாங்க அதிபர், கூட்டுறவு ஆணையாளர், பதிவாளர் நாயகம், புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர், தபால்மா அதிபர், இரத்தினக்கல் கூட்டுத்தாபன தலைவர், உள்ளூராட்சி மாகாண சபை அலுவல்கள் அமைச்சின் செயலாளர், உள்நாட்டலுவல்கள் அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின் செயலாளராகவும் இவர் கடமையாற்றியுள்ளார். (ற–10)









# அசத்தும் நயன்



முன்னணி நடிகைகளில் ஒருவரான நயன் தாரா 'ராஜா ராணி' படத்தைத் தொடர்ந்து, தன்னுடைய இரண்டாவது தமிழ் சினிமா மீள் பிரவேசத்தை சரியாக பயன்படுத்தி வருகிறார்.

சவாலான வேடங்களில் தன்னுடைய நடிப்பின் உச்சத்தினை வெளிப்படுத்தியும் வருகிறார். தனுஷ் தயாரிப்பில், 'போடா போடி', இயக்குநர் விக்னேஷ் சிவா இயக்கவிருக்கும் 'நானும் ரவுடிதான்' படங்களில் நடித்து வருகின்றார். இதில் நானும் ரவுடிதான் படத்தில், விஜய் சேதுபதியுடன் இணைந்து நயன் நடிக்கின்றார். இந்தப் படத்தின் முதற்கட்ட படப்பிடிப்புகள் ஏற்கனவே முடிந்துவிட்டன.

நயன்தாரா காது கேளாதவராக இதில் நடிக்கின்றார். காது கேளாதவர் என்றாலும் படத்தில் நயனின் பாத்திரம் கருணை அடிப்படையில் அமையாமல், ஜாலியாகவும், நகைச்சுவையாகவும் உருவாக்கியிருக்கிறாராம் இயக்குநர் விக்னேஷ் சிவா.

இவ்வாறு நயன் நடிப்பதற்கு ஒரே காரணம் இது போன்ற படங்களில் தன்னுடைய கதாபாத்திரத்துக்கு முக்கியத்துவம் கிடைக்கும் என்பதுதான்.

# குதிரைக்கு நேர்ந்த கதி

செல்லப்பிராணியாக வீட்டில் வளர்க்கப்பட்டுள்ள குதிரையொன்று சுமார் 2 மீற்றர் ஆழமான கிணற்றுக்குள் விழுந்து அழுது கொண்டிருந்த சம்பவம் பலரை கண்கலங்க செய்துள்ளது.



இங்கிலாந்தின் ஹிங்க்லெ எனும் பிரதேசத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 'பொக்சி' என்று அழைக்கப்படும் குதிரையை குடும்பமொன்று வளர்த்து வந்துள்ளது. இந்தக் குதிரை வழிதவறி சென்று கிணற்றுக்குள் விழுந்துள்ளது.

கிணற்றுக்குள் அழுது கொண்டிருந்த குதிரையை பொலிஸ் அதிகாரி ஒருவர் எதேச்சையாக பார்த்துள்ளதுடன், அதன்மீது இரக்கம் கொண்டு குதிரையின் உரிமையாளர்களிடம் அறிவித்துள்ளார்.

குதிரையின் உரிமையாளர் விலங்கு பாதுகாப்பு மையத்துக்கும், தீயணைப்பு படையினருக்கும் தெரிவித்துள்ளார். பல மணிநேர போராட்டத்துக்கு பின்னர் குதிரை மீட்கப்பட்டுள்ளது. எனினும் குதிரையின் பின்னங்கால்களில் காயங்கள் ஏற்பட்டுள்ளன. மீட்டெடுப்பதற்கு 20 ஆயிரம் பவுண்ட் செலவழிக்கப்பட்டுள்ளது.

# ரிலாக்ஸா வாசியுங்க...



பிரசவ அறை முன்பாக மூன்று ஆண்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்களின் மனைவிகள் பிரசவத்திற்காக உள்ளே போய் இருந்தார்கள். முதலில் தாதி இரண்டு குழந்தைகளுடன் வெளியே வந்தாள். முதலில் அமர்ந்து இருந்தவனிடம், 'வாழ்த்துக்கள், உங்களுக்கு இரட்டை பிறவிகள் பிறந்திருக்கு' என்று குழந்தைகளை காண்பித்து விட்டு சென்றாள். தாதி சென்றதும் அவன் மற்ற இருவரிடமும், 'நான் 2 ஜி ஸ்பெக்டிரம் நிறுவனத்தில் வேலை பார்க்கின்றேன், அதற்கு ஏற்ற மாதிரியே இரண்டு குழந்தைகள் பிறந்திருக்கு' என்றான்.

அடுத்து தாதி மூன்று குழந்தைகளோடு வந்து இரண்டமாவனிடம், 'வாழ்த்துக்கள், உங்களுக்கு மூன்று குழந்தைகள் பிறந்திருக்கு' என்று சொல்லிவிட்டு சென்றாள். இரண்டாமவன், 'நீங்கள் சொன்னது சரி தான், நான் 3 ஜி ஸ்பெக்ரம் நிறுவனத்தில் வேலை பார்க்கின்றேன், அதற்கு ஏற்ற மாதிரியே மூன்று குழந்தைகள் பிறந்திருக்கு' என்றான். உடனே மூன்றாமவன், 'ஐயோ கடவுளே என் மனைவியைக் காப்பாத்து' என்று பிரார்த்தனை செய்தான். மற்ற இருவரும், 'ஏன் பயந்து போய் கடவுளை பிரார்த்திக்கிறீங்க?' என்று கேட்டார்கள்.

அதுக்கு மூன்றாமவன், நான் '7-அப்' நிறுவனத்தில் வேலை பார்க்கின்றேன், என்றான்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: மாணவர்கள் வீண் அலைச்சலைக் குறைத்துக் கொண்டு கல்வியில் கவனம் செலுத்துவது நன்மை தரும். மனதில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும்.

**இடபம்**: தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலைப்பளு குறைந்து மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள்.

**மிதுனம்**: குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். நண்பர்கள் உறவினர்கள் மூலம் தேவையான உதவி கிடைக்கும். வழக்குகளில் சாதகமான நிலை காணப்படும். எதிர்ப்புகள் விலகும்.

**கடகம்**: சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி காண்பீர்கள். மனக்கவலை நீங்கும். எதிர்பார்க்கும் வெற்றி கிடைக்கப் பாடுபடுவீர்கள். எதிலும் முன்னேற்றம் உண்டாகும். காரியதடை நீங்கும்.

**சிங்கம்**: உங்களுக்கு அவ்வப்போது செய்வது சரிதானா என்ற தயக்கம் ஏற்படும். அடுத்தவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைக்காமல் நேரடியாகச் செய்வது நன்மை தரும்.

**கன்னி**: தொழில் வியாபாரம் தொடர்பாக அதிகம் உழைக்க வேண்டி இருக்கும். அதற்கேற்ற பலனும் கிடைக்கப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களின் நிர்வாகத் திறமை பளிச்சிடும்.

**துலாம்**: குடும்பத்தில் திடீர் குழப்பங்கள் தலை தூக்கும். அமைதியாக இருக்க முயன்றாலும் கூட மற்றவர்கள் வலுக்கட்டாயமாகப் பேசுவார்கள். அயலாரிடம் சில்லறை சண்டைகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்**: எந்த ஒரு வேலையையும் அடுத்தவரை நம்பி ஒப்படைக்காமல் நேரடியாகக் கவனிப்பது நன்மை தரும். முயற்சிகள் சாதகமான பலன் தரும். திறமை வெளிப்படும்.

**தனுசு**: மற்றவர்களுடன் இருந்த விரோதம் மறைந்து நட்பு ஏற்படும். வீண்செலவு குறையும். எதிலும் ஒரு வேகம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறி வேகம் பிடிக்கும்.

**மகரம்**: தொழில் தொடர்பான பயணம் செல்ல நேரலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புத்திசாதுரியம் அதிகரிக்கும். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் இருந்த சிக்கல்கள் தீரும்.

**கும்பம்**: திருமண முயற்சிகள் கைகூடும். வாழ்க்கை துணையால் பணவரத்து இருக்கும். பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக பொழுதைக் கழிப்பீர்கள். உறவினர்களுடன் இருந்த மன வருத்தம் நீங்கும்.

**மீனம்**: மற்றவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கி நட்பு உண்டாகும். எந்தவொரு வேலையிலும் வேகத்தைக் காண்பீர்கள். செலவு குறையும். திறமை வெளிப்படும். சாமர்த்தியமான பேச்சு இருக்கும்.

# செய்திகள்

## பிணை எடுத்தவர் பணம் இழந்தார்

### எதிராளி முன்னிலையாகாததால்

தென்மராட்சி, ஜன. 31

வழக்கில் பிணை எடுத்தவர் தொடர்ச்சியாக எதிராளியை நீதிமன்றுக்கு அழைத்து வராததால் பிணைப் பணம் பறிமுதல் செய்யப்பட்டது. இச் சம்பவம் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

வழக்கொன்றின் எதிராளியான ஒருவரை 50 ஆயிரம் ரூபா பிணையில் விட்டபோது ஒருவர் அவரைப் பிணையில் எடுத்திருந்தார்.

வழக்குத் தவணைக்குத் தொடர்ச்சியாக எதிராளி வராததால் கடந்த தவணையின் போது பிணையாளி நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் வழக்கு நீதிமன்றில் எடுக்கப்பட்டபோது எதிராளி சமூகமளிக்காததால் பிணையாளரால் செலுத்தப்பட்ட 50ஆயிரம் ரூபாவை பறிமுதல் செய்யுமாறு உத்தரவிடப்பட்டது.

(த-9)

## 100 நாள் திட்டத்தில் தமிழரின் தீர்வுக்கும் முன்னுரிமை தருக

### ஜனாதிபதியிடம் கோருகிறது யாழ். இந்து சமயப் பேரவை

யாழ்ப்பாணம்.ஜன.31

நீண்ட காலம் தீர்க்கப்படாத தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை காண்பதற்கு 100 நாள் வேலைத் திட்டத்தில் முன்னுரிமை வழங்குமாறு கோரி, யாழ்.இந்து சமயப் பேரவையினால் ஜனாதிபதிக்கு மனு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதியாகத் தாங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமைக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தங்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் 100 நாள் வேலைத் திட்டத்தில் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாத தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைக் காண்பதற்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். இதுவே மக்களுடைய கோரிக்கையாகவும் உள்ளது.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தற்போதைய பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க உள்ளிட்டோர் பக்கபலமாக இருப்பார்கள் என நம்புகின்றோம்.

இதனை விரைவாக முன்னெடுக்க முதற்படியாக நீண்ட காலமாக எந்தவித காரணங்களுமின்றி பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாகி, சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை எந்தவித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுதலை செய்வதுடன், அவர்களின் வாழ்க்கைக்கான வளங்களையும் விரைவாக வழங்கி உதவவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(த-14)

## கரைச்சிப் பிரதேச சபை பட்ஜெட் நிறைவேறியது

கிளிநொச்சி, ஜன. 31

கரைச்சிப் பிரதேச சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான புதிய வரவு – செலவுத்திட்டம் கடுமையான கருத்தாய்வுகளுக்கு மத்தியில் நேற்று ஏகமனதாக நிறைவேறியது.

2014ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இந்த வரவு–செலவுத்திட்டம் ஒரு மாத காலமாக ஆளணிப் பற்றாக்குறை, பகுப்பாய்வுகள் இடம்பெறாமை போன்ற காரணிகளால் இழுத்தடிக்கப்பட்டு வந்தது. நேற்றைய தினம் கரைச்சிப் பிரதேச சபையின் 19 உறுப்பினர்களின் கடுமையான கருத்தாய்வுகளுக்கு மத்தியில் இந்த வரவு – செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கரைச்சிப் பிரதேச சபையின் சென்ற ஆண்டு வருமானம் நேற்றுச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அது 114 மில்லியன் ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளது. இதில் 104 மில்லியன் ரூபா கரைச்சிப் பிரதேச சபையின் வருமானமாகவும், மீதி 10 மில்லியன் ரூபா நெல்சிப் திட்டத்தின் வேலைத்திட்ட வருமானத்தின் மூலம் கிடைக்கப் பெற்றதாகவும் கூறப்பட்டது.

கடந்த 2014ஆம் ஆண்டு நிறைவேற்றிய வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி கட்டட நிர்மாணம், தளபாடங்களின் தேவை என்பவற்றுக்கே பயன்படுத்தப்பட்டது ஆனால் இந்த ஆண்டுக்கான வேலைத்திட்டத்தில் வருமானத்தின் 60 வீதம் குடிதண்ணீர், சுகாதாரம், வரட்சி, சமூக வேலைத் திட்டங்கள் போன்ற பொதுமக்களுக்கான சேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட உள்ளதாக கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் நா.வை.குகராசா தெரிவித்தார்.

(த-21)

## கல்லுடைக்கும் ஆலைக்கு அனுமதி வழங்கவேண்டாம்

### புன்னாலைக்கட்டுவன் மக்கள் ஜனாதிபதிக்கு மனு

யாழ்ப்பாணம், ஜன.31

சுற்றாடல் சுகாதாரத்துக்கு இடையூறை ஏற்படுத்தும் புன்னாலைக்கட்டுவன் கல்லுடைக்கும் ஆலையை மீள இயக்க அனுமதி வழங்குவதை நிறுத்தக் கோரி கிராமமக்களால் ஜனாதிபதிக்கு மனு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

புன்னாலைக்கட்டுவன் ஈவினை கிழக்கு கிராமத்தில் 3 கல்லுடைக்கும் ஆலைகள் உள்ளன. இதனால் கிராமத்தில் உள்ள குடியிருப்புக்கள், தோட்ட நிலங்கள், கால்நடைகள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன.

பிரதேச மக்களின் எதிர்ப்பினால் கடந்த 3 வருடங்களாக ஒரு கல்லுடைக்கும் ஆலை மூடப்பட்டுள்ளது. எனினும் அதனை மீள இயக்க உரிமையாளர் முயற்சிகளை ஆரம்பித்துள்ளார்.

இந்த ஆலையில் இருந்து கிளம்பும் தூசிகள் சுமார் 500 மீற்றர் வரை சென்று சுற்றாடலில் படிகின்றன. இதனால் உண்ணும் உணவு, கிணற்று நீர் என்பன முற்றாக மாசடைகின்றன.

இந்த ஆலை இரவு நேரங்களிலும் இயங்குவதால் பெருமளவானோர் ஆஸ்மா நோயினாலும் பாதிப்புற்றுள்ளனர்.

இதேவேளை, தேர்தல் கொள்கையின் 100 நாள் வேலைத்திட்டத்தில் சுற்றாடல் தொடர்பில் பெறுமதிமிக்க மற்றும் தற்போது அழிவை நோக்கும் பிரதேசங்களைக் கண்டுபிடித்து அவற்றைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இயங்காமல் உள்ள ஆலையை நிரந்தரமாக மூடவும், ஏனைய ஆலைகளைக் குடியிருப்புக்கள் அற்ற இடங்களுக்கு மாற்றவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(த-14)

## தொற்று நோய் பரவலை தடுக்க ஒத்துழையுங்கள்

### கோருகிறார் சுகாதார வைத்திய அதிகாரி

வடமராட்சி, ஜன. 31

வடமராட்சிப் பகுதியில் பெருகி வரும் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்த பொது மக்கள் விழிப்புணர்வுடனும் சுகாதார பிரிவினருடன் ஒத்துழைத்தும் செயற்பட வேண்டும் எனச் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் சுதோஸ்குமார் கூறியுள்ளார்.

பொதுமக்கள் கழிவுகள் குப்பைகள் போன்றவற்றை உரிய இடத்தில் போட்டு தமது பிரதேசத்தைச் சுத்தமாகப் பேணுவதன் மூலமாகவே தொற்று நோய்களுக்கு முடிவு கட்ட முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடமராட்சியில் டெங்கு, தைபோயிட் போன்ற நோய்களின் தாக்கத்தை இல்லாமல் செய்ய பொது மக்கள் விழிப்புணர்வுடன் செயற்படவேண்டும். குறிப்பாக வடமராட்சி முள்ளி மற்றும் மண்டான் பகுதிகளில் வீதியோரமாக கழிவுகள் எறியப்பட்டு வருகின்றன.

கழிவுகள், குப்பைகள் போடப்படுவதற்குரிய இடங்கள் அடையாளப் படுத்தப்பட்டு இருந்தாலும் அந்த இடங்களில் கழிவுகள் போடப்படாமல் வீதியோரமாக எறியப்பட்டு வருகின்றன. சில இடங்களுக்கு நாங்கள் நேரடியாகச் சென்று எறியப்பட்ட குப்பைகளை அழிக்குமாறு கோரி வருவதுடன்சட்ட நடவடிக்கை குறித்து எச்சரித்தும் வருகின்றோம்.

பொதுமக்கள் எமக்கு ஒத்துழைத்து செயற்பட வேண்டும். அதன் மூலமே டெங்கு, தைபொயிட் போன்ற நோய்களுக்கு முடிவு கட்ட முடியும். எனவே பொது மக்கள் தமது சூழலைத் தாமே உணர்ந்து சுத்தமாக வைத்திருந்தாலே தொற்று நோய்கள் ஏற்படாமல் பாதுகாத்து கொள்ளமுடியும்.

தொற்று நோய்களில் இருந்து பிரதேசத்தினைப் பாதுகாக்க பொதுமக்களின் ஒத்துழைப்பினையும் விழிப்புணர்வினையும் எதிர் பார்க்கிறோம் – என்றார். (த-109)

## 787, 788 இ.போ.ச சேவைகளை உடன் ஆரம்பிக்க வேண்டும்

### டிப்போ முகாமையாளரிடம் பயணிகள் கோரிக்கை

வலி.தென் மேற்கு, ஜன. 31

போர்க் காலச் சூழ்நிலை காரணமாக கடந்த 10 வருடங்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மாதகல், கீரிமலை ஆகிய இடங்களிலிருந்து பண்டத்தரிப்பு, சித்தங்கேணி, சங்கானை, மானிப்பாய் ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் 787, 788 வழி இலக்க இ.போ.ச. பஸ் சேவைகளை இந்தப் பகுதியைச் சேர்ந்த மாணவர்களினதும் பொது மக்களினதும் நன்மை கருதி மீண்டும் ஆரம்பிக்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் யாழ்ப்பாணம் டிப்போ பொது முகாமையாளரைக் கோரியுள்ளனர்.

ஒரு நாளுக்குப் பல தடவைகள் மாதலில் இருந்தும், கீரிமலையில் இருந்தும் யாழ்ப்பாணம் வரை சேவையில் ஈடுபட்டு வந்த 787,788 வழி இலக்க பஸ் சேவைகள் போர்க் காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

நாட்டில் இடம்பெற்று வந்த போர் முடிவடைந்து அமைதிச் சூழ்நிலை உருவானதையடுத்து வலி. தென் மேற்குப் பிரதேசத்தில் மாதகல் பகுதியிலும், வலி.வடக்குப் பிரதேசத்தில் கீரிமலை சேந்தாங்குளம் பகுதியிலும் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் போர் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இ.போ.ச. பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படாதமையால் இந்தப் பகுதிகளில் வசிக்கும் பொது மக்கள் குறிப்பாக மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தனியார் பஸ்சேவை மட்டும் இடம்பெறுவதினால் மாணவர்கள் நேரத்துக்கு பாடசாலைக்குச் செல்ல முடியாமல் சிரமங்களுக்குள்ளாவதுடன் இ.போ.ச. பஸ் சேவையில் கிடைக்கும் சலுகைகளையும் இழக்கிறார்கள்.

தனியார் பஸ்களில் அதிகமான பயணிகள் ஏற்றப்படுவதினால் அரச உத்தியோகத்தர்கள், வயோதிபர்கள், குழந்தைகள், கர்ப்பவதிகள் ஆகியோர் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள்.

மாணவர்களினதும் பொது மக்களினதும் நிலைப்பாடு குறித்து பொது அமைப்புகளால் பல தடவைசம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. யாழ்ப்பாண டிப்போவுக்கு அரசாங்கத்தினால் புதிய பஸ்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த நிலையில் பத்து வருடங்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 787, 788 வழி இலக்க பஸ் சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பாதிக்கப்பட்ட மக்கள் கோரியுள்ளனர்.

(த-115)

# 70, 212 ஹெக்ரேயரில் வடக்கில் நெற்செய்கை

## ஒரு லட்சத்து 764 மெற்றிக் தொன் நெல் அறுவடையாகக் கிடைத்தது

யாழ்ப்பாணம், ஜன.31
வடக்கு மாகாணத்தில் கடந்த வருடம் சிறுபோகம் மற்றும் காலபோகத்தில் 70 ஆயிரத்து 212 ஹெக்ரேயர் நிலப் பரப்பில் நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ளது. இதனூடாக ஒரு இலட்சத்து 764 மெற்றிக் தொன் நெல் அறுவடையாகக் கிடைக்கப் பெற்றுள்ளதாக வடக்கு மாகாண விவசாயத் திணைக்களப் புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வருடத்தில் ஆயிரத்து 633.11 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியே வடக்கு மாகாணத்தில் பதிவாகியுள்ளது. இதனடிப்படையில் கிடைக்கப் பெற்ற மழை வீழ்ச்சியைக் கொண்டு சிறுபோகம் மற்றும் காலபோக நெற்செய்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 2013 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 16 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கைக்கு ஆயத்தமான நிலையில் மழை வீழ்ச்சிப் பாதிப்பினால் அது 70 ஆயிரத்து 212 ஹெக்ரேயர் நிலப்பரப்புக்கு மட்டுப்படுத்தி, செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதனால் கடந்த வருடம் நெல் உற்பத்தியில் பெருமளவு வீழ்ச்சி காணப்பட்டுள்ளது.



2015 ஆம் ஆண்டு காலபோக நெற்செய்கையும் மழை வீழ்ச்சி குறைவினால் மட்டுப்படுத்தப்பட்டிருந்து. ஆனால் உற்பத்திக் காலத்தில் போதியளவு மழை வீழ்ச்சி கிடைக்கப் பெற்றுள்ளதால் உற்பத்தியின் அளவு அதிகரிக்கும்.

தற்போது வடக்கு மாகாணத்தில் அறுவடைக் காலம் ஆரம்பிக்கப்பட்டு விற்பனையிலும் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-14)

## ஊற்றுப்புலம் கடையில் பணம், நகைகள் திருட்டு

கிளிநொச்சி, ஜன. 31
கிளிநொச்சி ஊற்றுப்புலம் சந்தியில் உள்ள கடையொன்றில் திருட்டுச் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

ஊற்றுப்புலம் சந்தியில் அமைந்துள்ள பல்பொருள் வர்த்தக நிலையம் ஒன்றிலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் 4 லட்சது 40 ஆயிரம் ரூபா பணமும், 15 பவுண் நகையும் களவாடப்பட்டுள்ளதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடை உரிமையாளர், அவருடைய மனைவி இருவரும் வியாழக்கிழமை நள்ளிரவு 12.00 மணியளவில் கடையைப் பூட்டிவிட்டு யூனியன்குளத்திலுள்ள வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

இரவுப் பயணம் என்பதால் மனைவி தனது நகைகளையும், பணத்தையும் கடையில் வைத்துப் பூட்டிவிட்டுச் சென்றதாகவும், இந்த நிலையில் கடையின் இரவுக் காவலாளி கடமையில் இருந்தபோதும் கடையின் கூரை பிரிக்கப்பட்டு நகைகளும் பணமும் திருடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

திருட்டுச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோடு, மேலதிக விசாரணைகள் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (த-10)

## சுகாதாரத் தொண்டர்களின் போராட்டம் இடைநிறுத்தம்



முல்லைத்தீவு, ஜன. 31
நிரந்தர நியமனம் கோரி முல்லைத்தீவில் சுகாதாரத் தொண்டர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. சுகாதாரத் தொண்டர்கள் 63 பேர் நிரந்தர நியமனம் கிடைக்காத நிலையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கடந்த 28 ஆம் திகதி முதல் இவர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்னால் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன் தினம் அங்கு சென்ற வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், சுகாதாரத் தொண்டர்களின் குறைகளை நேரில் கேட்டதோடு, மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நிலைமைகளை விளக்கினார். சுகாதார அமைச்சரும் சுகாதாரத் தொண்டர் பிரதிநிதிகளுடன் விரிவாக உரையாடினார். இதனையடுத்து சுகாதாரத் தொண்டர்கள் போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளார்கள். (த-105)

## மணல் ஏற்றிய வாகனங்கள் சிக்கின

தென்மராட்சி, ஜன. 31
அனுமதிப் பத்திரமின்றி வாகனங்களில் மணல் ஏற்றி வந்த இரு வாகனங்கள் மறைந்திருந்த பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டன.

இந்த வாகனங்களின் சாரதிகள் மீது கொடிகாமம் பொலிஸார் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகளை தனித்தனியாக விசாரித்த நீதிவான் இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இருவருக்கும் தலா 30 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (த-9)

## காலாவதியான பொருள்கள்; வர்த்தகர்களுக்கு அபராதம்

தென்மராட்சி, ஜன. 31
திகதி, காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த சாவகச்சேரி நகர்ப்பகுதி வர்த்தகர்கள் இருவரும் சாவகச்சேரி நீதிமன்றில் தலா 9ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட செயலகப் பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர்களால் தைப்பொங்கல் வியாபாரம் இடம்பெற்ற வேளையில் வர்த்தக நிலையங்கள் மீது திடீர்ப் பரிசோதனைகளை நடத்தப்பட்டது.

இதன்போது திகதி, காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த இரு வர்த்தகர்களுக்கு எதிரதாக அவர்கள் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தலா 9 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (த-9)

## வெங்காயச் செய்கையின் வயல்விழா வவுனியாவில்

வவுனியா, ஜன. 31
விவசாயிகளுக்கு விழிப்பு ணர்வு மற்றும் பயிற்சிகள் வழங்கும் நோக்கோடு வயல் விழா கடந்த செவ்வாய்க்கிழமை ஒழுங்கு செய்யப்பட்டு காக்கையன் குளத்தில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் பிரதம அதிதியாகவும், யு.எஸ் எய்ட் நிறுவனத்தின் சார்பில் அதன் பயிற்சிப்பிரிவின்தலைவர் இராமநாதன் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப ஆலோசனையுடனும் வழிகாட்டலுடனும், யு.எஸ் எய்ட் நிறுவனத்தின் அனுசரணை யுடன் முன்னெடுக்கப்பட்டு வரு கிறது. சாதகமற்ற காலங்களில் பெரிய வெங்காயச் செய்கையானது தேக்கம், உயிலங்குளம், சிலாவத்துறை தவிர்ந்த அனைத்து விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 401 பயனாளிகளுக்குப் பெரிய வெங்காய விதைகள் மற்றும் நாற்றுமேடை பாதுகாப்புக்காகப் பொலித்தீன் என்பன இலவசமாக வழங்கப்பட்டிருந்தன. உரிய காலத்தில் விதைகளிட்டு நாற்றுக்கள் பராமரிக்கப்பட்டு தற்போது நாற்றுக்கள் பிடுங்கி நடப்படுகின்றன.

இவ்வாறான செயற்பாடு களுக்கு முன்னுதாரணமாக இரணை இலுப்பைக்குளம் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் காக்கையன்குளம் கிராமத்தில் வயல் விழா கடந்த செவ்வாய்க்கிழமை



நடைபெற்றது.

இந் நிகழ்வில் நாற்று மேடைப் பரிபாலனம், ஆரோக்கியமான நாற்றுக்கள் தெரிவு மற்றும் வினைத்திறனான களைக் கட்டுப்பாடு, பொருத்தமான முறையில் வயலைத்தயார்படுத்தல், வயலில் நாற்றுநடுகை போன்ற தொழில்நுட்ப அறிவுரைகளைப் பிரதேச விவசாயப் போதனாசிரியர் மற்றும் பாடவிடய அலுவலர்கள் விவசாயிகளுக்கு வழங்கினர்.

குறிப்பிட்ட விவசாயப் போதனாசிரியர் பிரிவில் 16 ஏக்கர் நிலப்பரப்பில் பெரிய வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. மன்னார் மாவட்டத்தில் 100 ஏக்கரில் பெரியவெங்காயச் செய்கையின் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுபயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது. (த)

# செய்திகள்

## மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்பாளுக்கு திங்கள் கும்பாபிஷேகம்

காரைநகர், ஜன 31

காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்பாள் ஆலயமகாகும்பாபிஷேகப்பெருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.36 மணி முதல் 10.45 மணிவரை உள்ள சுபவேளையில் நடைபெறும்.

மகா கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள்கடந்ததிங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. பத்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிவரை இடம் பெற உள்ளது.



நாளைஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்திலிருந்து பாற்குடப் பவனி இடம்பெறும். இந்தப் பாற் குடப் பவனியில் விசேடமாக யானை, குதிரை, இடபம் முதலானவை கும்பாபிஷேகத்துக்குரிய பொருள்களைச்சுமந்து வர பெருமளவு தவில் நாதஸ்வர வித்துவான்கள் நாதமழை பொழிய நூற்றுக்கணக்கான பெண்களின் பாற்குடப் பவனியில் கலந்துகொள்வர்.

பாற்குடப்பவனியைத்தொடர்ந்து எழுந்தருளி அம்பாளுக்கு பாலபிஷேகம் இடம்பெறும்.

பாற்குடப் பவனியில் பங்குபற்றும் அனைத்துப் பெண்களுக்கும் இலவசமாக சேலை, குடம் என்பன வழங்கப்பட உள்ளன.

இந்தப்பாற்குடப்பவனியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பங்குபற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஆலயம் கடந்த ஒரு வருடத்துக்குள் பல கோடி ரூபா செலவில் முற்றாக புனர்நிர்மாணம் செய்யப்பட்டு இராஜ கோபுரங்கள் மணி மண்டபங்கள் உட்பட அனைத்தும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு 33 குண்ட மகா யாகம் இடம்பெற்று நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.36 மணிமுதல் 10.45 மணி வரை.உள்ள சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேக நிகழ்வுகளில் நூற்றுக்கு மேற்பட்ட தவில் நாதஸ்வர வித்துவான்களின் நாதசமர்ப்பணமும் பரத நாட்டிய நிகழ்வும் இடம்பெறவுள்ளதுடன் தென்னிலங்கையிலிருந்து விஷேடமான யானை, குதிரை என்பனவும் ஆலயத்துக்குக் கொண்டு வரப்படவுள்ளன. (வ–250)

# யாழ்.நகரில் கழிவுகள் வீசுவதைத் தவிர்க்குக

### சுகாதார பரிசோதகர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ்.நகரில் பொலித்தீன் மற்றும் கழிவுப் பொருள்களைக் கண்ட கண்ட இடங்களில் வீச வேண்டாம் என்றும் இதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் அவற்றைப் போடுமாறும் யாழ். மாநகர சபையின் யாழ்.நகர் பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.ஆறுமுகதாசன் கேட்டுள்ளார்.

> கழிவுகளைக் கொட்டுவதற்கென ஒதுக்கப்படும் இடங்களில் அவற்றைக் கொட்டுவதன் மூலம் கழிவுகள் சிதறுவதைத் தவிர்க்க முடியும்.

குறிப்பாக யாழ்.நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் நடைபாதை வியாபாரிகள் பொலித்தீன் பைகள் மற்றும் கழிவுப் பொருள்களைக் கண்ட கண்ட இடங்களில் கொட்டியும் வீசி விட்டும் செல்கின்றனர்.

இதன் காரணமாக நகரில் கழிவுப்பொருள்கள் திடீரெனதேங்குவதால் அவை காற்றால் சிதறி வீசப்பட்டும் வருகின்றன. எனவே வர்த்தகர்கள் கழிவு பொருள்களைக்கண்டகண்ட இடங்களில் கொட்டுவதைத் தவிர்க்க வேண்டும்.

கழிவுகளைக் கொட்டுவதற்கென ஒதுக்கப்படும் இடங்களில் அவற்றைக் கொட்டுவதன் மூலம் கழிவுகள் சிதறுவதைத் தவிர்க்க முடியும்.

அத்துடன் தேங்கும் கழிவு களையும் கழிவகற்றும் பிரிவினர் சிரமமின்றி அகற்றுவதற்கு வசதியாகவும் இருக்கும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (வ–17)



## முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் 14 பேருக்கு 22 படகு எஞ்சின்கள்

வவுனியா, ஜன.31

முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் 44 பேருக்கு மானியமாக 22 படகு எஞ்சின்களும் வலைகளும் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவுகடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் யோ.அமலதாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முல்லை மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து அவற்றை வழங்கியுள்ளார்.

சேவாலங்க நிறுவனத்தாலும் அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் நிதியுதவியுடன் 22 படகு எஞ்சின்கள் பயனாளிகளுக்கு மானியமாகவழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக ஐக்கிய நாடுகளின் அகதிகளின் தூதரகத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கோலாம் அபாஸ், சேவாலங்க பிரதித் திட்டப் பணிப்பாளர் திருமதி அனட் ரொய்ஸ் ஆகியோரும் விருந்தினர்களாக கரைதுறைப் பற்று பிரதேச செயலாளர் ரி.திரேஸ் குமார்,உதவிப்பணிப்பாளர்துசுதாகரன், முல்லைத்தீவு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆர்.பாலச்சந்திரன் ஆகியோரும்கலந்துகொண்டனர்.(வ–435)

## தைத்திங்கள் பொற்தூறல்

50 ஆவது ஆண்டில் காலடி பதித்துள்ள திருமறைக் கலாமன்றம் இவ்வாண்டில் முன்னெடுக்கவுள்ள நிகழ்சிகளில் ஓர் அங்கமாக மாதந்தோறும் நடைபெறவுள்ள 'பொற்தூறல்' என்னும் நிகழ்வின் முதலாவது மாதத்துக்கான நிகழ்ச்சி 'தைத் திங்கள் பொற்தூறல்' என்னும் பெயரில் இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இல. 286, பிரதானவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக் கழக தமிழ்த் துறையின் ஓய்வு நிலைப் பேராசிரியர் கலாநிதி . எஸ். சிவலிங்கராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். நிகழ்ச்சிகளாக சிவானந்தன் அகிலனின் இசைக் கச்சேரியும், கலைத்தூது அழகியல்கல்லூரியில் நடனஆசிரியை திருமதி அகல்யா ராஜபாரதியின் மாணவிகளின் நடனங்களும் இடம் பெறவுள்ளன. (வ–23)

## மருத்துவமனைக்கு பற்சிகிச்சை நிலையம்

வரணி,ஜன.31

வரணி பிரதேச மருத்துவ மனைக்கு பற்சிகிச்சை நிலையம் ஒன்றை அமைக்க 'வேள்ட் விஷன்' நிறு வனம் முன்வந்துள்ளது.


குறித்த மருத்துவ்மனையின் நோயாளர் நலன்புரி சங்கத்தினர் கடந்த ஆண்டு விடுத்த வேண்டுகோளை ஏற்று இந்தத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப்பற்சிகிச்சை நிலையத்தை அமைக்க 'வேள்ட் விஷன்' நிறுவனம்ரூபா 2மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்துள்ள நிலை யில் நோயாளர் நலன்புரி சங் கம் ஒரு மில்லியன் ரூபாவை வழங்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்தத் திட்டம் முன் னெடுக்கப்படவுள்ளது. (வ–122)



யாழ்.நாவலர்வீதி ரயில்வேகடவைச்சந்தியில்உள்ளமதகுதான்இது.யாழ்ப்பாணத்துக்குயாழ்தேவி வந்த போதும் இப்படியான பல இடங்கள் இன்னும் வீதியால் பயணிக்கும் பொது மக்களுக்கு எந்த நேரமும் ஆபத்தான ஒன்றாகவே உள்ளன. இரவு வேளைகளில் இந்த வீதியில் பயணித்துப் பழக்கம் இல்லாவர்கள் ஆபத்துக்களை எதிர்கொள்ளக் கூடிய அபாயகரமான சூழ்நிலையில்தான் இந்த மதகுகள் உள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ–20)

# பல்சுவை

## சுக்குத்தரும் நன்மை



தற்காலத்தில் அதிக மாசினால் பெரும்பாலான மக்களுக்கு தீராத காய்ச்சல் பிரச்சினை ஏற்பட்டு வருகிறது. இதற்காக மருத்துவ மனைக்கு ஓடுவதை விட வீட்டிலே எளிதான முறையில் நாம் எம்மைப் பாதுகாத்து கொள்ள முடியும். எம்மைப் பாதுகாக்கும் ஒரு மருந்து தான் சுக்கு. இஞ்சியைப் பக்குவம் செய்து கிடைப்பது இந்த சுக்கு. இதனை நன்கு சேமித்து வைத்தால், ஒரு வருடம் வரை அவ்வப்போது பயன்படுத்தலாம். சுக்குடன் சிறிது பால் சேர்த்து, பசுந்தாக அரைத்து, நன்கு சூடாக்கி, இளஞ்சூடான பதத்திற்கு ஆறியதும், வலியுள்ள கை, கால் மூட்டுகளில் அதனைப் பூசிவர மூட்டுவலி முற்றிலும் குணமாகும். சுக்கைத் தூள் செய்து, எலுமிச்சைச் சாற்றுடன் கலந்து குடித்தால் பித்தம் விலகும். சிறிது சுக்குடன், ஒரு வெற்றிலையை மென்று தின்றால், வாயுத் தொல்லை நீங்கும். சுக்கு, வேப்பம்பட்டை போட்டு கசாயம் செய்து குடித்துவர, ஆரம்ப நிலை வாதம் குணமாகும். சுக் குடன் சிறிது நீர் தெளித்து, விழுதாக அரைத்து, நெற்றியில் தடவினால் தலைவலி நீங்கும். சுக்கு, கருப்பட்டி, மிளகு சேர்த்து, சுக்கு நீர் காய்ச்சிக் குடித்து வர உடல் அசதி, சோர்வு நீங்கி சுறுசுறுப்பு ஏற்படும்.

## இதயத்தைப் பாதுகாக்கும் உணவுகள்

மனிதன் உயிர்வாழ மிக முக்கியமான ஒன்று இதயம். ஆரோக்கியமாக இதயத்தைப் பாதுகாத்தால் மட்டுமே நீண்ட நாள்கள் வாழ முடியும். இதயத்தில் பிரச்சினை ஏற்படுவதற்குக் காரணம், உயர் இரத்த அழுத்தம், கொழுப்பு, சர்க்கரை, தவறான உணவுப் பழக்க வழக்கங்கள், சமுதாய மாற்றங்கள், புகைப்பிடிக்கும் பழக்கம் மற்றும் குடிப்பழக்கம் என்பனவாகும். சீரான உடற்பயிற்சி மற்றும் உணவுப் பழக்க வழக்கங்களின் மூலம் ஆரோக்கியமான இதயத்தைப் பெறலாம். கோதுமை, பருப்பு மற்றும் தானிய வகைகள் இதயத்துக்குச் சிறந்த உணவாகும்.

இவைகளில் உள்ள நார்ச்சத்துக்கள் மற்றும் மெக்னீசியம் இதயத்தின் சீரான இயக்கத்துக்கு உதவுகின்றன. தக்காளியில் உள்ள விற்றமின்கள் மற்றும் கனிமச் சத்துக்கள் இதய நோய்கள் மற்றும் இரத்த திட்டுகளின் பாதிப்பைக் குறைக்கிறது. பச்சை இலைக் காய்கறிகளில் குறைந்த அளவே கொழுப்பு மற்றும் கலோரிகள் இருப்பதால் ஆரோக்கியமான இதயத்துக்கு அவை சிறந்த உணவுகளாக உள்ளன. இவைகளில் ஏதேனும் ஒன்றைத் தினமும் உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் இதய நோய்களிலிருந்து விடுபடலாம்.




## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 7 | | | 3 | | | |
| 3 | 8 | | | 1 | | 2 | 7 | |
| | | 6 | | | 7 | 3 | 1 | 4 |
| 2 | 6 | 1 | | | 9 | | | |
| 5 | | | | | | | | 6 |
| | | | 6 | | | 1 | 2 | 3 |
| 7 | 3 | 9 | 8 | | | 5 | | |
| | 1 | 5 | | 9 | | | 8 | 2 |
| | | | 7 | | | 6 | 3 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே யும் 3 நிரல் களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப் பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகை யில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 5 | 3 | 9 | 8 | 6 | 7 | 1 |
| 9 | 6 | 3 | 5 | 1 | 7 | 8 | 2 | 4 |
| 1 | 7 | 8 | 4 | 2 | 6 | 3 | 9 | 5 |
| 6 | 8 | 1 | 7 | 5 | 3 | 2 | 4 | 9 |
| 2 | 9 | 7 | 1 | 6 | 4 | 5 | 3 | 8 |
| 3 | 5 | 4 | 2 | 8 | 9 | 7 | 1 | 6 |
| 7 | 1 | 9 | 8 | 3 | 5 | 4 | 6 | 2 |
| 5 | 3 | 6 | 9 | 4 | 2 | 1 | 8 | 7 |
| 8 | 4 | 2 | 6 | 7 | 1 | 9 | 5 | 3 |

CM K

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்



| | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மன்னார் |
|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 120 | 40 | 120 | 40 | 40 | 80 |
| கத்தரி | 80 | 100 | 80 | 120 | 60 | 100 |
| கரட் | 160 | 180 | 160 | 160 | 240 | 200 |
| மரவள்ளி | 50 | 40 | 40 | 40 | 60 | 60 |
| பயிற்றை | 130 | 140 | 120 | 140 | 140 | 160 |
| பாகல் | 120 | 140 | 120 | 140 | 200 | 200 |
| கருணைக்கிழங்கு | 60 | 50 | 50 | 60 | 50 | 80 |
| பெ.வெங்காயம் | 70 | 80 | 70 | 70 | 60 | 65 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 100 | 130 | 160 | 100 |
| பூசணி | 80 | 80 | 70 | 70 | 120 | 80 |
| தக்காளி | 80 | 200 | 180 | 240 | 280 | 220 |
| வாழைக்காய் | 80 | 80 | 90 | 70 | 120 | 100 |
| கீரை | 20 | 30 | 15 | 20 | 30 | 50 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 30 | 30 | 30 | 20 |
| பச்சை மிளகாய் | 350 | 350 | 300 | 400 | 500 | 500 |
| புடோல் | 80 | 100 | 100 | 80 | 120 | 120 |
| கோவா | 80 | 80 | 100 | 80 | 140 | 120 |
| வெண்டி | 100 | 100 | 80 | 100 | 120 | 120 |
| போஞ்சி | 150 | 160 | 140 | 160 | 160 | 200 |
| லீக்ஸ் | 250 | 180 | 280 | 260 | 280 | 240 |
| தேங்காய் | 50 | 60 | 50 | 45 | 45 | 50 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 | 60 | 60 | 65 |
| தேசிக்காய் | 50 | 70 | 40 | 60 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 30 | 10 | 20 |
| கறிமிளகாய் | 250 | 300 | 300 | 250 | 200 | 300 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 | 100 | – | 120 |
| பனங்கிழங்கு | 03 | 05 | 04 | 05 | 05 | – |

## நாளை

**தை-18 ஞாயிற்றுக்கிழமை**

**01.02.2015**

திதி: திரயோதசி பி.இ.02.20 வரை
நட்சத்திரம்: திருவாதிரை பி.ப.05.39 வரை
சுபநேரம்: 09.36-11.06 வரை
இராகுகாலம்:05.06-06.36 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### துன்பங்களுக்கு காரணம் ஆசையாகும்

எதற்கும் ஆசைப்படாதீர்கள். எம்மைத் துன்புறச் செய்வதும், எமது துன்பங்களுக்கு காரணமாவதும் ஆசையேயாகும். நாம் ஒன்றை விரும்புகிறோம்; அதை அடைய முடியவில்லை. அதன் விளைவு துன்பமாகும். ஆசை இல்லாவிட்டால், துன்பமும் இல்லை. இன்பத்தில் ஒரு மகிமை இருக்கிறது; துன்பத்திலும் ஒரு மகிமை இருக்கிறது. ஏன், தீமையினால் பயன்கூட இருக்கிறது துன்பத்தால் நாம் பெறும் பாடம் எம்மெல்லோருக்கும் தெரிந்ததேயாகும். நாம் செய்யாமல் இருந்திருக்கக் கூடாதா என்று பின்னால் நாம் வருத்தப்படும் பல நூறு காரியங்களைச் செய்து விடுகிறோம். ஆனால் அந்தக் காரியங்கள் எமக்கு எத்தனை உயர்ந்த பாடங்களைக் கற்பிக்கின்றன என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்



| | யாழ்ப்பாணம் | மன்னார் | பருத்தித்துறை | மாதகல் |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 700 | 450 |
| நண்டு | 200 | 400 | 300 | 320 |
| கணவாய் | 450 | 500 | 500 | – |
| பாரை | 450 | 450 | 400 | 360 |
| சுறா | 450 | 500 | 500 | – |
| சீலா | 250 | 400 | 350 | 300 |
| விளை | 500 | 350 | 400 | 350 |
| முரல் | 250 | 300 | – | – |
| கும்பிளா | 400 | 300 | 400 | 280 |
| கிழாக்கன் | 200 | 500 | 300 | – |
| ஒரா | 350 | 300 | 350 | – |
| திரளி | 150 | 250 | 200 | – |
| நகரை | 150 | 250 | 250 | 250 |
| சூடை | 100 | 150 | 100 | 70 |
| ஒட்டி | 150 | 100 | 200 | 250 |
| திருக்கை | 150 | 250 | 200 | 130 |
| பாலை | 150 | 250 | 400 | – |
| வாழை | 350 | 100 | 250 | 250 |
| கொய் | 80 | 150 | 80 | – |
| மதனம் | 150 | 250 | 200 | 200 |

# கிழக்கில் புதிய தொழிற் சங்க சம்மேளனம் அங்குரார்ப்பணம்

அம்பாறை, ஜன.31

கிழக்கிலங்கையில் புதிதாக தொழிற் சங்க சம்மேளனம் ஒன்று ஆரம்பித்து வைக்கப் படவுள்ளது.

அகில இலங்கை அரச பொது ஊழியர்சங்கம், வடக்கு, கிழக்கு மாகாண உத்தியோகத்தர் சங்கம், வடக்கு, கிழக்கு மாகாண உத்தியோகத்தர் சம்மேளனம் என்பவற்றை உள்ளடக்கி உருவாக்கப் படவிருக்கும் குறித்த சம்மேளனத்தின் ஆரம்பக் கூட்டம் இன்று சனிக்கிழமை கல்முனை சனச மண்டபத்தில் அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

'ஸ்ரீலங்கா அரச சேவை மற்றும் மாகாண அரச சேவை தொழில் சங்க சம்மேளனம்' என்ற பெயரில் குறித்த புதிய தொழிற்சங்க சம்மேளனம் உதயமாகவிருப்பதாக எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.

வடமாகாணம், கிழக்கு மாகாணம் உட்பட ஏனைய மாகாணங்களிலுள்ள பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்கள் இந்த சம்மேளனத்தில் இணைந்து அங்கத்துவம் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, புதிய தொழிற்சங்க சம்மேளனத்துடன் இணைந்து தொழிற் சங்கங்களால் முன்வைக்கப்படும் தொழில் பிரச்சினைகளில் கவனம் செலுத்த நடவடிக்கை எடுத்தல், முன்நிற்றல், அரச சேவையாளர்கள் மாகாண அரச சேவையாளர்கள், ஊழியர்களின் பதவி உயர்வு, நிரந்தர நியமனம், இடமாற்றம், பரீட்சைகள், சம்பளம், கொடுப்பனவுகள், ஒழுக்காற்று விடயம், புதிய நியமனங்கள் போன்றவை தொடர்பில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் தொழிற் சங்கங்கள் முன்வைக்கும் பிரேரணைகள், கோரிக்கைகள் குறித்து நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுதல்,

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமை புரியும் அரச சேவையாளர்கள், அலுவலர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தொழிலாளர்கள் நலனுக்காக உழைத்தல், சிறுபான்மையின மக்களின் சமய, கலை, கலாசார, சமூக விடயங்கள் மற்றும் கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி, வேலை வாய்ப்பு, விவசாய குடியிருப்பு மற்றும் காணி போன்ற விடயங்களிலும் ஏனைய துறை சார் விடயங்களிலும் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கும் அரசியல் நோக்கம் கருதி எடுக்கப்படும் நடவடிக்கைகள் போன்றவற்றின் மூலம் ஏற்படும் பாதிப்புக்களின் போதும் குரல்கொடுத்தல், இதற்கென முன்னெடுக்கப்படும் அகிம்சை ரீதியான போராட்டங்களில் பங்குபற்றுதல், போன்ற பல்வேறு விடயங்கள் புதிய சம்மேளனத்தின் நோக்காக அமையும் என்றும் தெரிவிக்கப் படுகின்றது. (வ–30)

## மகேஸ்வரி நிதியத்தினரால் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டம்

### மண் அகழ அனுமதிக்கக் கோரி

கரவெட்டி, ஜன.31

வடமராட்சி கிழக்கில் பொது மக்களின் எதிர்ப்பால் தடுக்கப் பட்டுள்ள மகேஸ்வரி நிதியத்தின் மண் அகழும் செயற்பாட்டை அனுமதிக்கக் கோரி மகேஸ்வரி நிதியத்தில் பணிபுரிவோரால் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலத்துக்கு முன்பாக நேற்று முற்பகல் 10 மணிக்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

மண் அகழ்தல் தடுக்கப்பட்டிருப்பதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் மண் அகழ்வு மேற்கொள்ள அனுமதிக்குமாறு கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. சுமார் 2 மணி நேரமாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் சுமார் 30 பேர் வரையிலே கலந்து கொண்டிருந்தனர்.

"எமது வாழ்வாதாரத்தை சிதைக்காதே மண் அழ அனுமதி" போன்ற பதாகைகளைத் தாங்கியபடி இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் மனு ஒன்று மருதங்கேணி பிரதேச செயலர் திருலிங்கநாதனிடம் கையளிக்கப்பட்டது. அந்த மனுவின் பிரதிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் கையளிக்குமாறு பிரதேச செயலாளரைக் கோரியதாக பிரதேச செயலர் திருலிங்கநாதன் தெரிவித்தார்.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: அரசியல் நோக்கத்துக்காக எமது மண் அகழும் செயற்பாடு தடுக்கப்பட்டிருப்பதால் தமது வாழ்வாதாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் 250 டிராக்டர் பணியாளர்கள் 150 சாரதிகள் உட்பட 500 பேர் வேலையிழந்துள்ளனர். இதனால் எமது குடும்பங்கள் வறுமையின் பிடியில் இருக்கின்றன. எனவே மண் அகழ அனுமதி வழங்குமாறு சம்பந்தப்பட்டவர்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம் என்று 37 பேர் கையெழுத்திட்ட குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ–109)

## பஸில், மஹிந்த படங்கள் அகற்றல்

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவினுள் கடமை புரியும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் காரியாலயங்கள் பலவற்றுள் காட்சிப் படுத்தப்பட்டிருந்த முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் படங்கள் தற்போது அகற்றப்பட்டு விட்டன.

குறித்த உத்தியோகத்தர்களின் காரியாலயங்கள் பல பிரதேச பொது மண்டபங்களிலேயே இயங்கி வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் வரணிப் பகுதியில் பொது மண்டபம் ஒன்றில் இயங்கிவந்த குறித்த அபிவிருத்தி உத்தியோகத்தரின் காரியாலயத்தில் காட்சிப் படுத்தப்பட்டிருந்த குறித்த இருவரது படங்களும் பிறேமில் இருந்து அகற்றப்பட்டிருந்ததாக அங்கு இடம்பெற்ற கூட்டம் ஒன்றுக்குச் சென்றிருந்த ஒருவர் தெரிவித்தார். (வ–122)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




அமரர்
பொன்னம்பலம் மகேஸ்வரன்
(ஓய்வுபெற்ற தபால் உத்தியோகத்தர்)
மலர்வு 20.08.1947
உதிர்வு 11.02.2014
திதி: 31.01.2015

எம் அருமை அப்பாவே! ஓராண்டு ஓடி ஒளிந்ததப்பா....
உங்கள் அன்பு முகம் காண ஆவலாய் உள்ளதப்பா....
அன்பின் உருவமாய் அமைதியின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் எம் வாழ்வின் வழிகாட்டியாய்
நாடகக்கலை பிரியனாய் இசைப்பாடல் கலைஞனாய்
சென்ற இடமெல்லாம் சிறப்புடன் வாழ்ந்தீர்கள்
என் அருமைத் தெய்வமே! கனவுகளில் எம்முடன் வாழ்கின்றீர்கள்
நிஜ உலகில் காணாமல் தவிக்கிறோம்
ஊமையாய் அழுகின்றோம்
எம்முள்ளே எம் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு அகலா.....

குடும்பத்தினர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15.09.1943
மறைவு 11.02.2014

அமரர் நாகலிங்கம் சிவபாதசுந்தரம்
(முன்னாள் பெற்றோலிய கூட்டுத்தாபன முகாமையாளர்)

ஆண்டு ஒன்று கடந்து சென்றாலும்
ஆறாத்துயர் இன்னும் ஓயவில்லை
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகத்தைக் காணாமல்
உங்கள் குரல் கேளாதோ எம் காதில்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

குடும்பத்தினர்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

அமரர்
செல்லத்துரை திருச்செல்வம்
மலர்வு 27.07.1945
உதிர்வு 01.01.2015



கடந்த 01.01.2015 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் பிரிவுத்துயர் கேட்டு உதவி நல்கிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உள்ளூர், வெளியூர் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது அன்புகலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (31.01.2015) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் தெற்கு. குடும்பத்தினர்.

ஐந்தாம் ஆண்டு நினைவுகளுடன்

உள்ளம் மகிழ 07 ★ 08 ★ 1945



உள்ளம் நெகிழ 27 ★ 01 ★ 2010

திருமதி சுபத்திராதேவி விவேகானந்தன்
(சங்கீத வித்துவான், சென்னை பல்கலைக்கழகம்- ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியை)
திதி: 31.01.2015

மூன்று எழுத்து கவிதை அம்மா
உண்மைக் கடவுள் அம்மா
பாசத்தின் கோயில் அம்மா
உலக உயிர்களின் ஆதாரம் அம்மா அம்மா

அழகொல்லை,
அளவெட்டி மத்தி,
அளவெட்டி,
யாழ்ப்பாணம்.

நினைவுகளுடன்:
கணவர் தி. விவேகானந்தன்
(ஓய்வுநிலை உள்ளூராட்சி எழுதுநர்)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கண்ணீர் அஞ்சலி

யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியை
திருமதி பவளமலர் பிரபாஸ்கரன்
அவர்களின் மாமனார்
செல்லர் நடேசு
அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

# மெய்வன்மைப்போட்டி

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி இல்ல மெய் வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் மா.நவநீதமணி தலைமையில் நடைபெற வுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக கல்லூரியின் பழைய மாணவன், வைத்திய கலாநிதி, க.வேலும்மயிலும் கலந்து கொள்ளவுள்ளார். பரிசில்களை திருமதி மதுரை மீனாட்சியம்மா வேலும் மயிலும் வழங்கிக் கௌரவிப்பார். (வ–35)

◆ ◆ ◆

வயாவிளான் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சுந்தரசாமியும் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுலகுமாரனும் கலந்து கொள்வர். (வ)

◆ ◆ ◆

தென்மராட்சி,ஜன.31

கைதடி குருசாமி வித்தியாலய இல்ல மெய் வன்மைப் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு வித்தியாலய மைதானத் தில் இடம்பெறும்.

அதிபர் திருமதி ப.செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினராக வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.நிருபராணியும் கலந்து கொள்வர். (வ–9)

◆ ◆ ◆

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற் பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் திருமதி தே.நவரட்ணம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப் பாளர் ஆ.இராசேந்திரம் கலந்து கொள்ளவுள்ளார். வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி சறோஜினி தேவி இராஜேந்திரன் வழங்கிக் கௌரவிப்பார். (வ–108)

◆ ◆ ◆

வல்வெட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி எதிர்வரும் 2ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம் பெறவுள்ளது. வித்தியாலய அதிபர் க.ஸ்ரீநீஸ் குமார் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப் பினர் எம்.கே. சிவாஜிலிங்கமும் சிறப்பு விருந்தினராக சமாதான நீதிவான் கு.தவக்குமாரும் கௌரவ விருந்தினராக பிரபல தொழிலதிபர் ச.இரட்ண கோபாலும் கலந்துகொள் வர். (வ–108)

## ஆதாரம் காட்டி அணிகலனை பெறலாம்

யாழ்.போதனா மருத்துவமனை வளாகத்தினுள் அணி கலன் ஒன்று கண்டெடுக்கப் பட்டுள்ளது. உரியவர்கள் அதற்குத் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். அலுவலக நேரத்தில் அலு வலக காசாளரிடம் அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்று மருத் துவமனைப் பணிப்பாளர் அறிவித்திருந்தார். (வ–4)

## தொழிற்பயிற்சி அதிகார சபை கற்கை நெறிகளில் இணையலாம்

யாழ்ப்பாணம், ஜன. 31

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் மர வேலை தொழில்நுட்பவியலாளர், கட்டடநிர்மாண உதவி யாளர் பயிற்சி நெறிகள் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்திலும் காய்ச்சி இணைப்பாளர் கற்கை நெறி கைதடி கைத் தொழிற் பயிற்சி நிலையத்திலும் வெளி யிணைப்பு இயந்திரத் திருத்துனர், இரு சக்கர மோட்டார் வாகத் திருத்துனர் கற்கை நெறிகள் ஊர்காவற்றுறை தொழிற்பயிற்சி நிலையத்திலும் அலுமினியம் பொருத் துனர் கற்கை நெறி வல்வெட்டித்துறை தொழிற்பயிற்சி நிலையத்திலும் நடைபெற்று வருகின்றன.

இதில் கற்க விரும்புபவர்கள் எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன்னர் இல12, கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டப முதலாம் மாடியில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும் இந்தக் கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழிற் தகைமை சான்றிதழுக்கான பயிற்சிகள் என்றும் மாவட்ட அலுவலக உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்துள்ளார். (வ–10)


## லொறி விற்பனைக்கு

* ASHOK Leyland z-Comet 16½ அடி அலுமினிய பொடி 23000km ஓடியது. LJ XXXX
* TATA 709 14½ அடி அலுமினிய பொடி 29000 km ஓடியது. LK XXXX

(54188) (12.3) தொடர்பு: 077 742 2604


## வலிகாமம் தெற்கு பிரதேசசபை-சுன்னாகம்
## ஆதனவரி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு, பிரதேசசபையின் ஆதனவரி வீதம் இந்த வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து அதிகரிக்கப்பட்டுள்ளன. இதற்குரிய அனுமதி கிடைப்பதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக அதிகரிக்கப்பட்ட வீதத்தை வரியிறுப்பாளர்களுக்கு உரிய காலத்தில் அறிவிக்க முடியவில்லை இதனால் வருடாந்தம் ஜனவரி 31 ஆம் திகதி வரை வழங்கப்படும் 10% கட்டண கழிவு இந்த வருடம் மட்டும் பெப்ர வரி 28 ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளது. இச்சலுகைக் காலத்தை உரிய முறையில் பயன்படுத்தி ஆதனவரியை செலுத்தி எங்கள் பிரதேச வளர்ச்சியில் பங்குபற்றி பிரதேசத்தை வளப்படுத்த உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

தி.பிரகாஷ், தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.
சுன்னாகம்.

(சி/19213) (4.3.7)

## உணவு சிற்றுண்டி வழங்கல், காகிதாதிகள் வழங்கல், மற்றும் வாகனசேவிஸ் போன்றவற்றுக்கான கூறுவிலைகோரல் - 2015
## வலயக்கல்வி அலுவலகம் - கிளிநொச்சி

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கீழ் நடத்தப்படும் கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புக்கள், விழாக்கள். போட்டிகள் என்பனவற்றுக்கு உணவு சிற்றுண்டி வகைகளை வழங்குவதற்கும் வலய பாவனைக்கு காகிதாதி கள் மற்றும் வலய பாவனையில் உள்ள வாகனத்திற்கான சேவிஸ் என் பனவற்றுக்கான கூறுவிலை கோரப்படுகின்றன.

01. நியதிகள், நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் உள்ளடக்கியதான விரிவான கேள்விகோரல் விவரத்தை அலவலகத்தில் பார்வை யிட முடியும்
02. இக் கேள்விப் பத்திரங்களை 05.02.2015ஆம் திகதி தொடக்கம் முற்பகல் 10.00 மணிமுதல் 19.02.2015ஆம் திகதி வரை ருபா நானூறு (ருபா 400/=) மீளளிக்க முடியாத வைப்புப்பணம் செலுத்தி நேரடியாக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடி யும்.
03. பூரணப்படுத்திய கேள்விப்பத்திரங்களை 20.02.2015 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதி வுத் தபாலாகவோ அலுவலகத்திற்கு (கணக்காளர், வலய கல்வி அலுவலகம், கிளிநொச்சி) அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
04. அதிகாரம் பெற்றகேள்விச் சபையினர் 20.02.2015ஆம் திகதி பிற் பகல் 2.00 மணிக்கு கூடி கேள்விப்பத்திரங்கள் திறக்கப்பட்டு இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.
05. இது சுருக்கமான பத்திரிகை விளம்பரமாகும்
06. மேலதிக தகவலுக்கு அலுவலகநேரத்தில் (காலை 9.00மணி முதல் பி.ப 4.00 மணிவரை) 0212285416 தொலைபேசியூடாக அறியலாம்.

க.முருகவேல்
தலைவர், கேள்விச் சபை
வலயக் கல்விப் பணிப்பளர்,
கிளிநொச்சி.

(C/19217)(10.7)


Majestic
Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




பிளட்டினம் / ப்றொன்ஸ் 10.30 / 2.30 / 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com



## விற்பனைக்கு

TOYOTA DOLPHIN 5L HZ XXXX, 1999ஆம் வருட உற்பத்தி வாகனம் உடனடி விற்பனைக்குண்டு.

(56328) (12.3) தொடர்பு: 021 225 5249
(ஞாயிறு காலை 10 மணிக்குப் பின்பு)

## மணமகள் தேவை

* 80 இல் பிறந்த, 4 இல் செவ்வாய், 28¼ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.
* 83இல் பிறந்த, செவ்வாய் பாவமில்லாமல் 18 பாவமுடைய கனடா பிரஜா உரிமைபெற்ற எலற்றிக்கல் இஞ்சினிய ருக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
* 79இல் பிறந்த, 12இல் செவ்வாய், 43பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற எக்கவுண்டன் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 81இல் பிறந்த 8இல் செவ்வாய், 47½ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமைபெற்ற MSC IT, சைவபோசன மண மகனுக்கு ஸ்சவபோசன பட்டதாரி மணமகள் தேவை.
* 83இல் பிறந்த, 3இல் சூரியன், செவ்வாய் 13½ பாவ முடைய கனடா பிரஜா உரிமைபெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.
* 74இல் பிறந்த, செவ்வாய் பாவமில்லாமல் 35½ பாவ முடைய லண்டன் பிரஜா உரிமைபெற்ற மண மகனுக்கு மணமகள் தேவை.
* 83இல் பிறந்த, செவ்வாய் பாவமில்லாமல் 15½ பாவ முடைய ஆஸ்திரேலியா பிரஜா உரிமைபெற்ற இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 80இல் பிறந்த, 7இல் சூரியனும், செவ்வாயும் 62½ பாவமுடைய சுவிஸ் பிரஜா உரிமைபெற்ற மண மகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 81இல் பிறந்த, செவ்வாய் பாவமில்லாமல் 23½ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமைபெற்ற இஞ்சினியர் மணமகன் வந்துள்ளார், பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை
இல.62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி, முடமாவடி.
(56326)(12.3) தொடர்பு: 077-607 0862

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

Splender P.R.O 100CC N.P.BAG - XXXX விற்பனைக்குண்டு.

தொடர்பு: No.10, Racca Lane, Chundikuli, Jaffna.
(56177) (12.3.7) 077 753 3237

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

1½ பரப்புக் காணி வீட்டுடன் பெரிய கோயிலுக்கு சமீபமாக விற்பனைக்குண்டு.

(56102) (12.3) தொடர்பு: 077 553 9118/077 622 3582

## வாடகைக்கு

திருநெல்வேலி வளாக வீதியில் வீடு வாடகைக்குண்டு.

(56310)(12.3) தொடர்பு: 077 508 5778

## நாய்க்குட்டி விற்பனைக்கு

நல்ல இன காளிக்ருயின் இரண்டு அடிக்குமேல் வளர்ந்தவை (9 மாதம்) விற்பனைக்குண்டு.

(56312)(12.3) தொடர்பு: 077 773 0567

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் தொழிலகம் ஒன்றுக்கு 40வயதுக்கு உட்பட்ட சுறுசுறுப்பான பெண் வேலையாள்கள் நிரந்தரமாகத் தேவை.

(56320)(12.3) தொடர்பு: 076 669 5559

## புதுப்பொலிவுடன்

இன்றுமுதல் ஆட்டுக்கிடாய், ஆட்டிறைச்சிக் கடை திறப்பு.
இடம்: கொக்குவில் பிறவுண்றோட்.
நம்பிக்கையுடன் வரவும்.
உரிமையாளர்.


(56321) (12.3) தொடர்பு: 077 592 7228

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் சுத்தம் செய்தது
கிலோ 450/=, கல்பேட் 500/=.

(56289) (12.3)
குமரன் பாம்,
ஸ்ரேசன் சந்தி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## செல்லா சினிமா யாழ்ப்பாணம்



40அடி அகலம் LED திரையில்
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
டைரக்டர் சங்கரின் பிரமாண்டமான
சியான் விக்ரம், எமிஜாக்சன் நடிப்பில்
ஐ
காட்சி: 10.30, 2.30, 6.30, 9.30
முற்றிலும் குளிரூட்டப்பட்டது
பெப்ரவரி 5 முதல் அஜித் நடிக்கும் "என்னை அறிந்தால்"

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்

தோற்றம்
14 * 02 * 1953



மறைவு
02 * 01 * 2015

## அமரர் சின்னத்துரை புலேந்திரன்

கடந்த (02.01.2015) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் சின்னத்துரை புலேந்திரன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (01.02.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அன்னாரின் மரணச் செய்திகேட்டு நேரிலும், தொலைபேசிமூலமாகவும், உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், எம்மோடு நின்று உதவிய அனைவருக்கும் மற்றும் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

விக்னேஸ்வரா வீதி,
கரவெட்டி தெற்கு, கரவெட்டி. (56319)(12.3) **குடும்பத்தினர்.**

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி ருக்மணி நடராசா

எமக்கெல்லாம் நல்வழி காட்டிய தீபமே!
எம் குடும்ப விளக்கே!
நீங்கள் எம்மை விட்டுச் சென்று
ஆண்டுகள் ஐந்து உருண்டோடிவிட்டதே!
நம்பமுடியவில்லை?
உங்கள் இனிய அன்பான கதைகள்
எம் காதுகளில் ஒலிக்கின்றன.
உங்கள் சிரித்த முகம் - அன்பான
பார்வை கொண்ட தோற்றம்
எம் கண்களிலே தெரிகின்றது
எம்முடன் கூடவே இருக்கின்றீர்கள் - நீங்கள்
மறையவில்லை என்றென்றும்
எங்களுக்குள் வாழ்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.



(56318)(12.3)

மலர்வு 01.06.1946
உதிர்வு 10.02.2010
*திதி: 31.01.2015*

138 A, சேர் பொன்
இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

*என்றும் நினைவில்:* நடராசா (கணவர்),
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# பரிசளிப்பு விழாக்கள்

யாழ்ப்பாணம், ஜன.31

சங்கானை சவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் சூ.நேபோலேட் உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) பொ. ரவிச்சந்திரனும் சிறப்பு விருந்தினராக வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா. ஐங்கரனும் கலந்துகொள்வர்.

மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி சங்கமித்திரா ரவிச்சந்திரன் வழங்குவார். ஆசியுரையை இலுப்பைத்தாழ்வு முருகமூர்த்தி ஆலயக் குருக்கள் பிரம்மஸ்ரீ நி.ஜெகானந்த சர்மாவும் நிறுவுநர் தின உரையை பண்டத்தரிப்பு கால் நடை வைத்திய சாலை அபிவிருத்தி உத்தியோகத்தரும் குறித்த பாடசாலையின் பழைய மாணவியுமான செல்வி ந.சிவமலர் நிகழ்த்துவார். (வ)


◆ ◆ ◆

மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலய நிறுவுநர் நாள் நிகழ்வும் பரிசில் நாள் நிகழ்வும் இன்று சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு வித்தியாலய காசிநாதர் மண்டபத்தில் இடம்பெறும்.

வித்தியாலய அதிபர் ந.ஜெயக்குமாரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) வே.பாலசுப்பிரமணியமும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தமும் கௌரவ விருந்தினர்களாக நிறுவுநர் பரம்பரையைச் சேர்ந்த கே.ஆரேன் திருமதி உமாச்சந்திரா பிரகாஸ் ஆகியோரும் கலந்துகொள்வர்.

(ய-9)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் பொன்னு தம்பையா

தோற்றம் 03.05.1927
மறைவு 11.02.2014

திதி: துவாதசி (31.01.2015)


ஆண்டொன்று மறைந்திடினும்
ஆறுமோ எம் துயரம் அன்புத் தந்தையே!
அவனியில் எம்மைப் பண்புடனே
வளர்த்து நீங்கள் எம்மனங்களில்
மறையாது என்றும் வாழ்கின்றீகள்.

706, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# நன்றிநவிலலும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
10.11.1923



மறைவு
01.01.2015

## திருமதி நாகேஸ்வரி நாகலிங்கம்

கடந்த 01.01.2015 இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மரணச்செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிய உள்ளங்களுக்கும், தொலைபேசி, கண்ணீர் அஞ்சலி, பதாகைகள், மலர்வளையம் மற்றும் தேவையான உதவிகள் புரிந்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

29.01.2015 வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெற்றன.

இன்று (31.01.2015) சனிக்கிழமை வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எமது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறவுள்ளதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தெய்வீகம்,**
**மடத்தடி லேன்,** (55974)(45.7.3)
**மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.**

குடும்பத்தினர்
க.பஞ்சலிங்கம்,
அன்பு ஜுவலர்ஸ்
மானிப்பாய்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# தகாத வார்த்தைப் பிரயோகத்தில் இ.போ.ச ரிக்கெட் பரிசோதகர்கள்

## உரிய நடவடிக்கை எடுக்குமாறு பயணிகள் தரப்பில் கோரிக்கை

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களில் ஏறும் ரிக்கெட் பரிசோதகர்கள் சிலர் பஸ்ஸுக்குள் தகாத வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபடுவதாகவும், இ.போ.சவின் மரியாதையைக் குறைக்கும் வகையில் நடந்துகொள்வதாகவும் அதிருப்தி வெளியிட்ட பிரயாணிகள், இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பயணி ஒருவரின் தவறால் நடத்துநர் தண்டிக்கப்பட்ட சம்பவமொன்று யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை நோக்கிச் சென்ற இ.போ.ச பஸ்ஸில் இடம்பெற்றுள்ளது. இது குறித்து நியாயம் கேட்க முயன்ற மக்களுடன் பரிசோதகர்கள் மோசமான வார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனையடுத்தே பிரயாணிகள் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் குறித்த பஸ்ஸில் பயணித்த பிரயாணிகள் கூறுகையில்;

கடந்த வியாழக்கிழமை காலை 7 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்குப் பயணித்துக்கொண்டிருந்தோம். நடத்துநர் பயணிகளுக்கு ரிக்கெட் கொடுத்ததுடன் பருவகாலச் சீட்டில் பயணிப்பவர்களுக்கு அதனையும் வெட்டிக் கொடுத்தார். இது மட்டுமல்லாது ரிக்கெட் எடுக்காதவர்கள் யாரும் இருந்தால் ரிக்கெட் எடுக்கும்படியும் அறிவுறுத்தினார்.

பளைப் பகுதியில் பஸ்ஸை மறித்த ரிக்கெட் பரிசோதகர்கள் சகோதர மொழிப் பயணியொருவர் ரிக்கெட் இல்லாமல் பயணித்ததைக் கண்டு பயணியிடம் விளக்கம் கோரினர். அதற்கு குறிதத் பயணி தான் உறங்கிவிட்டதால் ரிக்கெட் எடுக்கத் தவறிவிட்டதாகக் கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து நடத்துநரிடம் விளக்கம் கோரினர் பரிசோதகர்கள். இதன்போது தான் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் ரிக்கெட் எடுக்காதவர்கள் அதனைப் பெற்றுக்கொள்ளும்படி அறிவுறுத்தியதாகத் தெரிவித்தார் நடத்துநர்.

இந்த நிலையில் குற்றத்தை ஒப்புக்கொண்ட பிரயாணிக்குத் தண்டனை வழங்காமல் நடத்துநருக்கு எதிராக குற்றப்பத்திரிம் எழுதினர் ரிக்கெட் பரிசோதகர்கள். இதற்குப் பயணிகள் அனைவரும் சேர்ந்து எதிர்ப்புத் தெரிவித்தோம். இந்த நிலையில் 'இது உங்களுக்குச் சம்ம்ந்தமில்லாத விடயம். நீங்கள் உங்கள் வேலையை மட்டும் பாருங்கள். எங்களுக்குத் தெரியும் யாரை தண்டிக்கவேண்டும் என்று பரிசோதகர்கள் சத்தமிட்டதுடன் மிகவும் மோசமான வார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபட்டனர்.

பஸ்ஸினுள் அரச ஊழியர்கள், வயதானவர்கள், குழந்தைகள் எனப் பலரும் இருந்த நிலையில் பரிசோதகர்கள் மேற்படி நடந்து கொண்டது முறையல்ல. இ.போ.ச கட்டுக்கோப்பு, ஒழுக்கத்துடன் கூடியது. இந்த எதிர்பார்ப்போடு இ.போ.சவை நாடும் எங்களுக்குப் பரிசோதகர்களின் நடவடிக்கை அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது. இனிவரும் காலங்களில் இதுபோன்ற சம்பவங் களை கட்டுப்படுத்த இ.போ.ச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டனர். (த-10)

# வலி.வடக்கில் மக்களை குடியமர்த்தினால் உதவி

## அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனிடம் உறுதியளித்தார் பிரிட்டன் அமைச்சர்

கொழும்பு, ஜன. 31

வலி.வடக்கில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்பட்டால், அந்த மக்களின் மீள் புனர் நிர்மாணம் மற்றும் வாழ்வாதாரத்துக்கு உதவி செய்யத் தயாராக இருப்பதாகப் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் ஹுகோ ஸுவைர், மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனிடம் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கு மூன்றுநாள் பயணமாக வருகை தந்திருந்த பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் ஹுகோ ஸுவைர், நேற்றுக் காலை, மீள்குடியேற்ற, புனர்நிர்மாண மற்றும் இந்துசமய கலாசார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் சுவாமிநாதன்,

எமது மைத்திரி அரசின் நூறு நாள் வேலைத் திட்டம் தொடர்பில் அவருக்கு விளக்கமளித்தேன். இதன்போது நாம் முன்னெடுக்கவுள்ள செயற்றிட்டங்களை அவருக்குத் தெரியப்படுத்தினேன். இதன்போது அவர் எனக்குச் சில விடயங்களைச் சுட்டிக்காட்டினார்.

வலி.வடக்கில் இராணுவத்தினரின் வசமுள்ள பொதுமக்களின் காணிகள் மற்றும் திருகோணமலை சம்பூர் பகுதியில் இராணுவத்தின் வசமுள்ள பொது மக்களின் காணிகளும் விடுவிக்கப்படவேண்டும். இதனை அவர் வலியுறுத்தினார்.

மேற்படி இரு பகுதிகளிலுமுள்ள தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டால், அங்கு வீட்டுத் திட்டம் உள்ளிட்ட சகல வசதிகளையும் வழங்கி மக்களை மீள்குடியமர்த்த எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு உதவிகள் வழங்கப்படும்என்பதையும் அவர் குறிப்பிட்டார் என அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித் தார். (த-5)



# உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10.11.12.13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவிமம் மட்டும் | B | 6. 7. 8. 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும்' | C | 3. 4. 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

### கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.
கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.

1. ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண்போம்.

### கட்டுரைப் போட்டி

பிரிவு Aபின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 600 - 750 சொற்கள்.

1. பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்திற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும். விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 400- 550 சொற்கள்

1. எதிரகாலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர் மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும் ,

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000. ரூ.2000. ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)
பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..............................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..............................
கற்கும் பாடசாலை: ..............................
தரம்: ..............
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..............................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..............................
ஆசிரியரின் பாடத்துறை: ..............................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .............................. அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

### ஓவியப்போட்டி

| | |
|---|---|
| பிரிவு A தரம் 10.11.12.13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| பிரிவு B தரம் 6. 7. 8. 9 | பனை வளமும் நாமும் |
| பிரிவு C தரம் 3. 4. 5 | பண்டிகை நிகழ்வு |

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில். நீர் வர்ணம். பேஸ்டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

### மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10,11,12,13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது. மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

People's Bank

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்பப்படிவத்தில் , பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

**30 ஆவது அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

30 அகவையில் உதயன்

# போர் மூளும் அபாயம்

## ரஷ்யாவுக்கும், மேற்கத்திய நாடுகளுக்கும் இடையே தொடந்து முறுகல் நிலை

மொஸ்கோ, ஜன. 31

ரஷ்யாவுக்கும், மேற்கத்திய நாடுகளுக்குமிடையே தற்போது நிலவி வரும் பதற்றம் தொடர்ந்தால், அது போராக வெடிக்கும் அபாயம் உள்ளதாக முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் அதிபர் மிகையில் கோர்பசேவ் எச்சரித்துள்ளார்.

இது குறித்து செய்தி நிறுவனமொன்றுக்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்; ரஷ்யாவை மீண்டும் ஒரு பனிப் போருக்கு மேற்கத்திய நாடுகள் இழுத்துள்ளன.

இந்தப் பனிப் போர், முழுப் போராக வெடிக்காது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்று தெரிவித்தார்.

கிழக்கு உக்ரைனில் அரசுப் படையினருக்கும், ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடைபெற்று வரும் மோதலில் 5,100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அந்த மோதலில், கிளர்ச்சியாளர்களுக்கு ரஷ்யா உதவியளித்து வருவதாக உக்ரைன் குற்றஞ்சுமத்துவதும். கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள பகுதிகளை மீண்டும் கைப்பற்ற உக்ரைன் மேற்கொண்டு வரும் தாக்குதல்களுக்கு மேற்கத்திய நாடுகள் உதவுவதாக "ரஷ்யா குற்றம் சுமத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)



# கொத்தடிமை சிறுவர்கள் 90 பேர் மீட்பு

## ஹைதராபாத்தில் பொலிஸார் அதிரடி

ஹைதரபாத் ஜன. 31

ஹைதராபாத்தில் பொலிஸார் மேற்கொண்ட தீவிர சோதனையில், கொத்தடிமைகளாக வைக்கப்பட்டிருந்த பீகாரைச் சேர்ந்த 90 சிறுவர்கள் மீட்கப்பட்டுள்ளனர். அவர்களில் பல சிறார்கள் 8 வயதுடையவர்களாக இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சிறார்கள் மனிதாபிமானமற்ற முறையில் மிகச் சிறிய அறைகளில் அடைத்து வைக்கப்பட்டு, இரவு நேரங்களிலும் தொடர்ந்து பணியாற்ற வைக்கப்பட்டுள்ளனர்.

பீகாரில் வறுமையில் வாடும் குடும்பங்களில் இருந்து ஐயாயிரம் ரூபா கொடுத்து இந்த சிறார்களைக் கூட்டிச் சென்ற கும்பலொன்று, மிகவும் கடினமானப் பணிகளிலும், வளையல் செய்யும் வேலையிலும் அவர்களை ஈடுபடுத்தியுள்ளது.

கடந்த வாரம் சனிக்கிழமை ஹைதராபாத்தில் 200க்கும் மேற்பட்ட சிறார்கள் கொத்தடிமைகளாக இருந்து மீட்கப்பட்ட நிலையில், தற்போது மேலும் 90 சிறார்கள் மீட்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

# சாதனையில் பெண்

வெனிசுலாவின் கராகஸ் நகரில் சர்வதேச டாட்டூ கண்காட்சி(உடம்பில் பச்சை குத்துதல்) நேற்று முன்தினம் நடைபெற்றது. அந்தக் கண்காட்சியில் ஏராளமான கலைஞர்கள் உலகம் முழுவதிலும் இருந்து கலந்து கொண்டனர். கலைஞர்கள் சிலர் டாட்டூ மீது கொண்ட மோகத்தால், பலவித ஊசிகளை தங்களின் உடம்பில் குத்தி கொண்டும், விதவிதமான டாட்டூக்கள் வரைந்தும் தங்கள் திறமையை வெளிப்படுத்தினர். அதில் ஒஸ்றியப் பெண்ணொருவர் அனைவரையும் கவரும் வகையில் ஊசிகளை தனது உடம்பில் குத்தி டாட்டுக்களை வரைந்து சாதனை படைத்துள்ளார். (ஒ–ரி)





# அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சருக்கு அபராதம்

பொஸ்டன், ஜன. 31

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் ஹெரியின் வீடு பொஸ்டன் நகரில் பீகான் பகுதியில் பிங்க்னீ வீதியிலுள்ளது. அவரது வீட்டின் முன்பு அதிக அளவில் பனி விழுந்திருந்தது.

அதனை அகற்ற அவர் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து பொஸ்டன் நகர நிர்வாகம் அமைச்சர் ஜோன் ஹெரிக்கு மூவாயிரம் ரூபா செலுத்தும்படி அபராதம் விதித்தது. அதை அவர் முறைப்படி செலுத்தியுள்ளார்.

இந்தத் தகவலை ஹெரியின் செய்தித் தொடர்பாளர் கிளன் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

மேலும், அந்தச்சம்பவம் நடந்த போது ஹெரி பொஸ்டன் நகரில் இல்லை. சவூதி அரேபியாவில் மன்னர் அப்துல்லா மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியில் அதிபர் ஒபாமாவுடன் அவர் பங்கேற்று இருந்தார். அதிபருடன் இணைந்து புதிய மன்னரையும் தாம் சந்தித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் தற்போது கடும் பனிப் புயல் வீசுகிறது. இதனால் பல பகுதிகளை பனி மூடியுள்ளது. பொஸ்டன் நகரம் இதில் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு 2 அடி உயரத்துக் குப் பனி படர்ந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

# தியாகிகள் தினத்தில் காந்திக்கு பிரதமர் மோடி அஞ்சலி

புதுடில்லி, ஜன. 31

இந்தியாவில் மகாத்மா காந்தி நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இதனையொட்டி பிரதமர் நரேந்திர மோடி மகாத்மா காந்திக்கு அஞ்சலி செலுத்தினார். மகாத்மா காந்தி நினைவுதினம் மற்றும் தியாகிகள் தினத்தையும் முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி தேச பிதா மகாத்மா காந்திக்கு அஞ்சலி செலுத்தினார். மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் எமது நாட்டுக்காக உயிர் நீத்த ஒவ்வொருவருக்கும் நாம் அஞ்சலி செலுத்துவோம். அவர்களது வீரம் மற்றும் தைரியம் எப்போதும் எம்மை ஊக்குவிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

1948ஆம் ஆண்டு இந்த நாளில் காந்தி படுகொலை செய்யப்பட்டார்.

நாட்டுக்காக உயிர் நீத்த அனைவரையும் நினைவு கொள்ளும் விதமாக நேற்று தியாகிகள் தினம் கடைப்பிடிக்கப்பட்டதோடு, நாடு முழுவதும் நேற்று முற்பகல் 11மணிக்கு 2 நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)



# காஷ்மீர் பிரச்சினை தீர்வே அமைதிக்கான அச்சாரம்

இஸ்லாமாபாத், ஜன. 31

இந்தியத் துணைக் கண்டத்தில் அமைதி நிலவ, காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியது மிகவும் அவசியம் என பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் அய்ஸாஸ் அகமது சௌத்ரி தெரிவித்துள்ளார்.

தலைநகர் இஸ்லாமாபாத்தில், ஐ.நா. பாதுகாப்புக் குழு நிரந்தர உறுப்பு நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளின் தூதர்களிடையே இது பற்றி அவர் தெரிவிக்கையில்;

காஷ்மீரில் சுய அதிகாரத்துக்காக நடைபெறும் போராட்டம், வெளிநாடுகளின் தூண்டுதலால் நடைபெறுவதல்ல.

அது அந்தப் பகுதி மக்களது போராட்டம். அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டால்தான் இந்தியத் துணைக்கண்டத்தில் அமைதியும், ஸ்திரத்தன்மையும் நிலவும் என்று அவர் தெரிவித்தார். (ஒ–ரி)

# தலைமுடி தானம் செய்யும் நிகழ்வில் இந்தியப் பெண்கள்

சென்னை, ஜன. 31

இந்தியாவில் மாணவிகள் தலைமுடியைத் தானம் வழங்கும் நிகழ்வு சென்னை பெண்கள் கிறிஸ்தவ கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றுள்ளது. கொடிய நோயான புற்றுநோயால் உருக்குலைந்து தலைமுடியை இழந்து வாடிக் கொண்டிருக்கும் முகம் தெரியாதவர்களுக்காக இளம் பெண்கள் தங்களது நீண்ட தலைமுடியை அர்ப்பணித்து இருக்கிறார்கள். தலைமுடியைக் கொடை கொடுக்கும் உணர்வுபூர்வமான நிகழ்வு அனைவரதும் நெஞ்சை நெகிழ வைத்துள்ளது. இந்த நிகழ்வை கல்லூரியின் மாணவியர் றோட்டரிச் சங்கம் ஏற்பாடு செய்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி றோட்டரிச் சங்கத் தலைவி தெரிவிக்கையில்; புற்று நோயாளிகள் அனுபவிக்கும் வேதனையை வார்த்தைகளால் தெரிவிக்க முடியாது. தலைமுடியை இழந்ததால் அழகு இழந்து காணப்படும் அவர்களுக்கு எம்மால் பண உதவி செய்ய முடியாது. அவர்களுக்கு உதவ எண்ணினோம். அதனால் எமது கூந்தலை அவர்களுக்கு வழங்க முன்வந்தோம். பல வருடங்களாக பராமரித்து வளர்த்து வந்த எமது கூந்தலால் எமக்குக் கிடைத்த அழகையும், [illegible] சந்தோஷமே எமக்கு முழுமான நிறைவைத் தருகிறது என்று தெரிவித்துள்ளார். (ஒ–ரி)



# உலகச் செய்திகள்



தாய்லாந்தின் பாங்கொக்சியாங் மே சுற்றுலா பூங்காவில் நிர்வாகிகள் யானைகள் மூலம் மனிதர்களுக்கு மசாஜ் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். 'மசாஜ் செய்வதற்கு யானை ஒன்றுக்குத் தீவிர பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. மூவாயிரம் கிலோ நிறையுள்ள அந்த யானை, சுற்றுலாப் பயணிகளின் முதுகை மெதுவாக மிதித்து கவனமாக 'மசாஜ் கொடுக்கும் வகையில் யானைக்கு பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

## அமெ. – கியூபா உறவில் மேலும் முன்னேற்றம்

### நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஹவானாவுக்கு பயணம்

வொஷிங்டன், ஜன. 31

அமெரிக்கா, கியூபா ஆகிய இரு நாடுகளின் தலைநகரங்களிலும் தூதரகங்களைத் திறப்பது குறித்த பேச்சுக்காக, அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவொன்று ஹவானாவுக்கு சென்றிருக்கிறது.

அமெரிக்காவுடனான உறவு, இயல்பு நிலைக்குத் திரும்ப வேண்டுமானால், குவாண்டனாமோ இராணுவ முகாம் அமைந்துள்ள இடத்தை தங்களிடம் திரும்பக் கொடுக்க வேண்டும் எனக் கியூபா கோரியுள்ளது. கியூபாவைத் தீவிரவாதப் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்றும் வர்த்தகத் தடைகளை நீக்க வேண்டும் என்றும் கியூப அதிபர் ரவுல் காஸ்ட்ரோ தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கும் கியூபாவுக்கும் இடையிலானஉறவுமேம்பட்டி



ருப்பதாகக் கடந்த மாதம் இரு நாடுகளும் அறிவித்திருந்தன. 1961இல் நிறுத்தப்பட்ட தூதரக உறவுகளை மீண்டும் புதுப்பிக்கப்போவதாகவும் இருநாடுகளும் தெரிவித்திருந்தன.

இது தொடர்பாக கடந்த வாரம் உயர்மட்ட அளவில் பேச்சு நடைபெற்றுள்ளது. இரு நாடுகளும் தமது உறவுகளைப் புதுப்பிப்பதற்கு முன்னாள் கியூப அதிபர் பிடல் காஸ்ட்ரோவும், தமது ஒப்புதலைத் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க விஞ்ஞானிக்கு ஐந்தாண்டு கால சிறைவாசம்



வொஷிங்டன், ஜன. 31

அணுஆயுதத் தயாரிப்புத் தொடர்பான இரகசியத்தை வெனிசுலா நாட்டுக்கு அளிக்க முயன்ற குற்றத்துக்காக விஞ்ஞானி யொருவருக்கு அமெரிக்காவில் ஐந்தாண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பெத்ரோ லெனார்டோ மாஸ் கெரோனி என்ற அந்த விஞ்ஞானி, 2013ஆம் ஆண்டில் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டிருந்தார்.

.கடந்த ஒரு வருடமாக மாஸ் கெரோனியிடம் விசாரணை நடத்தப்பட்டு அதன் பின்னரே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அடுத்த பத்து ஆண்டுகளில் வெனிசுலா அணு ஆயுதம் தயாரிப்பதற்குத் தன்னால் உதவ முடியும் என வெனிசுலா நாட்டு அதிகாரியாக நடித்த எகிப்திய அதிகாரியிடம் மாஸ்கெரோனி கூறியதாக நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட ஆவணங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்ட நிலையில் அவருக்குஐந்தாண்டுகள்காலசிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

## எகிப்தில் தீவிரவாதிகள் தாக்குதல்: இராணுவ வீரர்கள் 26 பேர் சாவு

கெய்ரோ, ஜன. 31

எகிப்தில் சீனாய் தீபகற்பத்தில் அன்சர் பெய்ட் அல்மக்திஸ் தீவிரவாதிகள் நேற்று வெடிகுண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டனர். வடக்கு சீனாய் தலைநகர் எஸ்அரிஷ் நகரில் இராணுவத் தளம் அருகே கார்க் குண்டுத் தாக்குதலும், கையெறி குண்டுத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டன.

அதில் இராணுவத்தளமும்,உணவு விடுதியும் அழிக்கப்பட்டன. மேலும் பல சோதனைச் சாவடிகள் சேதம் அடைந்தன. இராணுவ வீரர்கள் பலர் உயிரிழந்தனர். காஸா எல்லையில் உள்ளரயா, ஷேக்ஷுவாயிட் ஆகிய நகரங்களிலும் தாக்குதல்கள் மேற்கொள் ளப்பட்டன. ரபா சோதனைச் சாவடியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இராணுவ மேஜர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இந்தத் தாக்குதல்களில் 26 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர். 30 பேர் காயம் அடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தீவிரவாதி சமந்தாவை கைது செய்ய தீவிர முயற்சி

லண்டன், ஜன. 31

பிரிட்டனில் பல தாக்குதல்களை மேற்கொண்டு தலை மறைவாக இருக்கும் அல்கு வைதா பெண் தீவிரவாதியான சமந்தாவை விரைவில் கைது செய்வதற்கான நடவடிக்கைகளைத் தாம் தீவிரப்படுத்தியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சமந்தாவைக் கைது செய்ய பொலிஸார் தீவிரமாக முயன்று வரும் நிலையில் அல்–ஷபாப் தீவிரவாத இயக்கத்தின் முன்னாள் தலைவர் ஹெர்சி, சமந்தாவைக் கண்டுபிடிக்க உதவ முன்வந்துள்ளதாகப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹெர்சி அனுப்பியுள்ள தகவலின்படி கென்யா– சோமாலியா எல்லையில் உள்ள றஸ் கியம்போனி என்ற தீவிரவாத அமைப்பின் மனித வெடிகுண்டுப் படையினரின் பாதுகாப்பில் சமந்தா தற்போது உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும், அல்குவைதாவுடன் தொடர்புடைய ஒரு தீவிரவாத



அமைப்பில்சமந்தா முக்கிய தலைவராக இருக்கிறார் என்றும் தீவிரவாதிகளைத் தாக்குதலுக்கு அனுப்புவது, கென்யாவில் பல தாக்குதல்களை நடத்திவரும் இயக்கத்துக்கு உதவுவது என பல குற்றங்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மனித வெடிகுண்டுப் படையினரின் பாதுகாப்பிலுள்ள சமந்தாவைக்கைதுசெய்யதகுந்தமுன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சூடானில் 3000 குழந்தை இராணுவ வீரர்களை மீட்டது ஐ.நா.

நைரோபி, ஜன 31

சூடானின் தெற்கு பகுதியில் பல ஆண்டுகளாக உள்நாட்டுப்போர் நடைபெற்று வந்தது. அதில் 10 லட்சம் பேர் கொல்லப்பட்டனர். அதனையடுத்து மூவாயிரம் சிறுவர்கள் இராணுவப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டனர். அந்த மூவாயிரம் சிறுவயது இராணுவ வீரர்களும் ஐக்கிய நாடுகள் சபையினரால் மீட்கப்பட்டுள்ளனர். அவர்கள் 11வயது முதல் 17 வயதுக்குட்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு போரின்போது தீவிரவாதிகள் மற்றும் இராணுவத்தின் தாக்குதலை தடுத்து நிறுத்த சிறுவர்களும் துப்பாக்கி ஏந்தி இராணுவ வீரர்களாக போராட வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டனர். அவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அதனைத் தொடர்ந்து 2011 ஆம் ஆண்டு தெற்கு சூடான் என்ற புதிய நாடு உருவானது. இந்த நிலையிலேயே போரில் ஈடுபட்ட குழந்தை இராணுவ வீரர்களை ஐ.நா. சபை இராணுவப் பயிற்சியில் இருந்து மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## காணாமற்போன மலேசிய விமானம் விபத்துக்குள்ளானதாக அதிகாரபூர்வ அறிவிப்பு:

கோலாலம்பூர், ஜன. 31

காணாமற் போனதாகக் கருதப்பட்ட மலேசிய விமானம் விபத்துக்குள்ளானதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் 8ஆம் திகதி கோலாலம்பூரில் இருந்து 239 பயணிகளுடன் பீஜிங் நோக்கிப் பயணித்த எம்.எச்



370 விமானம் திடீரென நடுவானில் காணாமல் போனது.

அதனையடுத்து இந்தியப் பெருங்கடலில் விழுந்ததாக மலேசிய அரசு கூறியதன் பேரில் அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் பூளூ பென்நீர்மூழ்கிக்கப்பலின்மூலம் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன.

ஆனால் இந்தியப் பெருங்கடலில் விழுந்தது விமானமொன்றின் பாகங்கள் அல்ல எனப் பின்னர் உறுதி செய்யப்பட்டிருந்தது. இந்தநிலையில் விமானத்தின் தேடுதல்பணி கைவிடப்பட்டதுடன், அது விபத்துக்குள்ளானதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த விமானத்தில் பயணம் செய்த 239 பேரும் உயிரிழந்ததாக அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லாட்சிக்கான செயற்பாடே இன்றைய காலத்தின் தேவை

மூன்று மாத கால ஆட்சியை நடத்துவதற்கு முன்வந்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசின் இடைக்கால வரவு - செலவுத் திட்டம், நிதி அமைச்சர் ரவி கருணநாயக்காவினால் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது.

முன்னர் பதவியில் இருந்த மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் தோல்வியை அடுத்து, புதிய அரசு சார்பில் அறிவிக்கப்பட்டதற்கு இணங்க, இடைக்கால வரவு-செலவுத்திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

எமது மக்களுக்கு ஆகக் கூடுதலான நிவாரணம் வழங்கும் சந்தர்ப்பமாக இது அமையும் - என்று நிதி அமைச்சர் தமது உரையில் சுட்டிக் காட்டினார்.

இருப்பவனிடம் இருந்து பிடுங்கி எடுத்து, இல்லாதவனுக்கு வழங்கும் உத்தியைத் தாம் கைக்கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிய வரவு -செலவுத் திட்டத்தின் ஊடாக மக்களின் அன்றாடப் பாவனைப் பொருள்கள் பதின்மூன்றின் விலைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன.

அத்தோடு, அரச அலுவலர்கள், ஓய்வூதியர் கொடுப்பனவுகள் நியாயமான வகையில் உயர்த்தப்பட்டுள்ளன. அதேவேளை, தனியார் துறைகளைச் சார்ந்த பணியாளர்களின் கொடுப்பனவுகளை அதிகரிக்கவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

திருமண மற்றும் பதிவுக் கட்டணம் ஆயிரம் ரூபாவாகக் குறைக்கப்பட்டமை, தொலைபேசிகளின் மீள்நிரப்பு அட்டைக்கான வரிக்குறைப்பு, மூத்த பிரஜைகளுக்கான பஸ் கட்டணம் ஐம்பது சத வீதத்தால் குறைப்பு, முன்னாள் அரச ஊழியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவில் அதிகரிப்பு, மாணவர்களுக்கான மகாபொல புலமைப் பரிசில் கொடுப்பனவு அதிகரிப்பு என்பனவும் மக்கள் நலன் நாடிய வகை சார்ந்து உள்ளன.

முற்பணமின்றி வங்கிக் கணக்கு ஆரம்பிக்க வசதி, விவசாயிகளினால் வர்த்தக வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய கடனில் ஐம்பது சத வீதம் தள்ளுபடி, மீனவர்களுக்கு ஆயுள் காப்புறுதி, சிறியரக உழவு இயந்திரங்களைக் குறைந்த விலையில் பெற்றுக் கொடுப்பது சம்பந்தமான யோசனைகளும் நிதி அமைச்சரால் முன்னோட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கோதுமை மா , பால் மா, சீனி, சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய், ரின்மீன் விலை குறைப்பு, நெல், உருளைக்கிழங்குக்கு உத்தரவாத விலைகள், வாகனங்கள் இறக்குமதி வரி குறைப்பு என்பன வரவு -செலவுத் திட்டத்தின் மக்கள் நலன் நாடிய அறிவிப்புகளாக வெளிவந்துள்ளன.

இது குறித்து மத்தியதர மக்களும், அடிமட்ட வகையினரும் ஓரளவு திருப்தி கொள்வாரெனினும், இந்தச் சலுகைகளை ஈடேற்றுவதற்கு, அதாவது செயற்படுத்துவதற்குத் தேவையான நிதி மூலத்தை புதிய அரசு எங்கிருந்து பெறப் போகின்றது என்ற பென்னம் பெரிய கேள்வி, உயர்ந்து எழுந்து நிற்பதனை மறந்து விட இயலாது.

குறைந்த வருமானம் உள்ள மக்கள் தரப்புகளுக்கும், கடின உழைப்பை நல்கியும் அன்றாட அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற இயலாது தள்ளாடும் தரப்பினருக்கும் பயன் நல்கும் வகையில் புதிய அரசின் வரவு - செலவுத் திட்டம் அமைந்துள்ளமை வரவேற்கத்தக்கதே.

ஆயினும், நாட்டின் பொருளாதார நிலையையும், ஒட்டு மொத்த மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த அரசு புதிதாக எந்த வழி நடக்கப் போகிறது என்ற பென்னம் பெரிய வினா எழுந்து நிற்கிறது.

நாட்டின் நல்லாட்சி முகிழ்ந்து எழுவதற்கு, தான் ஆற்ற வேண்டிய பணிகளை புதிய அரசு திட்டமிட்டு லஞ்சம், ஊழல், முறைகேடுகள் இடம் பெறாவண்ணம் மக்கள் நலன்நாடிச் செயற்பட வேண்டும். 'நன்றே செய்யின் அதனை இன்றே செய்மின்' என்ற நிலையை உருவாக்குவதற்கு புதிய அரசு நடவடிக்கை எடுத்தால் மட்டுமே அது சாத்தியமாகும்.



# இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா செய்யப் போவதென்ன?

சேரலாதன்

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வாக 13 ஆவது அரசமைப்புத் திருத்தமே இறுதியானதென்றும், அதற்கு அப்பால் செல்லக்கூடாதெனவும் இந்தியா இலங்கையிடம் அறுதியிட்டுக் கூறியிருப்பதாகத் தெரிகின்றது. இந்த 13ஆவது அரசமைப்புத் திருத்தம் என்பது பிரச்சினையுடன் தொடர்புடைய இலங்கைத்தமிழர்களின் விருப்பமின்றி இந்தியாவும், இலங்கையும் செய்து கொண்ட தன்னிச்சையான ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவானதென்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

வடமராட்சியில் நிலைகொண்டிருந்த இலங்கை இராணுவத்தின் மீது புலிகள் நடத்திய கரும்புலித் தாக்குதலைக் கண்டு நிலைகுலைந்துபோன



அப்போதைய இலங்கை ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன, வேறுவழியின்றி இந்தியாவின் உதவியை நாடியதையடுத்து, இந்தியப் படைகள் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் நிலைகொண்டன. அமைதிப்படை என்ற நாமம் வேறு இந்தியப் படைகளுக்குச் சூட்டப்பட்டது. தொடர்ந்து இடம்பெற்ற போர் அழிவுகளால் நொந்துபோய் இருந்த இலங்கைத் தமிழர்கள் அன்றைய நிலையில் இந்தியப் படைகளின் வருகையை வரவேற்றது உண்மைதான். ஆனால் விடுதலைப்புலிகள் இதனைச் சிறிதும் விரும்பவில்லை. தாம் உலவிய மண்ணில் வஞ்சக நோக்குடன் வந்திறங்கிய இந்தியப் படையினரின் பாதங்கள் பதிவதை அவர்கள் அறவே வெறுத்தார்கள்.

கடலில் வைத்துக் கைது செய்யப்பட்ட குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட விடுதலைப்புலிகளின் தளபதிகள் இலங்கைப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டதில் இந்தியாவின் பங்கு இல்லாமலில்லை. கைது செய்யப்பட்டு இலங்கை இராணுவத்தின் காவலில் வைக்கப்பட்டவர்கள் பின்னர் சாவைத் தழுவிக் கொண்டமை புலிகளைச் சீற்றமுறச் செய்தது. இதன் விளைவாகவே புலிகளுக்கும் இந்தியப் படைகளுக்குமிடையே மோதல்கள் ஆரம்பித்தன. இரண்டு வருடங்கள் இங்கு தங்கியிருந்த இந்தியப்

> கடலில் வைத்துக் கைது செய்யப்பட்ட குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட விடுதலைப்புலிகளின் தளபதிகள் இலங்கைப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டதில் இந்தியாவின் பங்கு இல்லாமலில்லை.

படைகள் அதிகளவு இழப்புகளைச் சந்தித்து அவமானத்துடன் நாடு திரும்பின. தாம் விதித்த நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படியாத விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும், புலிகளையும் 48 மணி நேரத்தில் துடைத்தழிக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே அப்போதைய இந்தியப் பிரதமரான ராஜீவ் காந்தி இலங்கையுடன் புலிகள் விரும்பாத ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார்.


இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு ஆகிய இரண்டு மாகாணங்களும் ஒரு நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் பிரிக்கப்பட்டன. மேலும் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் உருவான மாகாண சபைகளுக்கு அவற்றுக்குரிய அதிகாரங்களும் வழங்கப்படவில்லை. இதன் காரணமாகவே தமிழர்களின் தாயகப் பிரதேசங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள மாகாண சபைகள் செயலற்ற நிலையில் காணப்படுகின்றன.

இந்திய மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சுயாட்சி அதிகாரங்களாவது வழங்கப்பட்டால் இலங்கைத் தமிழர்கள் ஓரளவாவது திருப்தியடைந்து கொள்வார்கள். ஆனால் நாட்டின் அனைத்து மாகாண சபைகளுக்கும் இவற்றை வழங்குவதில் சிக்கல்கள் ஏற்படலாமென அஞ்சப்படுகின்றது.

இந்தியா 13ஆவது திருத்தம் தொடர்பாகத் திரும்பத் திரும்பக் கூறி வருவதை விடுத்து இலங்கைத் தமிழர்களின் விடயத்தில் ஆக்கபூர்வமானதும் சாத்தியமானதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் இலங்கைத் தமிழர்களின் அல்லல்களுக்கான பழியைத் தொடர்ந்து சுமக்கவேண்டிய நிலைதான் ஏற்படப் போகின்றது.

கட்டுரை

■ ராஜராஜன்



# இலங்கையின் ஆட்சி மாற்றத்தால் சங்கடங்களை எதிர்நோக்கும் சீனா

தெற்காசிய நாடுகளில் திடீரென இடம்பெற்று வரும் மாற்றங்கள் பெரிய வல்லரசு நாடான சீனாவுக்கு ஏற்புடையதாக இருக்காது. தனது ஜென்ம எதிரியான இந்தியாவைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் தெற்காசியப் பிராந்தியத்தில் தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்வதே சரியான உத்தியென்பதைப் புரிந்துகொண்ட சீனா, அதற்கான காய் நகர்த்தல்களை மிகவும் சாதுரியமான முறையில் மேற்கொண்டு வந்துள்ளது. இதற்காகப் பெருந்தொகை நிதியைச் செலவிடுவதற்கும் அந்த நாடு தயங்கவில்லை. சீனா இலங்கையில் வலுவாகக் காலூன்றியதும், அதிகூடிய நிதியைச் செலவழித்துப் பெரிய திட்டங்களை நிறைவேற்றி வைத்ததும், எவருமே எதிர்பார்க்காத வகையில் பெருந்தொகைப் பணத்தைக் கடனாக வழங்கியதும் இலங்கை மீது கொண்டிருந்த கருணையினால் அல்லவென்பதை எவரும் புரிந்துகொள்வார்கள்.

இந்தியாவின் அண்டை நாடு இலங்கை என்பதால், அங்கு காலூன்றுவதன் மூலமாக இந்தியாவை நலிவுபடுத்தி விடலாம் என்பதே சீனாவின் நீண்டநாள் திட்டமாகக் காணப்பட்டது.

சீனாவின் இந்த நோக்கத்துக்கு ஏற்ற விதத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணங்கிப் போனதால், சீனா மகிழ்ச்சியில் ஆழ்ந்து தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியது. மேலும் இவ்வளவு விரைவில் இலங்கை, ஆட்சி மாற்றமொன்றை எதிர்கொள்ளுமென சீனா எதிர்பார்க்கவுமில்லை.

ஆனால் மைத்திரிபால சிறிசேன என்ற அந்த எளிய, அமைதியான மனிதர் அரசியல் மற்றும் ஆட்சி மாற்றமொன்றை இலங்கையில் ஏற்படுத்திக் காட்டிவிட்டார். மேலும் சீனா இலங்கையில் மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதெனவும், அதுவரை சீன அரசினால் மேற்கொள்ளப்படவிருக்கும் ஏனைய திட்டங்களை நிறுத்தி வைப்பதெனவும் புதிய அரசு தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கைகள் சீன அரசுக்கு ஆத்திரமூட்டவே செய்யும். ஏனென்றால் மஹிந்த ஆட்சியில் தட்டிக் கேட்பதற்கு எவருமின்றி சுதந்திரமாகச் செயற்பட்ட சீனாவுக்கு இது வொரு பின்னடைவு என்று தான் கூறவேண்டும்.


மேலும் அமெரிக்க அதிபர் என்ற வகையில் வரலாற்றில் முதல் தடவையாக இந்தியாவின் இந்த ஆண்டுக்கான குடியரசு தின நிகழ்வுகளில் பங்குபற்றிய அதிபர் பராக் ஒபாமா அமெரிக்க – இந்திய உறவில் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறந்து வைத்துள்ளார். இராஜதந்திர மரபுகளையெல்லாம் தகர்த்தெறிந்து விட்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விமான நிலையத்துக்குச் சென்று அமெரிக்க அதிபரை வரவேற்றுள்ளமை இரு நாடுகளின் உறவுகள் பல மடைவதற்கான ஒரு சிறந்த சமிக்ஞை என்றே கொள்ளவேண்டும்.

மேலும் நீண்ட காலமாக அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்குமிடையே இழுபறி நிலையில் இருந்து வந்த அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பான பிரச்சினையும் தீர்ந்து விடுமென்பதற்கான அறிகுறியும் தென்படுவதால் இந்த இரு நாடுகளும் இணைந்து செயற்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

மேலும் இந்திய–இலங்கை உறவுகள் இறுக்கமடைவதற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன. இதற்குச் சிகரம் வைத்தாற் போன்று இந்தியா சென்ற இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இனிமேல் இலங்கை அரசு இந்தியாவுக்கே முதலிடம் வழங்கிச் செயற்படுமென இந்தியத் தலை நகரில் வைத்துக் கூறியுள்ளார்.

தெற்காசிய நாடுகளைப் பொறுத்த வரையில் இந்தியாவுக்கு அடுத்த நிலையிலுள்ள பாகிஸ்தான், எதிரிக்கு எதிரி நண்பன் என்ற வகையில் சீனாவுடன் ஒட்டி உறவாடி வருகின்றது. ஏனைய நாடுகளைப் பொறுத்தவரையில் மதில் மேல் பூனை நிலை தான்.

இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்போது இலங்கையில் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் சீனாவுக்குச் சங்கடத்தைக் கொடுக்கும் ஒன்றாகவே அமைந்து விட்டது.




“

இராஜதந்திர மரபுகளையெல்லாம் தகர்த்தெறிந்து விட்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விமான நிலையத்துக்குச் சென்று அமெரிக்க அதிபரை வரவேற்றுள்ளமை இரு நாடுகளின் உறவுகள் பல மடைவதற்கான ஒரு சிறந்த சமிக்ஞை

# கருத்து

## வாசகர் திருமுகம்



### ஆடியபாதத்திற்குமா இந்த நிலை

கொக்குவில் சந்தியிலிருந்து மேற்குப் பக்கமாகச் செல்லும் வீதிக்கு "ஆடியபாதம் வீதி" என்று எமது மூதாதையர் பெயர் சூட்டியமை எல்லாம் வல்ல நடராஜப் பெருமானைச் சதா எண்ணுவதற்கேயாம்.

அதை நாம் எண்ணியவாறே நிதமும் பயணிக்க வேண்டிய பயனைப் பெற்றுள்ளோம். பெரும்பாலான வீதிகளுக்கு விமோசனம் கிடைத்துள்ள நிலையில், இந்த வீதிக்கு ஏனோ இன்னும் விடிவுகாலம் பிறக்கவில்லை. பிரதானமான நகரங்களையும், பேறுதரும் வீதிகளையும் பிரபலமான பாடசாலைகளையும் உயர் கல்வி நிறுவனங்களையும் முக்கியமான சந்தைகளையும் ஆலயங்களையும் தொட்டு நிற்கும் இந்த வீதி மிகவும் நொந்து போயுள்ளது.

மனித வாழ்வைச் சிதைக்கும் இந்த வீதி, விமோசனம் பெறச் சம்பந்தப்பட்டவர்கள் ஆவன புரியும் வண்ணம் பணிவோடு வேண்டப்படுகிறது.

*கே.எஸ்.சிவஞானராஜா,*
*கொக்குவில்.*

### தமிழர்களுக்கு விடிவு ஏற்படுமா?

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலிலே நான் உட்பட அதிகளவான தமிழ் மக்கள் அன்னப்பறவைச் சின்னத்துக்கு வாக்களித்து ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன அவர்களைத் தெரிவு செய்தோம். கடந்த ஆட்சியிலே மக்களுக்கு இருந்த துன்பங்கள், ஊழல்கள், கஷ்டங்கள் இருக்கக் கூடாது என்பதற்காகவும் எதிர்வரும் காலத்தில் தமிழ் மக்களை புதிய ஜனாதிபதி அரவணைத்து செல்வார் என்ற நம்பிக்கையுடனும் தமிழ் மக்கள் அவருக்கு வாக்களித்தார்கள். கடந்த ஆட்சியில் மன்னார் மாவட்டத் தமிழ் மக்கள் எதிர்கொண்ட கஷ்டங்கள் புறக்கணிப்புகள் என்பன எதிர்காலத்தில் களையப்பட வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் முன்னாள் அமைச்சரே! இன்னாள் அமைச்சராகி இருப்பதால் பழைய நிலைமை மீண்டும் இங்கு இடம்பெறாமல் நீதியான, நேர்மையான ஆட்சி நடைபெறவேண்டும் என்றே மக்கள் விரும்புகின்றனர். தமிழ் மக்களின் மேம்பாடும் வளர்ச்சியும் கருதித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எதிர்காலத்தில் அமைச்சர் பதவிகளைப் பெற்று தமிழ் மக்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதோடு "தமிழ் மக்களை வாக்களிப்பதற்கு மட்டும் பாவிக்காமல் வாழ்வதற்கும் வழிகாட்ட வேண்டும்" என்பதே அனைவரின் விருப்பமும் ஆகும். நிறைவேற்றுவார்களா?

*த.சிவேந்தி.*

### மன்னார் பஸ் டிப்போவின் சிறந்த சேவை

மன்னார் மாவட்ட இ.போ.ச. சேவை சிறப்பாகச் செயற்படுகின்றது. 1990ஆம் ஆண்டு சகல பஸ் டிப்போக்களும் மக்கள் மயப்படுத்தப்பட்ட போதிலும் வடபிராந்திய நிர்வாகத்தின் கீழ் இயங்கிய இந்தச் சாலை மக்கள் மயமாக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 14.1.2015இல் இடம்பெற்ற பரிசுத்த பாப்பரசரின் வருகையின் போது மக்களுக்கு சிறந்த சேவையை ஆற்றிய மன்னார் டிப்போ முகாமையாளர் மற்றும் ஊழியர்களுக்கு மக்கள் நன்றி கூறுகின்றனர். இனி வரும் காலங்களிலும் இவ்வாறு நடைபெறும் என நம்புகின்றனர்.

*தொ.கிறிஸ்தியான்.*

### கேலிச் சித்திரம்




## சில்லறைகளுக்கு எங்கே போவது?

ஜனாதிபதித் தேர்தலின் போது வழங்கிய வாக்குறுதிக்கு அமைய, மைத்திரி அரசு தமது வரவு – செலவுத் திட்டத்தில் விலைக் குறைப்புக்களை மேற்கொண்டுள்ளது. மக்களின் எதிர்பார்ப்புக்களை முழுமையாகப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் விலைக் குறைப்புச் செய்யப்படவில்லை. இருப்பினும், வழமையாக விலை அதிகரிப்புக்களை மாத்திரம் தாங்கி வரும் வரவு – செலவுத் திட்டங்கள் ஏதோ ஒரு வகையில் விலைக் குறைப்புக்களையும் தாங்கி வந்துள்ளது என்று சந்தோசப்பட முடியும்.

புதிய அரசு பதவிக்கு வந்த சில நாள்களிலேயே, எரிபொருள்களின் விலைகளைப் பெரியளவில் குறைத்திருந்தது.

இதனால் வரவு – செலவுத் திட்டத்தில் அத்தியாவசிய பொருள்களின் விலை, குறிப்பாக மா, சீனி, பால்மா, அரிசி போன்றவற்றின் விலைகளைப் பெருமளவு குறைக்கும் என்று எதிர்பார்ப்பு ஏற்பட்டிருந்தது. ஆனால் மைத்திரி அரசு அதில் கொஞ்சம் கஞ்சத்தனத்தைக் காட்டி விட்டது.

இருப்பவனிடமிருந்து இல்லாதவனுக்கு பிடுங்கிக் கொடுக்கும் வரவு – செலவுத் திட்டமாக இருக்கின்றது. ஆனாலும், வறிய, நடுத்தர வர்க்கத்தினரின் எதிர்பார்ப்பாக இருந்த அத்தியாவசிய பொருள்களின் விலைக் குறைப்பில் கொஞ்சம் பெருந்தன்மையாக நடந்திருக்கலாம்.

ஆனாலும் இந்த வரவு – செலவுத் திட்டத்தால் சில்லறை வர்த்தகர்களுக்கு சில்லறையால் கொஞ்சம் யோகம் அடிக்கத்தான் போகின்றது. மஹிந்த அரசின் காலத்தில், விலைகளின் எக்கச்சக்க அதிகரிப்பினால், சில்லறைகள் கோயில் உண்டியலுக்கு மாத்திரமே பயன்பட்டது. பொக்கெட்களை தாள்கள்தான் நிரப்பியிருந்தன.

மைத்திரி அரசின் சில்லறை விலை குறைப்பு, மீண்டும் சில்லறைகளைத் தூசு தட்ட வைத்திருக்கின்றது. பஸ் கட்டணமாகட்டும், மண்ணெண்ணெய் விலையாகட்டும், பாண் விலையாகட்டும் ஏன் மா விலை கூட எல்லோரும் மறந்து போன 50 சதத்தினால் குறைப்பைக் கொண்டுள்ளது.

சில்லறை வியாபாரிகள் இந்தச் சில்லறைகளால் நன்மையடையத்தான் போகின்றார்கள். மீதிப் பணமாக சில்லறைகள் இனி வரப் போவதில்லை. ஒரு ரூபா டொபிகளும், ஐம்பது சத டொபிகளுமே மீதியாக வரப் போகின்றன. பஸ்ஸில் மிச்சக் காசுக்கான சண்டை இன்னும் கொஞ்சம் வீரியமாகத்தான் நடக்கப் போகின்றது.

ஏற்கனவே சில்லறைத் தட்டுப்பாடுகள் நிலவி வரும் நிலையில், இவ்வாறு விலைக் குறைப்புச் செய்துள்ளமையினால் நேரடியான நன்மைகள் கொஞ்சம் குறைவாகத்தான் கிடைக்கப் போகின்றன. மக்கள் எக்கச்சக்க எதிர்பார்ப்பில் இருக்கின்றனர். ஏப்ரல் மாதம் வேறு நாடாளுமன்றத் தேர்தல் வரப் போகின்றது. ஏதோ பார்த்து, இன்னும் கொஞ்சம் குறைப்புக்களைச் செய்தால் நன்றாக இருக்கும். இல்லாவிட்டால் சில்லறைச் சண்டைகள் தான் இனி நடக்கும்.

பத்தி எழுத்து

# சோதிடம்




## கூட்டெண் பலன்கள் 9-1

செவ்வாயுடன் சூரியன் சேர்ந்த ஆதிக்கப்பலன் கொண்ட இவர்கள் உயரமாக ஒல்லியாக இருப்பர். சிவப்பு நிறமிருக்கும். கம்பீரமான தோற்றம் இருக்கும். உறுதியான உடலும், மந்த குரலும் இருக்கும்.
போர்க்குணமுள்ளவர்கள். அரசனைப்போன்று பிறர் மீது ஆளுகையும் பெருந்தன்மையும் உள்ளவர்கள். நல்ல தைரியசாலி. கைச்சண்டை, வாய்ச்சண்டை எதுவாயிருந்தாலும் தயார் என்று முன்னே நிற்பர். கோபம் கொண்டால் கண் மண் தெரியாமல் நடந்து கொள்வர்.
அனுபவமும் அறிவும் நிதானமாக இருக்கும் போதே இவர்களிடம் வெளிப்படும். எவ்வளவு வலியவராயினும் வம்பு செய்தால் எதிர்த்து நிற்பர். தமது சொந்தத் தீர்மானப்படியே நடப்பர். பிறர் என்ன சொன்னாலும் கேட்கமாட்டார்கள்.
பெற்றோரோடு இருக்கும் போதே சகோதரிகளிடம் சச்சரவுக்குச் செல்வர். காரணமின்றிச் சிலர் இவர்களை வெறுப்பர். குடும்பத்தில் சண்டை, குழப்பங்கள் ஏற்படும். பிறரைத் துன்புறுத்தி அதில் இன்பம் காணும் தன்மை கொண்டவர்கள்.
உறுதியான உடலும் உள்ளமும் இவர்களை ஊக்கத்துடன் உழைக்கச் செய்யும். பொலிஸ், தீயணைப்புத்துறை, மருத்துவமனை, இராணுவம் போன்றவை இவர்களுக்குப் பணிபுரிய ஏற்ற துறைகள். சட்டத்தரணி, பேராசிரியர், பதவிகளும் பொருத்தமானவை. உயர் இரத்த அழுத்தம், வயிற்று வலி, அம்மை, அக்கி, மஞ்சள் காமாலை, கண் நோய் முதலியவை ஏற்படும். எலும்பு தொடர்பான நோய், மூலநோய் முதலிய நோய்கள் பாதிக்கலாம்.

## கூட்டெண் பலன்கள் 9-2

இந்த எண் கொண்டவர்கள் செவ்வாயுடன் சந்திரன் சேர்ந்த ஆதிக்கப் பலன் கொண்டவர்கள். இவர்கள் சராசரி உயரம் அமையப் பெற்றவர்கள், முடி அடர்ந்து இருக்கும். கண்கள் அகலமாக அழகாக இருக்கும்.
நல்ல பேச்சுத்திறமை, கற்பனை வளம் இருக்கும். எதையும் தர்க்கம் செய்தே ஒப்புக்கொள்வர். தெய்வ பக்தி, இரக்கம் உண்டு. பொய் அதிகமாகச் சொல்லுவார்கள். துணிவு இருக்கும். பயமும் வரும். தம் எண்ணம், கருத்து, பேச்சு, செயல், எல்லாம் சரியே எனப் பிடிவாதம் பிடிப்பர்.
தெய்வ பக்தி இருக்கும். கூடவே மூட நம்பிக்கையும் இருக்கும், தம்மைச் சார்ந்த மதம், மனிதர், மொழி, தத்துவ வழி எனப் பலவற்றிலும், குடும்பத்திலும் பற்று அதிகம் கொண்டவராக இருப்பார்.
பிறந்த குடும்பத்தில் செல்லமாக வளருவர். படிப்பு, அனுபவக் கல்வி இரண்டில் ஒன்று நன்கு அமையும். காதலுணர்வு எழும். ஆனாலும் திருமணம் நடப்பது சிரமம். பொது வாழ்க்கைக்கும் பொது சேவைக்கும் ஆன்மிக வழிச் செல்லவும் இந்த எண் ஏற்றது. இவர்கள் மனம் சக்தி வாய்ந்ததாகையினால் பல தொழில்களும் அத்துபடியாகும். கலைகளில் சிறந்து விளங்குவர்.
ஒளிப்படம் எடுத்தல், எரிபொருள், எண்ணெய், குடிதண்ணீர் சம்பந்தப்பட்ட வியாபாரம், மதுக்கடை நடத்தலாம். எப்போதும் பரபரப்பாக இயங்குவார்கள். விபத்துக்கள் ஏற்படலாம். சிறுநீரகத்தில் கல் உண்டாகும். கட்டிகள் ஏற்படும். நீரிழிவு நோய், மனக் கோளாறு, ஜலதோஷத் தொடர்பான நோய்கள் உண்டாகும்.

## சுயமாகச் சம்பாதியுங்கள்!



வேலைக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து விட்டது. என்றாலும், இல்லத்தரசிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். வீட்டில் கடுமையான வேலைகளைச் செய்துவிட்டு ஓய்வின்றி வாழும் குடும்பப் பெண்களும் இருக்கிறார்கள். வேலைகளைத் திட்டமிட்டுச் செய்துவிட்டு ஓய்வாக வாழும் பெண்களும் இருக்கிறார்கள். இப்போதிருக்கும் பொருளாதார நிலையில், ஒருவரின் வருவாயை வைத்துக்கொண்டு குடும்பத்தை நடத்துவது என்பது சற்றுக் கடினம்தான். இது நடுத்தரக் குடும்பத்திற்கு மட்டுமே பொருந்தும். இதனால், வேலைக்குச் சென்று பணியாற்றும் அளவுக்குப் படிப்பறிவு இல்லாதவர்கள் சம்பாதிக்க முடியாதா? சுயமாகச் சம்பாதித்து தங்களது சுயமரியாதையைக் காப்பாற்ற முடியாதா? என்ற கேள்வி இன்று பெரும்பாலும் பெண்களின் மனதில் எழுந்துள்ளது. இந்தக் கேள்வியை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது தான் மகளிர் சுய உதவிக் குழுக்கள்.
இவை தற்போது பெரும் அளவில் சாதித்துக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும், சுய உதவிக் குழுக்களில் இருக்கும் சில பெண்கள் கடனை வாங்கி அதில் சுய தொழில் செய்கின்றனரா என்பது கேள்விக்குறிதான். இருந்த கடனை அடைத்துவிட்டு, இந்தத் தவணையைச் செலுத்துபவர்களும், அவசியத் தேவைக்கு கடன் வாங்கியவர்களும், இருக்கத்தான் செய்கின்றனர். இது தனிக்கதை. உழைத்துச் சம்பாதிக்க வேண்டும், ஆனால் என்ன செய்வது, எப்படிச் செய்வது என்று தெரியவில்லை, உழைக்கும் ஆற்றலும், தன்னம்பிக்கையும் இருக்கிறது என்றால் கவலை வேண்டாம். உங்களைச் சுற்றியே பல வழிகள் உள்ளன. அவற்றை நீங்கள் அறிந்து கொள்ளாமல் இருந்திருப்பீர்கள். உங்களிடமே பல கலைகள் இருக்கும். அதனை உணராமல் இருந்திருப்பீர்கள். உங்களுக்கு ரொம்ப பிடித்த விஷயம் என்ன, உங்களால் மிக அருமையாக செய்ய முடியும் வேலை என்ன? உங்களுக்கு நன்கு தெரிந்த விடயம் என்ன என்பதை ஆராயுங்கள்.




## விவாகரத்து வேண்டாம்!

ஆண், பெண் இருவரும் சரிசமம் என்று சொல்லிக் கொண்டு அசுர வேக வளர்ச்சியைக் காட்டும் இன்றைய தலைமுறையினரிடம் தங்கள் வாழ்க்கையில் ஏற்படும் எந்த ஒரு சிக்கலுக்கும் சரியான தீர்வு காணும் பொறுமை இல்லை. தற்போதைய காலகட்டத்தில் விவாகரத்து என்பது எளிதாக கிடைத்து விடும் என்ற கருத்து நிலவுகிறது. ஆனால் விவாகரத்துக்குப் பிறகு வாழும் வாழ்க்கை மிகவும் கொடுமையானது. அதைப் பற்றி எவரும் சிந்திப்பதில்லை. கையில் பணம் இருந்தால் எதையும் சாதித்து விடலாம் என்ற மனோபாவத்தில் விவாகரத்து முடிவு எடுக்கப்படுகிறது. ஆனால் அது உண்மையில்லை என்பதை உணரும்போது, வாழ்க்கையே முடிந்து போய் இருக்கும். தவறுகளே செய்யாத மனிதர்கள் இல்லை. அதைத் திருத்திக் கொள்ளும் முயற்சிதான் வாழ்க்கை. திருமணத்துக்கு முன் செய்யும் தவறுகளுக்காக பெற்றோர் பிள்ளைகளை துக்கி எறிவது இல்லை. ஆனால் திருமணத்துக்குப் பிறகு செய்யும் ஒவ்வொரு தவறுக்கும் கணவன், மனைவி இருவரில் யாராவது ஒருவரை தூக்கி எறியும் முடிவுக்கு இன்னொருவர் வந்துவிடுகிறார். திருமணத்துக்கு முன்பு– திருமணத்துக்கு பின்பு என்று ஒருவருடைய வாழ்க்கையை இரண்டாக பிரித்துப் பார்த்த காலம் போய், இப்போது விவாகரத்துக்கு முன்பு– பின்பு என்று பிரித்துப்பார்க்கிறார்கள். அதில் பிந்தைய காலம் அனேகமாக பெண்களுக்கு இருண்ட காலம் ஆகிவிடுகிறது. விவாகரத்தில் அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள்தான்! என்னதான் மனதளவில் அவள் தைரியமான பெண்ணாக இருந்தாலும், அவளுடைய சமூக அந்தஸ்து குறைந்து விடும். அதற்கு
த் தக்கபடி அவள் தன் மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ளாவிட்டால், மனதளவில் உடைந்து போவாள். அப்போது தனக்கு முன்னால் இருக்கும் உலகம் வேறு, தனக்கு பின்னால் இயங்கும் உலகம் வேறு என்பதை உணர்வாள். கணவன்– மனைவி இடையே தகராறு ஏற்பட்டால், அந்த நேரத்தில் பேச்சை குறைத்துக் கொள்ள வேண்டும். தேவையற்ற பேச்சு பிரச்சினையை அதிகமாக்கும். அமைதியாக தெளிவான சிந்தனையோடு, சிக்கல்களை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். விவகாரத்துக்கு முன் நிறைய யோசிக்க வேண்டும். முக்கியமாக அதற்கு பின்னால் வாழப் போகும் வாழ்க்கையைப் பற்றி சிந்திக்க வேண்டும்.



# ‘புலரும் பொழுது’ நூல் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், ஜன. 31.

தி.தவரத்தினம் எழுதிய ‘புலரும் பொழுது’ என்ற கவிதை தொகுப்பு நூல் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் வைத் தீஸ்வராக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

யாழ்.பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர்களான ம.சத்தியகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் வி.அற்புதன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் விக்ரோறியாக் கல்லூரியின் அதிபர் ச.சிவகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-ரி)

## ‘மன ஊர்வலம்’ வெளியீட்டு விழா

அருட்கலாநிதி டேவிற்வின்சன்பற்றிக்(அ.ம.தி) அடிகள் எழுதிய 'மன ஊர்வலம்' உளவியல் நூல் வெளியீட்டு விழா யாழ். அகவொளி குடும்பவள நிலைய மண்டபத்தில் நாளை மாலை 4 மணிக்கு புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட் கலாநிதி மைக்கல் சவுந்தரநாயகம் அடிகள் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக வட மாகாண சபை கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர் இ.ஆனோல்ட், மனநல மருத்துவர் எஸ்.சிவதாஸ் ஆகியோர் கலந்துகொள்வர்.

முதற்பிரதியை யாழ்.இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் சங்கரப்பிள்ளை ரவி பெற்றுக்கொள்ள நயப்புரையை யாழ்.பல்கலைக்கழக மெய்யியல் உளவியல்துறை விரிவுரையாளர் கலாநிதி கே.கஜவிந்தன் நிகழ்த்துவார். (ஒ-135)


## மரண அறிவித்தல்

### திருமதி இரஞ்சிதகமல பாக்கியம் (ரஞ்சி) விக்டர் கனகசுந்தரம்

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் ரொறன்ரோ கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரஞ்சிதகமல பாக்கியம் விக்டர் கனகசுந்தரம் 26.01.2015 திங்கட்கிழமை கனடாவில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி தம்பிமுத்து தம்பதியரின் அருமை மருமகளும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா-அருளம்மா தம்பதியரின் அருமை மருமகளும், காலஞ்சென்ற விக்டர் கனகசுந்தரம் அவர்களின் பாசமிகு மனைவியும், இரஞ்சினி (கனடா), இராஜினி (கனடா), இரஞ்சித்குமார் (ரஞ்சன் - டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜோய் தயானந்தன் (கனடா) அவர்களின் பெரியதாயாரும், பாலேந்திரா (கனடா), சாந்தக்குமார் (கனடா) பவதாரணி (பேபி- டென்மார்க்), கிருஷாந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், திருமதி சுகிர்தம் தயானந்தன் (இளைப்பாறிய ஆசிரியை -ஏழாலை வடக்கு), காலஞ்சென்ற அருள்ராசமலர் (கிச்சி) ஆகியோரின் அருமைச் சகோதரியும், ஏ.தயானந்தனின் (ஏழாலை வடக்கு) அருமை மைத்துனியும், வேணுஷா சதிஸ்குமார் (கனடா), ரஜீவ் (கனடா), சாரா (கனடா), றிசோக் (டென்மார்க்), பிரவீன் (டென்மார்க்), சரானா (டென்மார்க்), சங்கித் (கனடா), மெலாணி (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் றெபேக்கா (கனடா), எமிலி (கனடா) ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க வழிபாடு இன்று (31.01.2015) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். அன்னாரின் வாழ்வுக்கு நன்றி செலுத்தும் வழிபாடு இன்று (31.01.2015) சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அன்னாரின் இல்லமான “ரஞ்சஸ்தான்” ஏழாலை வடக்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை வடக்கு.

தகவல்:
திரு.திருமதி.சுகிர்தம் தயானந்தன்
T.P: 021 221 3831

(56330) (4.3.7)



## மரண அறிவித்தல்

### திருமதி சறோஜினிதேவி (தீஸ் அம்மா) நடராசா

திருகோணமலை, சமாது ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் மாதகல் விபுலானந்தர் வீதி, வாய்க்காலை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான திருமதி சறோஜினிதேவி (தீஸ் அம்மா) நடராசா 26.01.2015 கனடாவில் சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் கதிரவேற்பிள்ளை-சிவபாக்கியம் தம்பதியரின் மகளும், மாதகலைச் சேர்ந்த பொன்னம்பலம் நடராசாவின் (முன்னாள் மின்னியலாளர்-காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்) மனைவியும், புனிதமலர் (கனடா), காலஞ்சென்ற சிவயோகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், செகதீசன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி திணைக்களம், திருகோணமலை), டிலாந்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், துசாந்தியின் (திருகோணமலை) அன்பு மாமியும், விதுசன் (திருமலை), ருசியா (கனடா), விருட்சா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.'

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.02.2015 புதன்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.54, கடல்முகவீதி,
திருகோண்மலை,
தொலைபேசி இலக்கம்
026 22 24319

(56329) (10.7)

தகவல்:
கணவர்- பொ.நடராசா
மகன்- ந.செகதீசன்
மகள்- ந.டிலாந்தி.



## மரண அறிவித்தல்



### திருமதி பொன்னையா மாணிக்கம்

அல்வாய் பொன்மலர்ப்பதியைப் பிறப்பிடமாகவும் கனடா, ரொறன்றோவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா மாணிக்கம் 28.01.2015 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்தார் பொன்னையாவின் அன்பு மனைவியும், மூத்தார் நாகமுத்துவின் மைத்துனியும், அன்னம்மா, காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், செல்லையா, மீனாட்சிஅம்மா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற தங்கவேலாயுதம் மற்றும் தவமலர் (கனடா), தர்மராஜா (கனடா), தர்மநாயகம் (கனடா), தர்மசோதி (கனடா), தர்மஸ்ரீ (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கனகரத் தினம் மற்றும் வரதராஜா (கனடா), கவிதா (கனடா), அனுஷா (கனடா), தவனேஸ்வரன் (மேற்பார்வையாளர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், பொன்ராஜன் -கௌரி, ராஜ்கண்ணன்- அஜிதா, சீத்தாலக்ஸ்மி, சுபாஸ் (ஆசிரியர், கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்)-சாமினா, செந்தில்குமரன்- அஜித்தா (கனடா), செந்தில்ராஜன்-டென்ஷி (கனடா), செந்தில்வேல் -துவாரகா (கனடா), ரகுபதி-தீபா (கனடா), ரஜீவ் (கனடா), சுஜீவ் (கனடா), ரமணன் (கனடா), ராம்ஜி (கனடா), விஷ்ணுயன் (கனடா), ரிஷிகேசன் (கனடா), அனித்தன் (கனடா), தனிஷன் (கனடா), தனிஷியா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரகுநாத், ரவீனா அபிலாஷ், சுபிட்ஷா, ஹரீஷ் (கனடா), ஷாணன் (கனடா), தருணன் (கனடா), மீனாட்சி (கனடா), லஷ்மி (கனடா), ஜெய்தன் (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா ரொறன்றோவில் 02.02.2015 திங்கட் கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொன்மலர்ப்பதி,
மனோகரா, அல்வாய்.

தகவல்:
க.தவனேஸ்வரன் (மருமகன்)
மேற்பார்வையாளர், யாழ்.போதனா வைத்தியசாலை.



## மரண அறிவித்தல்



### சுப்பையா அரியரத்தினம்

Asst. Supplies Manager (Retired)
National Paper co.Ltd Head Office

பிறப்பு: 17.02.1937 இறப்பு: 29.01.2015

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சுப்பையா அரியரத்தினம் 29.01.2015 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - செல்லம்மா தம்பதியரின் முத்த புதல்வரும், காலஞ்சென்ற சரவணமுத்து - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், முரளீஸ்வரியின் (Australia) அன்புத் தந்தையும், இக்னேசியஸ் சின் (Australia) அன்பு மாமனும், சோபிதா (Australia), வைஷாலி (Australia) ஆகியோரின் அன்புத் தாத்தாவும், மகாலிங்கம் (ஆசை) (Retired Technical Staff - Police Mirihana)யின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.01.2015) சனிக்கிழமை முற்பகல் 10.00 தொடக்கம் பிற்பகல் 5.00 மணிவரை பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 01.02.2015 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு தகனக்கிரியைக்காக பொறளை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர் (சி.19458)
2592389, 072 2849828
No 9, மந்திரி Road, Colombo - 05.


## கும்பாபிஷேக விழா

யாழ்ப்பாணம், ஜன. 31

சரவணை நாவலடி ஸ்ரீ ஞான வைரவ சுவாமி திருக்கோயிலில் புதிதாக நிறுவப்பட இருக்கும் ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமானின் நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக விழா, நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.40 மணிமுதல் 10.40 மணி வரையுள்ள மீனலக்ன சுப முகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.40 மணிக்கு ஆரம்பமாகும். அன்றையதினம் ப.ப. ஒரு மணிமுதல் மாலை 6 மணிவரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். (வ-78)

## வவுனியாவில் இன்று கண்ணப்பர் குருபூசை

வவுனியா,ஜன.31

வவுனியா சேக்கிழார் மன்றம் நடத்தும் கண்ணப்பநாயனார் குருபூசை இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வவுனியா வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

சேக்கிழார் மன்றத் தலைவர் க.ஐயம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் – வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் சைவப்புலவர் இ.நித்தியானந்தன் பிரதம விருந்தினராகவும், வவுனியா இந்து சமய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பிரபா செல்வநபன், கலாபூஷணம் வை.செ.தேவராஜா, மக்கள் சேவை மாமணி நா.சேனாதிராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம், வரவேற்புரை என்பனவற்றைத் தொடர்ந்து இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சு, இசை, நடனம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும். கலாபூஷணம் தமிழ்மணி அகளங்கன் “அறிவுப் பூசையும் அன்புப் படையலும்” என்ற தலைப்பில் விசேட சொற்பொழிவு நிகழ்த்துவார். (வ-421)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.31

யாழ்.சர்வதேச மார்க்சிய குழுவின் ‘தேர்தலின் பின்னரான அரசியற் போக்குகள் ஒரு பார்வை’ என்ற தலைப்பிலான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு வை.சந்திரராசா தலைமையில் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் அமைந்துள்ள டி.சி.எம். தனியார் கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

ஆரம்ப உரையை சொ.சிவபாலன் நிகழ்த்துவார். ஆர்வலர்களை கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (வ)

## கொடிகாமம் பிரதேச மருத்துவமனைக்கு மருத்துவ அதிகாரி

கொடிகாமம் (மிருசுவில்) பிரதேச மருத்துவமனைக்கு முதல் முறையாக மருத்துவ அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை காலமும் மத்திய மருந்தகமும், பிரசவ விடுதியும் இயங்கி வந்த போதிலும், உதவி மருத்துவர்களே நீண்ட காலமாகக் கடமையாற்றி வந்துள்ளனர். மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டு வரும் விடுதி களுடன் கூடிய நிர்வாக அலகுக் கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் இருப்பதால் மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கம் விடுத்த வேண்டுகோளை அடுத்து யாழ். போதனா மருத்துவமனையில் கடமையாற்றிய மருத்துவர் எஸ்.அச்சுதன் கொடிகாமம் பிரதேச மருத்துவமனையின் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டு நேற்று முன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (வ-9)

# இலங்கைக்கு வருகை தந்துள்ள சற்குரு போதிநாதவேலன் சுவாமிகள்

மாணிக்க லீலா விநோதன்.

1949ஆம் ஆண்டிலே யாழ். கொழும்புத்துறையிலே இருந்து தமது அடியார்களுக்குஆசிவழங்கிக் கொண்டிருந்த அருள்மிகு யோகர் சுவாமிகள் பக்கம் ஓர் அமெரிக்கப் பக்தர் ஈர்க்கப்பட்டார். யோகசுவாமிகளின் தீவிர பக்தராகமாறியஅந்தஆங்கிலேய இந்து சமய பக்தர், சுவாமிகளின் அருள் ஆசியினாலே சுப்பிரமுனிய சுவாமி எனப் பெயர் மாற்றம் பெற்று இந்து சமயியாக மாறி சிறிது காலத்தின் பின் அமெரிக்கா சென்று "ஹவாய்" என்னும் இடத்திலே சிவன் ஆலயமொன்றை நிறுவி இந்து சமயத்தை அந்தப் பிரதேசத்தில் பரப்பி, அந்தப் பகுதியை ஓர் இந்து ஆலயப் பிரதேச ஆதீனமாக அமைத்து ஆக்கி வைத்தார்.

சுப்பிரமுனிய சுவாமிகள் 1974 ஆம் ஆண்டளவிலே மீண்டும் இலங்கைவந்தபோதுகொழும்பு, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலே அவருக்கு பெருவரவேற்பொன்றை இந்து மக்கள் அளித்தனர். அப்போது இந்துக் கள் பலரும் அவரிடம் ஆசி பெற்றனர். அதில் யானும் ஒருவன்.

சுப்பிரமுனியசுவாமிகள் சமாதி அடைந்த பின்னர் அவரது சிஷ்யரான சற்குருபோதிநாத வேலன் சுவாமிகள் அந்த ஆதீன முதல்வரானார்.

தற்போதுஅவர்இலங்கை வந்துள்ளார். கடந்த 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை, பம்பலப்பிட்டிசரஸ்வதி மண்டபத்தில் அவருக்கு சைவ சமய முறைப்படி பெரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அகில இலங்கை இந்து மாமன்றம், விவேகானந்த சபை, யோகர் சுவாமிகளின் கொழும்புச் சபை உட்பட பல சைவ சமய நிறுவனங்களால் சுவாமி பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கொழும்பு, பொன்னம்பல வாணேஸ்வரர் ஆலய அறங்காவலரும், மீள்குடியேற்ற இந்து சமய விவகார அமைச்சருமான டி.எம். சுவாமிநாதன் சுவாமிகளை வரவேற்று உரையாற்றும் போது; "சுவாமிகளின் வருகை இலங்கைத் தமிழ் மக்கள் மனங்களில் மகிழ்ச்சியைத் தோற்றுவித்துள்ளது. வடக்கு, கிழக்கு, மலையகம் வாழ் தமிழ் இந்து மக்களுக்கு அருள் ஆசி செறிய வழிபிறந் துள்ளது.

சுவாமிகள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்கும் சென்று ஆத்ம போதனை வழங்கி ஆசி நல்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

இந்து மாமன்றம், இந்து வித்தியாவிருத்திச் சங்க செயலாளர் கந்தையா நீலகண்டனும் அங்கு உரையாற்றினார்.

இரத்மலானை இந்துக்கல்லூரி விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் வந்து ஆசி பெற்றார்கள். அடியார்களும் சுவாமியை வணங்கி ஆசிபெற்றனர்.

நானும் எனது பேரன் விகாசனுடன் சென்று சுவாமிகளின் பாதங்களை வணங்கி ஆசி பெற்ற போது எனது பேரனும் அவரது பாதக் கமலங்களை தொட்டுவணங்கியபோதுசுவாமி விபூதி வழங்கி ஆசி கூறியமை மகிழ்ச்சியளித்தது.

> "வடக்கு, கிழக்கு, மலையகம் வாழ் தமிழ் இந்து மக்களுக்கு அருள் ஆசி செறிய வழிபிறந்துள்ளது. சுவாமிகள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்கும் சென்று ஆத்ம போதனை வழங்கி ஆசி நல்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.





# அடுத்த தலைமுறை பனசொனிக் Toughbook, Toughpad வகைகளை சொப்ட்லொஜிக் அறிமுகம் செய்கிறது

சொப்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி.யின் கீழ் இயங்கும் முதன்மையான துணை நிறுவனமாகத் திகழும் சொப்ட்லொஜிக் ரிடைல் (பிரைவேட்) லிமிட்டெட், பனசொனிக் இந்தியா நிறுவனத்துடன் ஒன்றிணைந்து உலகின் முத லாவது விண்டோஸ் 8 நிறுவன – தரமிக்க கடின வேலைக்கான கையடக்க சாதனங்களான பனசொனிக் Toughbook Laptop மற்றும் Toughpad வகைகளை இலங்கைச் சந்தைக்கு அறிமுகப் படுத்தியுள்ளது. அதிக உள்ளார்ந்த ஆற்றல்கள் காணப்படும் இலங்கை சந்தையை மையப்படுத்தியதாக, ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் புத்தாக்கமிக்க தொழில்நுட்ப தீர்வுகளை விருத்தி செய்வதுடன் மடிக் கணினி துறையில் பிரித்துவகைப் படுத்தலையும் மேற்கொள்ளும் பொருட்டு இவ்விரு நிறுவனங்களும் எடுத்து வருகின்ற ஒன்றிணைந்த, தொடர்ச்சியான முன் முயற்சிகளை பின்தொடர்வதாக இந்த அறிமுகம் அமைகின்றது.

பனசொனிக் Toughpad FZ-G1 என்பது உலகின் முதலாவது விண்டோஸ் 8 நிறுவன–தரமிக்க கடின உழைப்புக்குரிய டெப்லட் சாதனமாகும். கடின வேலைகள் புரியும் வெளிக்களப் பணியில் ஈடுபடுபவர்கள், இராணுவம், கட்டட நிர்மாணம், சுகாதாரப் பராமரிப்பு, பொதுப் பாதுகாப்பு, பயன்பாட்டுச் சேவைகள், சில்லறை வணிகம், பராமரிப்பு, விநியோக வழிமுறை உபகரண வழங்கல் மற்றும் காப்புறுதி போன்ற துறைகளைச் சேர்ந்த அதிகமாக நடமாடித்திரியும் ஊழியர்களை இலக்காகக் கொண்டு இது வடிவமைக்கப்பட்டிருக்கின்றது. வழக்கமான டெப்லட் வகைகள் தொழிற்பட மறுக்கும் – நீர்த்துளி விழுதல் மற்றும் அளவுக்கதிகமான வெப்பத்தில் வைக்கப்படுதல் போன்ற நிலைமைகளின் போதும் Toughpad FZ-G1 தொடர்ச் தேர்ச்சியாக இயங்கக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளது. உண்மையிலேயே நீடித்த பாவனை மற்றும் பாதுகாப்பைக் கொண்ட இந்தத் தீர்வு நடமாடும் பணியாளர்களுக்கு மிகப் பொருத்தமானது. மிகவும் பாதுகாப்பளிக்கப்பட்ட தரவு மற்றும் உபகரண முகாமைத்துவ வசதி ஆகிய சிறப்பம்சங்களை இது ஒருங்கே கொண்டிருக்கின்ற அதேவேளை, தங்கு தடையற்ற தொடர்பிணைப்பையும் நிறுவன–தரமிக்க தொழில்நுட்பத்தையும் வழங்குகின்றது.

டெப்லட்கள் மற்றும் கையடக்க கணிப்பொறிச் சாதனங்கள் என்பன உலகளாவிய ரீதியில் நிறுவனம்சார் இயக்கப்பாட்டை முன்கொண்டு செல்லும் முக்கியமான கருவிகளாக இருக்கப் போகின்றன. எந்தவொரு இடத்தில் இருந்தவாறும் எந்தநேரத்திலும் சேவைகளை அணுகக்கூடிய வசதி இந்தப் புதிய சாதனங்களில் இருந்து கிடைக்கப் பெறுவதன் பிரதிபலனாக, செயற்திறன் மற்றும் மேம்பட்ட உற்பத்தித் திறன் ஆகிய அனுகூலங்கள் தமக்கு கிடைக்குமென்று வர்த்தக நிறுவனங்கள் எதிர்பார்க்க முடியும். நம்பகத்தன்மை மற்றும் நீடித்து நிலைத்து நிற்கும் தன்மைஆகியவைதொடர்பிலான எமது பொறியியல்சார் நற்பெயரின் துணையோடு, பனசொனிக் ஆனது, சந்தையில் அதிகரித்துச் செல்லும் மேற்படி வர்த்தகத் தேவையை நிவர்த்தி செய்வதற்காக தன்னை சிறப்பான முறையில் நிலைநிறுத்தியுள்ளது. 2015ஆம் ஆண்டில் கடினமான பணிக்குரிய லெப்லட் வகைகளின் துறையில் 50 வீத சந்தைப் பங்கை அடைந்து கொள்வதை எமது நோக்காகக் கொண்டுள்ளோம் என்று பனசொனிக் இந்தியா நிறுவனத்தின் பொது முகாமையாளரும், தேசிய வணிக தலைமை அதிகாரியுமான குன்ஜன் சச்டேவ் தெரிவித்தார்.

சொப்ட்லொஜிக் ஒபிஸ் ஓட்டோமேசன் பணிப்பாளரான சமிந்த டீ சில்வா, "புதிய உற்பத்திகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்; உயர் தரமிக்க கடுமையான தொழிற்பாடு, தொடர்பிணைப்பு, நீடித்த பற்றரி பாவனை மற்றும் முன்னேற்றகரமான தொழில்நுட்பம் போன்ற சிறப்பம்சங்களை இந்தச் சாதனங்கள் தன்னகத்தே கொண்டுள்ளமையால் கடினமான வாழ்க்கைச் சூழலில் இயங்குகின்ற அனைத்து வாத்தக தொழில் வாண்மையாளர்களுக்கும் மிகப் பொருத்தமான உடனுழைக்கும் சாதனங்களாக இவை காணப்படும். எமது உற்பத்திகளின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியை வழங்குவதில் நீடித்து நிலைத்திருக்கும் அர்ப்பணிப்பை நாம் கொண்டுள்ள நிலையில், உற்பத்தி வகைகள் தோறும் புதிதாக ஒப்பீட்டுக்குறியிடலை (Benchmark) நாம் வெற்றிகரமாகமேற்கொண்டுவருகின்றோம். அந்த வகையில், இந்தத்துறை முழுவதிலும் உள்ள தமது வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புக்களைப் பனசொனிக் தொடர்ந்தும் நிவர்த்தி செய்யும்" என்றார்.

பனசொனிக் கூட்டுறவானது – வீடுகளிலுள்ள, வெளியிலுள்ள மற்றும் நடமாடித்திரியும் வாடிக்கையாளர்களுக்காக இலத்திரனியல் தொழில்நுட்பங்கள் மற்றும் தீர்வுகளையும், அதே போல் தனிப்பட்ட பிரயோக மென்பொருள்களையும் அபிவிருத்தி செய்தல் மற்றும் பொறியியல் ரீதியில் உருவாக்குவதில் உலகளவில் முன்னணி வகிக்கும் ஒரு நிறுவனமாகத் திகழ்கின்றது. 1918ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டவேளைமுதற்கொண்டு இந்த நிறுவனம் சர்வதேச அளவில் தனது வர்த்தகத்தை விஸ்தரித்துள்ளது. தற்போது உலகெங்கும் 500 இற்கும் மேற்பட்ட கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களைச் செயற்படுத்தி வருகின்றது.

அதன்படி 2014 மார்ச் 31ஆம் திகதி முடிவடைந்த நிதியாண்டில் 7.74 திரில்லியன் யென் ஒன்றுதிரண்ட விற்பனை வருமானத்தைப் பதிவுசெய்துள்ளது. உற்பத்திப் பிரிவுகள் வாரியாகப் புத்தாக்கங்களை மேற்கொள்வதன் மூலம் புதிய பெறுமதியைக் கடைப்பிடிப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்படும் இந்த நிறுவனமானது, தனது வாடிக்கையாளர்களுக்குச் சிறந்ததொரு வாழ்க்கையையும்சிறந்ததொரு உலகத்தையும் உருவாக்குவதில் முனைப்புடன் செயற்படுகின்றது.

# செய்திகள்

# வடக்கில் தாக்குதல் நடத்த தூண்டியோர் மீது நடவடிக்கை

## அமைச்சர் ராஜித கூறுகின்றார்

கொழும்பு, ஜன. 31

வடக்கில்உள்ளஇராணுவமுகாம்கள் மீது தாக்குதல் நடத்த தூண்டிவிட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள் ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாக அடையாளம் காணப்பட்ட இரண்டு இராணுவ அதிகாரிகளும், விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றார் என்று ஜனவரி 9 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. அதையடுத்து வடக்கில் குழப்பங் களை ஏற்படுத்த, முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு நெருக்கமான இராணுவ அதிகாரிகள் முயற்சி செய்தனர்.

சில குழுவினரைத் தூண்டி விட்டு வடக்கிலுள்ள இராணுவ முகாம்கள் மீது கல்வீச்சு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது. இந்தச் சதியுடன் தொடர்புடைய இரண்டு இராணுவ அதிகாரிகள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்கள் மீது விசாரணை முன்னெடுக்கப்படவுள்ளது.

இவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தேவையான ஆதாரங்கள் உள்ளனவா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு ஆம் என்று பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன, மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும், மேலும் பலர் கைது செய்யப்படக் கூடும் என்றும் தெரிவித்தார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, நாட்டில் குழப்ப நிலையை ஏற்படுத்தும், சதித் திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த இராணுவ அதிகாரிகள் செயற்பட்டுள்ளனர்.

நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்துவதற்காக பாதுகாப்புப் படைகள் மற்றும் பொதுமக்களை உள்ளடக்கிய 400 பேருக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளதாக புலனாய்வு அறிக்கைகள் கிடைத்துள்ளன என்றும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். (ற-5)



தினமும் காலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது உதவியாளர்களுடன் சுதந்திர சதுக்கத்தில் உடற்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றார். மிகச் சாதாரணமாக – பந்தோபஸ்துகள் இன்றி அவர் அங்கு பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். அந்தச் சமயம் அங்கு இடம்பெறும் சம்பவங்கள் நிகழ்வுகளிலும் மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்கிறார். (ற)

## பதவியை பறிக்காதீர் என மன்றாடினார் மொஹான்

### ராஜித சேனாரத்ன தகவல்

கொழும்பு, ஜன. 31

என்னை பிரதம நீதியரசராகத் தொடர அனுமதியுங்கள். நான் உங்களுக்கு விசுவாசமாகத் தீர்ப்புக்களை வழங்குவேன். இவ்வாறு முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் மன்றாடியுள்ளார்.

அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன, அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

"கடந்த புதன் கிழமை காலை ஜனாதிபதிக்கு தொலைபேசி அழைப்பு வந்துள்ளது. அப்போது பிரதம நீதியரசராக இருந்த மொஹான் பீரிஸ் பேசியுள்ளார். தன்னை தொடர்ந்தும் பிரதம நீதியரசர் பதவியில் தொடர அனுமதிக்குமாறு கேட்டுள்ளார். அவ்வாறு தொடர அனுமதித்தால், தங்களுக்குச் (ஜனாதிபதி மைத்திரி) சார்பாகத் தீர்ப்பு வழங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் ஜனாதிபதி மைத்திரிபால இதற்கு உடனடியாகவே மறுப்புத் தெரிவித்துள்ளார். இந்த விடயத்தை ஜனாதிபதி மைத்திரிபால, அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார்" – என்று அவர் கூறினார்.

புதிய அரசு ஜனநாயகம், நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சியை மீண்டும் ஏற்படுத்துவதாக வாக்குறுதி கொடுத்தே பதவிக்கு வந்துள்ளது. மொஹான் பீரிஸின் இதுபோன்ற முறையற்ற செயற்பாடுகளுக்கு புதிய அரசு இடமளியாது என்று ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். (ற-5)

## பேச்சை தொடர்வதற்கு இணங்கியுள்ளது ஐ.நா.

### இலங்கை அரச் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 31

இலங்கை அரசுடன் தொடர்ந்து பேச்சு நடத்துவதற்கு, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் இணங்கியுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபாலவின் வெளிவிவகார ஆலோசகர் ஜயந்த தனபால, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுஸைனைச் சந்தித்துப் பேசிய போதே இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால், இலங்கையின் போர்க் குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட்டது. இது தொடர்பான அறிக்கை மார்ச் மாதம் இடம்பெறவுள்ள அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. தற்போது இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் புதிய அரசு தனது நிலைப்பாட்டைத் தெரியப்படுத்துவதற்காக, ஜயந்த தனபாலவை ஜெனிவாவுக்கு அனுப்பியிருந்தது.

ஜெனிவாவில் பல்வேறு தரப்பினரையும் ஜயந்த தனபால சந்தித்துள்ளார். ஐ.நா மனித உரிமைகள் சபையின் தலைவர் ஜோகிம் ருக்கரை நேற்று முன்தினம் வியாழக்கிழமை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதன் பின்னர் அன்றைய தினமே, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசனைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில், புதிதாக ஆட்சி அமைத்துள்ள மைத்திரி அரசின் கொள்கைகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடலில் ஈடுபடுவதற்கும் இரு தரப்பினரும் இணங்கியுள்ளனர். (ற-5)

## பொலிஸாரின் இடமாற்றங்கள் ஒத்திவைப்பு

நாளை முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்துவதற்கு இருந்த 10 ஆயிரம் பொலிஸ் உத்தி யோகஸ்தர்களின் இடமாற்றம், எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, இந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் இட மாற்றம், மே முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று பொலிஸ் தலைமையகம் சுட்டிக்காட்டியது. (ற)

## போர்க்குற்ற விசாரணைக்கு இலங்கை ஒத்துழைக்கும்

### எதிர்பார்ப்பு வெளியிடுகிறார் மூன்

கொழும்பு, ஜன. 31

ஐ.நாவின் போர்க் குற்ற விசாரணைக்கு, இலங்கையின் புதிய அரசு ஒத்துழைப்பு வழங்கும் என்று எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன்.



ஐ.நா செயலகத்தின் வழக்கமான பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட போதே, ஐ.நா செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற போர்க் குற்றம் தொடர்பில் உள்ளக விசாரணை முன்னெடுக்கப்படும். இதற்கு சர்வதேச நிபுணர்களின் தொழில்நுட்ப உதவிகள் பெற்றுக் கொள்ளப்படும். இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருந் தார். இது தொடர்பில், ஐ.நா செயலாளர் நாயகத்திடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்,

"நாங்கள் இந்தத் தகவல்களை அறிந்துள்ளோம். ஐ.நா. மனித உரிமைகள் விடயத்தில் ஒத்துழைப்பது என்ற கூற்றின் மூலம் எதனை வெளிப்படுத்த முயல்கிறார்கள் என்பதை நாம் அறிய விரும்புகிறோம். என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதற்கான விசாரணை விடயத்தில் இலங்கை அரசுக்கும் ஐ.நா. முறைமைக்கும் இடையில் ஒத்துழைப்பது சம்பந்தமாக ஆக்கபூர்வமான முன்னகர்வு இருப்பதாக நாங்கள் நம்புகிறோம்" என்று அவர் குறிப்பிட்டார். (ற-5)

# முழு அளவில் ஷிராணி சுயாதீனமாக இல்லை

## இப்படிக் கூறுகின்றார் ராஜித



கொழும்பு, ஜன.31
முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவும் முழு அளவில் சுயாதீனமாக செயற்படவில்லை என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஷிராணி பண்டாரநாயக்க பதவி வகித்த காலத்தில் முழு அளவில் அவர் சுயாதீனமாக செயற்பட்டார் என்று கருத முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஷிராணி பண்டாரநாயக்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் மிக நெருக்கமாக செயற்பட்டு வந்தார் என அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகவியலாளர்களைச் சந்தித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கணவருடைய நிதிக் கொடுக்கல் வாங்கல் மோசடிகள் அம்பலமாகும் வரையில் ஷிராணி, மஹிந்தவுடன் சிறந்த உறவுகளைப் பேணி வந்ததாகத் தெரிவித்துள்ளார். ஷிராணிக்கு எதிராக சில குற்றச்சாட்டுக்கள் காணப்பட்டமை உண்மை என்ற போதிலும், குற்றப் பிரேரணை மூலம் நீக்கப்பட்டமை அரசியல் ரீதியானது.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விளக்கம் அளிக்க போதியளவு கால அவகாசம் வழங்குமாறு ஜனாதிபதி மஹிந்தவிடம் தாம் கோரிய போதிலும், அதனை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். சட்டப் பிரச்சினை காரணமாகவே இந்த அரசு ஷிராணியை பதவியில் அமர்த்தியதாகத் தெரிவித்துள்ளார். (ற)



# அழியாச் சொத்தான கல்வியை ஒருபோதும் இழக்கவே கூடாது

## வடக்கு மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் அறிவுரை

மன்னார், ஜன.31
கடந்த 30 ஆண்டுகளில் நாம் இழந்தவையே அதிகம். இனி மேலும் அவ்வாறு இருக்கக் கூடாது. எமது கல்வியை நாம் இழந்து விடக்கூடாது. அதுவே எம்மோடு வரும் அழியாச் சொத்து– இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபை அமைச்சர் பா.டெனீஸ்வரன்.

மன்னார் நானாட்டான் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாடசாலை மைதானத்தில் பாடசாலையின் அதிபர் அருட்சகோதரர் ரெஜினோல்ட் தலைமையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"அழியாத சொத்தான கல்வியை எக்காரணம் கொண்டும் இழந்து விட முடியாது என்பதை அனைத்து மாணவர்களும் உணர்ந்து கல்வியையும் விளையாட்டையும் தொடர வேண்டும். அதிபரின் வேண்டுதலுக்கிணங்க இந்தப் பாடசாலைக்கு துவிச்சக்கர வண்டி நிறுத்துமிடம் ஒன்றை இவ்வருடம் அமைத்துத் தருவேன். நானாட்டானில் இருந்து முருங்கன் செல்லுகின்ற வீதி புனரமைப்பதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டுவிட்டது. எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் வேலைகள் ஆரம்பிக்கப்படும்"– என்று தெரிவித்தார்.

குறித்த நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபையின் மன்னார் மாவட்ட உறுப்பினர்களான சட்டத்தரணி எஸ்.பிரிமுஸ் சிராய்வா, வைத்தியகலாநிதி டாக்டர் ஞ.குணசீலன் மற்றும் விசேட விருந்தினராக சமூக சேவையாளர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ற–56)

# 65 வாகனங்களை தேடுகிறது பொலிஸ்

கொழும்பு, ஜன.31
ஜனாதிபதி செயலகத்துக்கு சொந்தமான மேலும் 65 வாகனங்களைத் தேடி குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன்பொருட்டு விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண குறிப்பிடுகின்றார்.

ஜனாதிபதி செயலகத்துக்கு சொந்தமான 749 வாகனங்கள் காணாமற் போயிருந்ததாக பதிவாகியுள்ளது. அவற்றுள் 80 க்கும் அதிகமான வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளதாக நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இருந்து கடந்த நாள்களில் மீட்கப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான் வாகனங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில் பொலிஸாரால் மீட்கப்படுமாயின், அதுதொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடையும் வரை சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கப்படமாட்டாது எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# நல்லாட்சி ஏற்படுத்த ஆணைக்குழுக்கள்

## விரைவில் அமைக்கப்படும் என்று பிரதி நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.31
நாட்டில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அந்நாட்டில் சுயாதீன பொலிஸும் சுயாதீன நீதிமன்றமும் இருத்தல் வேண்டும். எனவே நல்லாட்சியை ஏற்படுத்தும் வகையில் பொலிஸ் மற்றும் நீதித்துறை ஆணைக்குழுக்கள் அமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்படவுள்ளன என்று பிரதி நீதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் பதவியேற்பை அடுத்து கண்டிக்கு பயணம் செய்து ஸ்ரீ தலதாமாளிகையில் வழிபட்டு அஸ்கிரிய மற்றும் மல்வத்தை பீடங்களுக்குச் சென்று நல்லாசி பெற்றபின் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

"நாட்டில் சாதாரண சமூகம் ஒன்று உருவாக வேண்டுமாயின் நாட்டிலுள்ள சகல பிரஜைகளுக்கும் ஒரே தன்மை பொருந்திய சமமான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதற்கான சகல விடயங்களும் மேற்கொள்ளப்படும்.

நாட்டில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அந்நாட்டில் சுயாதீன பொலிஸும் சுயாதீன நீதிமன்றமும் இருத்தல் வேண்டும். அதற்கு இணையாக குற்றப் புலனாய்வுப் பிரிவும், சட்டமா அதிபர் திணைக்களமும் அத்துடன் முப்படைகளும் சுயாதீனமாக இயங்க வேண்டும். எனவே, அவற்றை சுயாதீனமாக இயங்குவதற்குரிய சூழலை உருவாக்குவோம்."– என்று அவர் தெரிவித்தார். (ற)



*மன்னார் ஜீவபுரம் கிராம மக்களை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட பிரதம அமைப்பாளருமான சட்டத்தரணி ஹுனைஸ் பாறூக் நேற்றுமுன்தினம் நேரில் சென்று கலந்துரையாடினார். இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ஏ.எஸ்.எம்.பஸ்மியும் உடன் சென்றிருந்தார். (ற–56)*

# பொருளாதாரக் கொள்கை எதுவும் பின்பற்றப்படவில்லை

## சுட்டிக்காட்டுகின்றது ஜே.வி.பி.



கொழும்பு, ஜன.31
புதிய அரசின் இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் பொருளாதார கொள்கைகள் எதுவும் பின்பற்றப்படவில்லை என ஜே.வி.பி தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்றுமுன்தினம் இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தை சமர்ப்பித்திருந்தார். இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே திஸாநாயக்க இவ்வாறு தெரி வித்தார்.


"தேர்தல் நெருங்கிய போது கடந்த அரசும் விலைக் குறைப்புக்களை செய்ததாகவும், மக்கள் அதனைப் புரிந்துகொண்டு அரசை தோற்கடித்தனர். புதிய அரசால் வழங்கப்பட்டுள்ள சலுகைகள் மக்களின் வாழ்க்கைச் செலவை குறைக்கும் என்ற போதிலும், தெளிவான பொருளாதாரக் கொள்கைகள் தந்திரோபாயங்கள் வரவு–செலவுத் திட்டத்தில் தென்படவில்லை.

மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்கில் இந்த வரவு – செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டு உள்ளது.

நீண்ட கால குறுகிய கால பொருளாதாரக் கொள்கைகள் தந்திரோபாயங்களை இந்த இடைக் கால வரவு – செலவுத் திட்டத்தில் காண முடிய வில்லை"– என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# செய்திகள்

## மரண அறிவித்தல்கள்



### பொன்னம்பலம் நடராஜா

யாழ். ஸ்ரான்லி வீதியைப் பிறப்பிடமாகவும், றக்கா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நடராசா நேற்று (30.01.2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-அன்னம் தம்பதியரின் அன்பு மருமகனும், யோகராணியின் அன்புக் கணவரும், விஜி (கனடா), சுரேஸ் (பிரான்ஸ்), ஜனு, சுகந்தி, சத்தியன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காந்தன் (கனடா), டயானா (பிரான்ஸ்), ஜயக்கொடி, சிவா, டிவ்னா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், நிவானா, சகானா, செறினா, சகின், சுமித் (யோன் பொஸ்கோ வித்தியாலய மாணவன்), சுஜித், சஜீன், செலினா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பரிபூரணம் மற்றும் பாக்கியம், கண்டம்மா, செல்வராணி, அருமைராசா, சிவசோதி, மகிமாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**79/3, றக்கா வீதி, சுண்டுக்குளி.**
**0734305411**

(56357) (10)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### திருமதி இராஜேஸ்வரி யோகநாதன்



அராலி மத்தி வட்டுக் கோட்டையைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி யோகநாதன் நேற்று (30.01.2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் யோகநாதனின் அன்பு மனைவியும், நல்லையா -காலஞ்சென்ற ராசமணி தம்பதியரின் அன்பு மகளும், திரு. திருமதி தம்பிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், சந்திராதேவி, ராஜகுமார், செல்வரஞ்சினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நந்தகுமார், சசிபாலன், சுமதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2015) சனிக்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாமடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அராலி மத்தி,**
**வட்டுக்கோட்டை**

**தகவல்:**
**சிவபாலரத்தினம்**
**தம்பிமாமா**

### திருமதி புவனேஸ்வரி தவராசா



மாதகலைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி கனகபுரத்தை வசிப்பிடமாகவும், தற்காலிகமாக சண்டிலிப்பாயில் வசித்தவருமான திருமதி புவனேஸ்வரி தவராசா நேற்று (30.01.2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி -தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தவராசாவின் அன்பு மனைவியும், மகாதேவா (தேவன் -பிரான்ஸ்), மஞ்சுளா (மஞ்சு-பிரான்ஸ்), தயாளினி (குஞ்சு -பிரான்ஸ்), பிரமிளா (மாலினி-கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், ரஞ்சினிதேவி, ஞானசீலன், கலைச்செழியன், யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், டிலக்ஷன், நிதர்ஷன், வைஸ்ணவி, விதுர்ஷிகா, பவிர்ஷா, றயன், றாகுல், ஆதினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இராசரட் ணம், காலஞ்சென்ற இராச மணி மற்றும் சோதி (கொலண்ட்), ஜெயராணி, நிர்மலா, சிவபாலன் (சுவிஸ்) ஆகியோரின் அருமை சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.02.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணியளவில் மாசியப்பிட்டி சண்டிலிப்பாயில்உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய்**
**021 205 2832**

**தகவல்:**
**மைத்துனர் (நா. விஜயராசா)**

## வேலையில்லா பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்

கண்டி, ஜன. 31

மத்திய மாகாணத்திலுள்ள வேலையில்லா பட்டதாரிகள் கண்டியில் ஒன்றுகூடி நேற்று ஆர்ப்பாட்டமும், பேரணியும் நடத்தினர்.

அரசு தமது நூறுநாள் வேலைத்திட்டத்தில் வாக்களித்ததன் பிரகாரம் வேலையில்லா பட்டதாரிகளுக்குப் பொருத்தமான வேலை வாய்ப்பை உடன் பெற்றுத் தரும்படி கோரி சுமார் ஆயிரத்து 500 பட்டதாரிகள் இந்த ஆர்பாட்டப் பேரணியை முன்னெடுத்திருந்தனர்.

கண்டி ட்ரொரிங்டன் சதுக்கத்தில் இருந்து ஆரம்பித்த குறித்த பேரணி கண்டி மணிக்கூட்டுக் கோபுரம் வரை சென்று அங்கிருந்து மத்திய மாகாண ஆளுநர் காரியாலயத்துக்குச் சென்றது.

வேலையில்லா பட்டதாரிகளால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிப்பதற்காக தயாரிக்கப்பட்ட மனுவை மத்திய மாகாண ஆளுநரிடம் கொடுக்கும் முயற்சி, ஆளுநராக திருமதி எல்லாவல கடமைகளைப் பொறுப்பேற்காத நிலையில் தோல்வியில் முடிவடைந்தது.(ற-10)

## நல் வாழ்வு பிரார்த்தனை

யாழ்ப்பாணம்.ஜன.31

இலங்கை இந்து அமைப்பினரின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் தமிழ் மக்களின் நல் வாழ்வுக்கான பிரார்த்தனை நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கந்தர் மடத்தில் உள்ள இந்து சமயப் பேரவையின் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமயப் பேரவையின் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தமிழ் அரசியல் கைதிகளின் நலன் வேண்டி விசேட பிரார்த்தனையும் பிராந்திய இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகளின் சிறப்புரைகளும் இடம் பெறும். (வ-14)

## கண்ணீர் அஞ்சலி



**எமது பாடசாலையின் ஆசிரியர்**
**அ. சிவலிங்கம் அவர்களின்**
**பாசமிகு மகன்**

### சிவலிங்கம் - சர்வதர்ஷன்

**அவர்களின் திடீர் மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியடைவதுடன் அவரின் பிரிவுத் துயரில் நாமும் பங்கெடுப்பதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**


**பாடசாலைச் சமூகம்** (56339) (45.3)

(சி.19216)(45.7)

**யா/உயரப்புலம் மெதடிஸ்மிசன் வித்தியாலயம்.**

## 31ஆவது நினைவு நாளும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
13 ★ 01 ★ 1936



ஆண்டவன் அடியில்
01 ★ 01 ★ 2015

### அமரர் பண்டாரி செல்லையா

"தர்மத்தின் வள்ளலார் நீங்கள்
தவிப்பவர் நிலை கண்டு
இருப்பதை கொடுப்பதில்
இன்பம் கண்டவர் நீங்கள்"...

கடந்த 01.01.2015 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கு அமரர் பண்டாரி செல்லையா அவர்களது வீட்டுக்கிரியைகள் இன்று (31.01.2015) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறுகின்றது. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச் செய்திகேட்டு நேரிலும், தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும், இறுதிக் கிரியையில் கலந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வளர்மதி வீதி,**
**மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**

## தொடர்ச்சி

### தேர்தல் தினத்தன்று

தொடர்பிலான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று ஆரம்பமானது. அதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பிரதம நீதியரசராக ஷிராணி பண்டாரநாயக்க நியமிக்கப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவித்தார். அப்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"அலரி மாளிகைக்கு வருமாறு கடந்த 9 ஆம் திகதி அதிகாலை 4 மணியளவில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேட்டுக் கொண்டார். நான் அங்கு சென்றபோது அங்கிருந்தவர்களில் மொஹான் பீரிஸும் அடங்கியிருந்தார். அந்த நேரத்தில் அங்கு என்ன செய்கிறீர்கள் என்று அவரிடம் வினவினேன். ஆலோசனை கூறுவதற்காக தாம் வந்த தாக அவர் என்னிடம் சாதாரணமாக பதில் கூறினார். அதிகாலை 2.30 மணியளவில் தாம் அலரி மாளிகைக்கு அழைக்கப்பட்ட போது, ஏற்கனவே மொஹான் பீரிஸ் அங்கு நின்று கொண்டிருந்ததாக, சட்டமா அதிபர் என்னிடம் தெரிவித்தார்."- என்று ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

"ஜனாதிபதியாக மைத்திரிபால தெரிவாகிய பின்னர் மொஹான் பீரிஸ் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். எதிர்கால வழக்குகளின் போது, அரசுக்கு ஆதரவளிக்க விரும்புவதாக குறிப்பிட்டார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திக்க வேண்டும் என்றும் கேட்டார்."- என்றும் அவர் கூறினார்.

"அவர், தமக்கு இராஜதந்திரப் பதவி தந்தால், தாம் பதவியில் இருந்து விலக விரும்புவதாகவும் தெரிவித்தார். நான் வெளிவிவகாரஅமைச்சிடம் வெளிநாடுகளில் உள்ள தூதுவர் பதவி வெற்றிடங்கள் குறித்து விசாரித்துவிட்டு, வியட்நாம் அல்லது பிரேஸிலுக்கான தூதுவராக நியமிக்கலாம் என்று கூறினேன். ஆனால் அவர், ரோமுக்கான தூதுவர் பதவியையே கோரினார்."- என்று பிரதமர் மேலும் தெரிவித்தார்.

"பிரதம நீதியரசர் விவகாரம் தொடர்பாக எந்த விவாதத்தை எதிர்கொள்ளவும் நான் தயாராக இருக்கிறேன்"- என்றும் பிரதமர் ரணில் அங்கு சுட்டிக் காட்டினார். (ற-5)

செய்தி

# இலங்கையின் புதிய அரசு அனைவரதும் உரிமையையும் நீதியையும் உறுதி செய்ய வேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கை தெரிவிப்பு

கடந்த கால போர்க் குற்றங்கள் தொடர்பாகத் தாமதமின்றி நீதி கிடைக்க வேண்டுமென வற்புறுத்திக் கேட்ட மனித உரிமைகள் ஆர்வலர்களும், ஊடகவியலாளர்களும் கடந்த ஆண்டு இலங்கை அரசின் கடுமையான அழுத்தங்களை எதிர்கொண்டதாக நடப்பு ஆண்டுக்கான தனது உலகளாவிய அறிக்கையில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

இலங்கையில் புதிய அரசு ஒன்று கடந்த ஜனவரி மாதம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தன்னிச்சையான கைதுகள் கட்டாயமாகக் காணாமற்போகச் செய்தல், 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் நடவடிக்கையிலிருந்து இன்று வரை இடம்பெற்ற கொலைகள் தொடர்பான விசாரணைகளுக்கு இந்தப் புதிய அரசு உத்தரவிட்டுள்ளது என்றுள்ளது.

656 பக்கங்களைக்கொண்ட இந்த 25ஆவது பதிப்பில் 90இற்கும் மேற்பட்ட நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகள் விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

கண்காணிப்பகத்தின் நிறைவேற்று பணிப்பாளரான கென்னத்றோத் தமது அறிமுகக் கட்டுரையில் அரசுகள் மனித உரிமைகளைப் போற்றிப் பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

மேலும் கண்காணிப்பகத்தின் இறுதி அறிக்கை செய்யப்பட்ட பின்னர்தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கையின் புதிய அரசு சுதந்திரமாகக் கருத்து வெளியிடும் உரிமையை வழங்கியுள்ளதுடன் முடக்கி வைக்கப்பட்ட செய்தி இணையத்தளங்களையும் விடுவித்துள்ளது. . அத்துடன் 2009 இல் இடம்பெற்ற பிரபல ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பான புதிய விசாரணைகளுக்கும் உத்தரவிட்டுள்ளது. இவற்றை புதிய அரசின் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எனக் கூறலாம். அத் துடன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்களையும் அரசு கோரியுள்ளது வரவேற்கத்தக்கது.

முன்னைய ராஜபக்ஷ தலைமையிலான அரசு 2009ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த போரின் போது இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாகக் கணக்கிலெடுக்கவில்லை. இதன் காரணமாகவே ஐ.நா.மனித உரிமைகள் சபை கடந்த ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் திகதி இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. ஆனால் இதனை மஹிந்த தலைமையிலான அரசு உடனடியாகவே நிராகரித்து அத்துடன் ஐ.நா.விசாரணைகளுக்கு ஒத்துழைப்பவர்களுக்கெதிராக கடும் நடவடிக்கையை எடுக்குமாறும் உத்தரவிட்டது.

கடந்த ஆண்டு பௌத்த அமைப்புக்கள் இலங்கையின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள முஸ்லிம்கள் வாழும் நகரில் மேற்கொண்ட தாக்குதலில் நான்கு பேர் உயிரிழக்க 80 இற்கும் மேற்பட்டவர்கள் காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். அத்துடன் முஸ் லிம்களுக்குச்சொந்தமானபெருமளவுஉடைமைகளும் நாசமாக்கப் பட்டன.

அத்துடன் ராஜபக்ஷ அரசு தமிழர் பகுதியில் மேற்கொண்ட மீள் குடியமர்வு மற்றும் மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்ட தமிழர்களின் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்டன.

இந்த நிலையில் புதிய அரசு சிறுபான்மையினர் உட்பட அனைத்து மக்களும் நீதியும், உரிமைகளும் பெற்று வாழ்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி வள்ளியம்மை (தங்கம்மா) கணபதிப்பிள்ளை

கரவெட்டி மேற்கு, சம்பந்தர் கடையடியைப் பிறப்பிடமாகவும் நெல்லியடி கிழக்கு, முடக்காட்டை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை (தங்கம்மா) கணபதிப்பிள்ளை 30.01.2015 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் கந்தர்- பார்ப்பதி தம்பதியரின் புதல்வியும் கணபதிப்பிள்ளையின் (ஆசிரியர்) அன்பு மனைவியும், செந்தில்நாயகி, செந்தில்நாதன் (சிங்கப்பூர்), செந்தில் பிராட்டி (பிரான்ஸ்), செந்தில்மதி (ஆசிரியை-விக்கினேஸ்வராக் கல்லூரி), செந்தில்மாதவன் (புதுக்குடியிருப்பு -பிரதேச செயலகம்) ஆகி யோரின் அன்புத் தாயாரும், பாலசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற மக்கள் வங்கி ஊழியர்), சோதிமலர் (சிங்கப்பூர்), பகீரதன் (பிரான்ஸ்), விநாயகமூர்த்தி (ஆசிரியர் -கொற்றாவத்தை அமெரிக்கன்மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை), வைதேகி (ஆசிரியை-விக்கினேஸ்வராக்கல்லூரி) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.02.2015 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சோனப்பு பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முடக்காடு, நெல்லியடி கிழக்கு,
நெல்லியடி.

தகவல்: குடும்பத்தினர்.

(54190) (4.3.7)

### திருமதி திலகமணி கதிரவேற்பிள்ளை



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகமணி கதிரவேற்பிள்ளை 29.01.2015 வியாழக்கிழமை கால மாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கதிரவேற்பிள்ளையின் (இ.போ.ச.சாரதி) அன்பு மனைவியும், கதிஸ்ரூபன் (சுவிஸ்), விகாஸ்ரூபன் (சுவிஸ்), சுஜாதா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், நளாயினி, உசாவதனா, ஜெயகாந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், பாரத், டென்சி, யான்சி, அபிஷா, சுஸ்மிதா, கெல்க்ஸன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான ஞானம்மா, யோகம்மா மற்றும் சிவபாதம், மகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.02.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குறும்பன், ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.


தகவல்:
குடும்பத்தினர்,
(பேறாமகள்-புஷ்பதேவி)

(56340) (10.7)

## மரண அறிவித்தல்

### சிவலிங்கம் சர்வதர்சன்

(Business Management Executive,
witel Solutions, Maradana)



180, அரசடி வீதி, கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், 23/3A , ஹாமேர்ஸ் அவனியூ, வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட சிவலிங்கம் சர்வதர்சன் 28.01.2015 புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் சிவலிங்கம் (ஆசிரியர் - யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதா வித்தியாசாலை, யா/ உயரப்புலம் மெதடிஸ்மிசன் வித்தியாலயம், ஆனைக் கோட்டை) - பாமா தம்பதியரின் மூத்த புதல்வனும், குகதர்சனின் (யா/ இந்துக் கல்லூரி, கணிதப் பிரிவு - 2016) அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வர்களான சங்கரப்பிள்ளை, இளையபிள்ளை மற்றும் சுந்தரமூர்த்தி - மீனாட்சி தம்பதியரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் மகேஸ்வரி (திருகோணமலை), மகாலிங்கம் - விஜயலட்சுமி (ஜேர்மனி), சுந்தரலிங்கம் - வசந்தி ஆகியோரின் அன்புப் பெறா மகனும், காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் மகேஸ்வரி, சிவநேசன் - புவனேஸ்வரி, சிறீஸ்கந்தராசா - நகுலேஸ்வரி (சுவிஸ்சர்லாந்து), பகீரதன், சுதாகரன் (யாழ். மாநகரசபை) - கலைச்செல்வி, சிவாகரன்- விஜயஸ்ரீ (கனடா), துவாரகன் - துஷ்யந்தி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.02.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 9.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

180, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
ச. சிவலிங்கம் (தந்தை - ஆசிரியர்)

(56110) (45.6.3)

# செய்திகள்

## மகாத்மா காந்தி நினைவு நேற்று யாழ்ப்பாணத்தில்





யாழ்ப்பாணம், ஜன. 31
அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று மகாத்மா காந்தியின் 67ஆவது நினைவு தின நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்திய துணைத் தூதுவர் ஏ.நடராஜன் கலந்து கொண்டதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக் கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி, மூத்த காந்தியவாதி சோ.க.தம்பிப்பிள்ளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல்துறை விரிவுரையாளர் ந.சிவகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆரம்ப நிகழ்வாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள அமைந்துள்ள காந்தி திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ் சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நினைவுதின நிகழ்வுகள் இடம்பெற்றன.

இங்கு உரையாற்றிய யாழ் இந்திய துணைத் தூதுவர் ஏ.நடராஜன் தெரிவித்ததாவது:–

நான் யாழ்ப்பாணத்துக்கு வந்து சில தினங்களே ஆகின்றன. இந்த நிலையில் இப்படியான உணர்ச்சி பூர்வமான ஒரு நிகழ்வில் நான் கலந்துகொள்வேன் என சற்றும் எதிர்பார்க்கவில்லை. மாகாத்மா காந்தி இந்தியாவுக்கு மட்டும் அல்ல உலகுக்கே பல நல்ல விடயங்களைச் செய்தும் சொல்லியும் சென்றிருக்கிறார். இன்று இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அவருடைய நினைவு தினம் அனுஷ்டிக்கப் படுவது என்னை மிகவும் மகிழ்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இந்தியாவும் இலங்கையும் இரு நாடுகள் என்றாலும் உணர்வால் ஒன்றுபட்டவை என்றே நான் கூறுவேன்.

வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுடன் நான் பேசியபோது; அவர் கூறினார் 'மகாத்மாகாந்தி சுட்டுக்கொல்லப்பட்டபோது எனக்கு வயது 10. செய்தி கேள்விப்பட்டதும் 3 நாள்கள் சாப்பிடவில்லை' எனத் தெரிவித்தார். சிறுவர்கள் மத்தியிலேயே பெரும் பாதிப்பை ஏற்படுத்திய மகாத்மா காந்தியின் மறைவு மூத்தோருக்கு எவ்வளவு வலி கொடுத்திருக்கும் என என்னால் உணர முடிகின்றது எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் காந்தியவாதிகள், கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு மகாத்மா காந்திக்கு அஞ்சலி செலுத்தினர். (த–10–20–17)

**வேலையாள்கள் தேவை**
மானிப்பாயில் இயங்கும் எமது நிறுவனத்துக்கு ஆண்/பெண் பணியாளர்கள் தேவை.
* போட்டோ கொப்பி
* கணினி அறிவு
* Typing (தமிழ், ஆங்கிலம்)
தெரிந்தவர்கள் மட்டும்.
வயது 18–25 (56337) (4.3.7) தொடர்பு: 077 493 3987

**அறைகள் நாள் வாடகைக்கு**
ஒருவருக்கு 600/=, இருவருக்கு 1500/=, நால்வருக்கு 2500/=
Hotel Villa City 422, Galle Road,
(சி/18437) (4.3) வெள்ளவத்தை. 072 255 2222

**காணி விற்பனைக்கு**
நல்லூர் முருகன் கோயிலுக்கு அருகில், யாழ். கல்வி வலயத்துக்கு அருகாக செல்லர் வீதி, செம்மணி றோட்டில் அமைதியான சூழலில், அமைந்துள்ள நிலப்பரப்பு 1¼ ஒன்றே முக்கால் பரப்பு வருமானத்துடன் கூடிய வெறும் காணி உடன் விற்பனைக்கு.
தொடர்பு:- 0777 432645

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

உ
சிவமயம்
**அகில இலங்கை இந்து மாமன்றம்**
(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பு)

**அறநெறி பாடசாலைகளுக்கு அப்பியாச புத்தகங்கள் அன்பளிப்பு**

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ் பணிமனையில் பதிவு செய்து 2014 ஆண்டிற்கான இலவச அப்பியாச புத்தகங்கள் பெற்ற அறநெறி பாடசாலைகளின் பிரதிநிதிகள் யாழ் நல்லூர், கோவில் வீதியில் அமைந்திருக்கும் அகில இலங்கை இந்து மாமன்ற யாழ் பணிமனையில் 31-01-2015 சனிக்கிழமை பகல் 12.00 மணி முதல் 2.00 மணிக்குள் இந்த ஆண்டிற்கான இலவச அப்பியாச புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

211/17, கோவில் வீதி
நல்லூர்,.
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 1075

கௌரவ பொதுச் செயலாளர்,
அகில இலங்கை இந்து மாமன்றம்,
யாழ் பணிமனை.

## வத்தளை பிரதேச சபை அமர்வில் அடிதடி

கொழும்பு, ஜன. 31
வத்தளை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்றைய தினம்நடைபெற்றபோதுசபைக்குள் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பிரதேச சபைத் தலைவர் தயாக ரத்நாயக்க அல் விஸ் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

வத்தளை பிரதேச சபையின் இந்த வருடத்துக்கான முதல் மாதாந்த அமர்வு நேற்றுக் காலை ஆரம்பமானது. இதன் போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வலுத்து அடிதடியில் முடிவுற்றது. இதன்போது பிரதேச சபை உறுப்பினர்கள் தலைவரை தாக்கியுள்ளனர்.

இந்தத் தாக்கதல் சம்பவத்தில் காயமடைந்த பிரதேச சபைத் தலைவர் உடனடியாக ராகம போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

தாக்குதல் சம்பவத்தின் பின்னர் பிரதேச சபை அமர்வு உபதலைவரின் தலைமையில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த–10)

## பிரபல பாடசாலை அனுமதி வெட்டுப்புள்ளிகள் அறிவிப்பு

கரணவாய், ஜன.31
தரம் 5 புலமைப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த மாணவர்களை பிரபல பாடசாலைகளில் சேர்ப்பதற்கான வெட்டுப் புள்ளிகள் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் யாழ். மாவட்டத்தில் உள்ள பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி என்பவற்றுக்கு 165 புள்ளிகளும், வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலைக்கு 164 புள்ளிகளும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கு 159 புள்ளிகளும், யாழ். இந்து மகளிர் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி என்பவற்றுக்கு 158 புள்ளிகளும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலைக்கு 151 புள்ளிகளும் வெட்டுப்புள்ளிகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு 162 புள்ளிகளும், மீசாலை வீரசிங்கம் மத்திய மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவற்றுக்கு 158 புள்ளிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை – முல்லைத்தீவில் விசுவமடு மகா வித்தியாலயத்துக்கு 162 புள்ளிகளும், மன்னாரில் எரிக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு 150 புள்ளிகளும் வவுனியாவில் இறம்பைக்குளம் பெண்கள் பாடசாலைக்கு 154 புள்ளிகளும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு 159 புள்ளிகளும் வெட்டுப்புள்ளிகளாக கல்வி அமைச்சினால் அறிவிக் கப்பட்டுள்ளன. (த–108)

## கிழக்கு கல்வித்துறையில் உடனடித் தீர்வு வழங்குக

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜன. 31
கிழக்கு மாகாணத்தில் அரசியல் வாதிகளாலும், அரசியல் வாதிகளின் அடிவருடிகளாலும் இது வரைகாலம் பழிவாங்கப்பட்ட அதிபர்கள், ஆசிரியர்களுக்கு மத்திய கல்வி அமைச்சு உடனடியாகத் தீர்வு வழங்க வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தனிப்பட்ட காரணங்களுக்காகவும், அரசியல் ரீதியாகவும் கிழக்கு மாகாணத்தில் பல அதிபர்களும், ஆசிரியர்களும் தொடர்ந்தும் பழிவாங்கப்பட்டு வந்துள்ளனர். இதனால் பல பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் பெரிதும் பாதிப்படைந்ததாகவும் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் சங்கம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

உண்மையான குற்றவாளிகள் அரசியல்வாதிகளால் பாதுகாக்கப்பட்டு, பதவியுயர்வுகள் வழங்கப்பட்டதோடு அவர்களின் குற்ற விசாரணைகளும் மூடிமறைக் கப்பட்டிருந்தன. உண்மையான உணர்வுகளுடன் கடமையாற்றிய பல அதிபர்கள், ஆசிரியர்கள் பழி வாங்கப்பட்டதும் அல்லாமல் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

தற்போது ஏற்பட்டுள்ள உண்மை ஜனநாயகச் சூழலில் இவற்றுக்கெல்லாம் சரியான தீர்வு வழங்கப்படுவதுடன் உண்மையான குற்றவாளிகள்தப்பித்துக் கொள்ளாத வகையில் தீர்ப்பு வழங்கப் படவேண்டும். கிழக்கு மாகாணத்தின் மாகாண சபை செயலிழந்துள்ள இந்த நிலையில் இன்னும் மோசமான நிலை அங்கு உருவாகுவதற்கு முன்னர் மத்திய கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதைவிட உண்மையான குற்றவாளிகளைப் பாதுகாப்பதற்காகவும், அவர்களோடு சேர்ந்து குற்றம்புரிந்தவர்களும் தற்போது கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரைச் சந்தித்துத் தமக்கான மாற்று வழிமுறைகளைத் தேடுவதாகவும் அறியப் பட்டுள்ளது. என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ–4)

## கசினோ திட்டத்தை நிறுத்த ஜேம்ஸ் பாக்கர் முடிவு

கொழும்பு, ஜன.31
இலங்கையில் 400 மில்லியன் டொலர் முதலீடு செய்யப்படவிருந்த ஆடம்பர ஹோட்டல் மற்றும் சுற்றுலா மைய செயற்திட்டத்துக்கான வரி சலுகைகளை இலங்கை அரசு விலக்கிக்கொள்ள தீர்மானித்துவிட்ட தால் அத்திட்டத்தை முன்னெடுக்கப் போவதில்லையென ஜேம்ஸ் பக்கரின் கிறவுன் குழு கூறியுள்ளது.

பக்கரின், சுற்றுலா மையம் உட்பட மூன்று வெளிநாட்டு சுற்றுலா மையங்களுக்கான தாராள வரிச் சலுகைகளை இரத்து செய்யப் போவதாக இலங்கையின் புதிய அரசு கடந்த வியாழன்று அறிவித்தது.

புதிய அரசின் இந்தத் தீர்மானத்தின் காரணமாக தமது நிறுவனம் இந்தத் திட்டத்தை நிறுத்தப் போவதாக கிறவுன் குழுப் நிறுவனத்தின் பேச்சாளர் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு இந்த நிறுவனத்துக்கு பல வரிச் சலுகைகளை வழங்கியிருந்தது.

அந்தச் சுற்றுலா மையங்களில் கசினோவை நாம் அனுமதிக்கமாட்டோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். (ற)

# தொடர்ச்சிகள்

## காணாமல்

"மஹிந்த அரசில் காணாமல் போனவர்களை மைத்திரி அரசில் தேடித்தா" – என்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளுடன் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1982ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் காணாமற்போனோரை கண்டுபிடித்துத் தருமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரினர்.

காந்தி சேவா சங்கமும், காணாமற் போனோரின் உறவினர்களும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன் மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர். (ந–10,56)

## இலங்கை

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் மங்களசமரவீர ஆகியோருடனும் பொதுநலவாயத்தின் முன்னுரிமைகள் மற்றும் இலங்கையின் தேசிய முன்னுரிமைக்குரிய விடயங்களுக்கு பொதுநலவாயம் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பது தொடர்பாக ஆராய்வார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாடு மால்ட்டாவில் நடைபெறவுள்ள நிலையில் அவ்வமைப்பின் தலைவரான சிறிசேனவைச் சந்திக்கஎதிர்பார்த்துள்ளதாக செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ந–சி)

## 1,808

என்றுவர்த்தகர்கள் தெரிவித்தனர்.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசின் வரவு – செலவுத் திட்டம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது. அதில் சீனியின் விலை பத்து ரூபா குறைப்புச் செய்யப்பட்டது. அதன்படி ஒரு கிலோ சீனி 85 ரூபாவுக்கே விற்பனை செய்யப்பட வேண்டும். 12.5 கிலோ கிராம் எடையுள்ள எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலை 300 ரூபாவால் குறைக்கப்பட்டது. அதன்படி ஆயிரத்து 596 ரூபாவுக்கு அது விற்பனை செய்யப்பட வேண்டும் என்று அரசு வரவு – செலவுத் திட்டத்தில் அறிவிப்புச் செய்துள்ளது.

ஆனாலும் வடக்கு மாகாணத்தில் ஆயிரத்து 808 ரூபாவுக்கே விற்பனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துச் செலவு காரணமாக இந்த விலை அதிகரிப்பு காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந–5)

## மூன்றரை

ரவிகருணாநாயக்கா நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சமர்ப்பித்து உரையாற்றினார். அதிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

"போரில் பறிமுதல் செய்யப்பட்ட ஆபரணங்களை, அப்பாவிக் குடும்ப உறுப்பினர்கள் பெற்றுக் கொண்டதை ஜனாதிபதித் தேர்தல் காலத்தின் போது நாம் கண்டோம். அதேபோன்று ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் இராணுவத்தினரால் நான்கு கொள்கலன்கள் அரசிற்குக் கையளிக்கப்பட்டதையும் நாம் அறிவோம். அரசால் அவைவாசி கொள்கலன் தங்கம் வெளிக்காட்டப்பட்டது என்ற வகையில் எஞ்சிய மூன்றரை கொள்கலன்களில் காணப்பட்ட தங்கம் என்னவானது என்ற கேள்வியை நாம் முன்வைக்கின்றோம்"– என்று அவர் தெரிவித்தார். (ந–5)

## தேர்தல்

அதே ஆண்டு ஜுலை 23 ஆம் திகதி நடத்தப்பட்டது.

ஆனால் புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபைகளுக்கு தேர்தலை நடத்துவதற்கு எதிராக, உயர் நீதிமன்றத்தில் வேறு காரணங்களைக் குறிப்பிட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. குறித்த இரு பிரதேச சபைகளுக்குரிய பகுதிகளில் மக்கள் மீள்குடியமர்வு செய்யப்படவில்லை. இங்கு கண்ணிவெடிகள் காணப்படுகின்றன. எனவே தேர்தலை ஒத்தி வைக்க கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அதனால் ஒத்தி வைக்கப்பட்ட தேர்தல் அடுத்த ஆண்டு, மார்ச் 24 ஆம் திகதி நடத்தப்பட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வேட்பு மனுக் கோரப்பட்டது. தபால் மூல வாக்களிப்புக்குரிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. இந்த நிலையில் திடீரென மார்ச் 14 ஆம் திகதி, அந்தப் பிரதேசத்தில் மீள்குடியமர்வு பூர்த்தியாகவில்லை என்று தெரிவித்து இருவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்குத் தாக்கல் செய்ததை காரணமாக, எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்ட நிலையில் தேர்தல் இடை நிறுத்தப்பட்டது. இந்த நிலையில் குறித்த இரண்டு வழக்குகளும் தற்போது உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளன. அதனால் உடனடியாக இரண்டு பிரதேச சபைகளுக்கும் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

குறித்த பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்கள் ஏற்கனவே கோரப்பட்டுள்ளன. அதனால் ஒருமாதகாலஅவகாசத்தில்எதிர்வரும் 28 ஆம் திகதி தேர்தலை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த தேர்தலுக்கு 2014 ஆம் ஆண்டின் வாக்காளர் பெயர் பட்டியலே பயன்படுத்தப்படவுள்ளது என்றும் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் குறிப்பிட்டார். (ந–5)

## காணிகளை

தலைமையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்ற நிலைக் குழு ராமேஸ்வரம், மண்டபம் ஆகிய பகுதிகளில் மக்கள் குறைகளைக் கேட்டறிந்தது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினரும், இந்தக் குழுவின் தலைவருமானசுதர்சனநாச்சியப்பன், "மீண்டும் தங்களுடைய நிலம், வீடுகளை இலங்கை அரசு திரும்ப வழங்க வேண்டும், எந்தப் பிரச்சினையும்வராது என்றுமாகாண அரசுஉத்தரவாதம்வழங்கவேண்டும்.இவ்வாறு செய்தால்தாங்கள் திரும்பிச் செல்லத் தயார் என்று பெரும்பான்மையோர் தெரிவித்தனர்."– என்று தெரிவித்தார்.

"மற்றொரு தரப்பினர், தங்களுக்கென அங்கே வீடு, நிலம் போன்றவை இல்லை. நாங்கள் திரும்பிச் சென்றால் வேலை வாய்ப்பு போன்றவற்றை வழங்குவோம் என்று உத்தரவாதம் வழங்கினால், திரும்பத் தயாராக இருப்பதாக தெரிவித்தனர். வேறு சிலர், தாங்கள் நீண்ட காலமாக இங்கேயே வசித்துவருவதால், தொடர்ந்து இங்கேயே வசிப்பதற்கு அனுமதிக்க வேண்டுமெனவும் கூறினர்"– என்றும் சுதர்சன நாச்சியப்பன் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் தற்போது சுமார் 34 ஆயிரத்து 500 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து இரண்டாயிரத்து 55 அகதிகள் வசிக்கின்றனர். இவர்களில் சுமார் 65 ஆயிரம் பேர் தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ள 107 முகாம்களில் வசிக்கின்றனர். மீதமுள்ளவர்கள், அரசிடம் பதிவு செய்துகொண்டு, முகாம்களுக்கு வெளியில் வசிக்கின்றனர். (ந–5)

## மைத்திரி

தேர்தலின் பின்னரும் இதே சலுகைகள் தொடருமா? என்பது கேள்விக்குறியே என்றும் தெரிவித்தார்.

மைத்திரிபால தலைமையிலான புதிய அரசின் வரவு – செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது. அதில் பல்வேறு விலைக் குறைப்புக்கள், அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்புக்கள் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தவரவு – செலவுத் திட்டம் தொடர்பில், பொருளாதார நிபுணரான கலாநிதி முத்துகிருஷ்ணா சர்வானந்தாவிடம் 'உதயன்' கருத்துக் கேட்டது.

"இந்த வரவு – செலவுத் திட்டம் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை நோக்காகக் கொண்டதே. இதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவார்களா என்று சொல்ல முடியாது. ஜனாதிபதித் தேர்தலின் போது வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைய அத்தியவசிய பொருள்களின் விலைகளைக் குறைத்துள்ளனர்."– என்று அவர் கூறினார்.

"அத்தியவசிய பொருள்களின் விலைக் குறைப்பை இதே போன்று நீண்ட காலத்துக்கு நீடிக்க முடியாது. பொருள்களின் விலையை, நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அதிகரிக்க வேண்டி வரலாம். எரிபொருள்களைப் பொறுத்த வரையில், சர்வதேச எரிபொருள் சந்தையில் எரிபொருள் விலைக் குறைவு ஏற்பட்டுள்ளது. அதனால் எரிபொருள் விலை குறைப்பு, சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பு ஏற்படும் போது மாற்றம் ஏற்படும்."– என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"இந்த வரவு – செலவுத் திட்டத்தில் சொல்லப்பட்ட அரச ஊழியர்களின் சம்பள உயர்வை வழங்குவார்கள். அதை திரும்ப பெறமுடியாது. ஆனால் பொருள்களின் விலைகளை தேர்தலின் பின்னர் அதிகரிக்கலாம். இவ்வளவு சலுகைகளை வழங்கியுள்ளனர். இதற்கான நிதி எங்கிருந்து வரப் போகின்றது?. கடந்த அரசை விட தாம் சிக்கனமாக இருப்போம் என்று கூறினாலும், நீண்ட காலத்துக்கு இதற்கான நிதியைத் தேட முடியாது. புதிய வரிவிதிப்புக்களைக் குறிப்பிட்டுள்ளனர். ஆனாலும் அது எவ்வளவு தூரத்துக்கு சாத்தியமானது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியுள்ளது."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"இதனை நீண்ட காலத்துக்கு நடைமுறைப்படுத்துவது கடினம். ஒரு வருடத்துக்கு இதை நீடிப்பதே கடினம். அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வில் கூட, பெப்ரவரி மாதம் 5 ஆயிரம் ரூபாவும், ஜுன் மாதம் 5 ஆயிரம் ரூபாவும் என்றே அதிகரிப்பைக் குறிப்பிட்டுள்ளனர்"– என்றும் அவர் கூறினார்.

மஹிந்த அரசின் கடந்த 10 ஆண்டு கால வரவு – செலவுத் திட்டத்துக்கும், இந்த அரசின் வரவு – செலவுத் திட்டத்துக்கும் இடையே பொருளாதார ரீதியில் ஏதாவது வேறுபாடுகள் காணப்படுகின்றனவா? – என்று அவரிடம் கேட்டோம்.

"பொருளாதார கொள்கை தொடர்பில் பெரிதான வேறுபாடு எதுவும் இல்லை. அதனை நாம் இப்போது எதிர்பார்க்கவும் முடியாது. ஏனெனில் தற்போது சமர்பிக்கப்பட்டது இடைக்காலவரவு – செலவுத்திட்டம். எதிர்வரும் நவம்பர் மாதம் அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் போதுதான் வேறுபாடுகளை அறிய முடியும்."– என்று அவர் கூறினார். (ந–5)

## மொஹான்

இந்த நிலையில், சபை மீண்டும் கூடியபோதும் சர்ச்சை நீடித்ததால் நேற்று விவாதத்துக்கு எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் எடுக்கப்படாமலேயே எதிர்வரும் 5ஆம் திகதிவரை நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்றுபிற்பகல் 1.30 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ச தலைமையில் கூடியது. பொதுமனுத் தாக்கல் முடிவடைந்த பின்னர் நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் 23/2ஆம் பிரிவின் கீழ் நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா எழுப்பியிருந்த கேள்விகளுக்கும், ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி தினேஷ் குணவர்தன எழுப்பியிருந்த கேள்விகளுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பதிலளித்தார்.

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் பதவிநீக்கம் செய்யப்பட்டமை, அப்பதவிக்கு ஷிரானி பண்டாரநாயக்க மீள அமர்த்தப்பட்டமை உள்ளிட்ட விடயங்கள் சார்ந்ததாகவே பிரதமரின் உரை இருந்தது.

அவரின் உரை முடிவடைந்ததும் இது பற்றி சபையில் விவாதம் நடத்துவதற்குரிய திகதியை நிர்ணயிப்பதற்காக கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்தும் நோக்கில் எதிர்க் கட்சித் தலைவரின் கோரிக்கையின் பிரகாரம் சபை அமர்வுகளை பிற் பகல் 2.15இற்கு 15 நிமிடங்கள் ஒத்திவைத்தார். எனினும், 3 மணிக்கு சபை கூடியது.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தனநாட்டில் முக்கிய பிரச்சினையொன்று என்பதால் பிரதம நீதியரசர் பதவி நீக்கம் பற்றி பிரதமர் வழங்கிய விளக்கம் குறித்து இன்றைய தினமே (நேற்று) சபையில் விவாதம் நடத்தப்படவேண்டும் என வாதிட்டதுடன், பதவியில் இருந்து விலக்குவதற்கு மொஹான் பீரிஸ் இணங்கியிருக்கவில்லை என்றும் குறிப்பிட்டார். இவரின் கூற்றுக்கு வலுசேர்க்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ கருத்து வெளியிட்டார்.

அதாவது, பிரதம நீதியரசராக இருந்த மொஹான் பீரிஸ் தொடர்பில் பிரதமர் வழங்கியுள்ள விளக்கம் மாத்திரமே மக்களுக்கு சென்றடையும். ஆகவே, இது விடயம் பற்றி விவாதம் நடத்தியே ஆக வேண்டும் என்ற தொனியில் கருத்து வெளியிட்டார் விமல்.

அதனைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விவாதம் நடத்துவதற்கு தாம் எதிர்ப்பில்லை என்றும், அதை எதிர்வரும் 5ஆம் திகதி நடத்துவோம் என்றும் குறிப்பிட்டார். எனினும், எதிர்க்கட்சியினர் கூக்குரலிட்டனர். விவாதம் நடத்தப்பட்டே ஆகவேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இதற்கு அரச தரப்பு இணங்கவில்லை. அதற்கான காரணத்தை விளக்கினார் பிரதமர் ரணில்.

"அதாவது, 4ஆம் திகதி சுதந்திர தின நிகழ்வு நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு நாடாளுமன்ற விளக்கம் தேவை. அத்துடன், நவம் பெரஹெரவும் நடைபெறவுள்ளது. எனவே, இதுபற்றி விவாதிப்பதற்கு 5ஆம் திகதியேபொருத்தமாக இருக்கும்" – என்றார் பிரதமர் ரணில்.

எனினும், எதிர்க்கட்சிகள் ஓயவில்லை. எம்.பிக்களான வாசுதேவ நாணயக்கார, சுசில் பிரேம ஜயந்த, பீலிக்ஸ் பெரேரா ஆகியோரும் இது விடயம் பற்றி உடன் விவாதம் தேவை என வாதிட்டனர். இதன்போது கருத்து வெளியிடுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. சுமந்திரன் முற்பட்டார். அப்போது எதிரணி உறுப்பினர்கள் சபையில் கூக்குரல் எழுப்பினர். பந்துல குணவர்தன, வாசுதேவ ஆகியோர் சுமந்திரனின் மையோ கூறுவதைக் காணமுடிந்தது.

இந்நிலையில், கட்சித் தலைவர் கூட்டம் முடிவடைந்து சபை கூடியபோது, கடற்றொழில் தொடர்பில் அரசு கொண்டு வந்திருந்த பிரேரணையில் திருத்தம் நடத்துவது பற்றி வாக்கெடுப்பு நடத்துமாறு தினேஷ் குணவர்தன கோரிக்கை விடுத்தார். அதனைத் தொடர்ந்து 3.20 இற்கு இரண்டாவது தடவையாகவும் சபை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் 4.20இற்கு கூடியது.

இதன்போது நாடாளுமன்ற அமர்வுகளை எதிர்வரும் 5ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

எதிர்பக்கம் இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகியன இது விடயத்தில் அமைதியாக இருந்தன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களும் அமைதியாகவே இருந்தனர். விமல், தினேஷ், வாசு, திஸ்ஸ ஆகியோரே தொடர்ந்தும் பிரதமருடன் சர்ச்சையில் ஈடுபட்டனர். அதாவுட செனவிரத்னவும் இவர்களுடன் இணைந்து குரல் கொடுத்தார்.

அத்துடன், சபையில் நேற்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த விடயமும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. (ந–சி)

# விளையாட்டு



## இறுதியாட்டத்தில் சரபோவா-செரீனா

ஆஸ்திரேலிய ரென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் – ரஷ்யாவின் மரியா சரபோவா ஆகியோர் இன்று பலப் பரீட்சை நடத்த இருக்கின்றனர்.
மகளிர் ரென்னிஸ் தரவரிசையில் செரீனா முதலிடத்திலும், சரபோவா 2–வது இடத்திலும் உள்ளனர். இருவரும் இதுவரை 18 முறை மோதியுள்ளனர். இதில் 16 முறை செரீனா வென்றுள்ளார். சரபோவா இருமுறை மட்டுமே வெற்றி பெற்றுள்ளார். இருப்பினும் இரு வீராங்கனைகளும்சமபலத்தில்உள்ளதால்கிண்ணம்வெல்லப்போவது யார்என்றஎதிர்பார்ப்புமக்கள்மத்தியில்பரவலாகியுள்ளது. (த–ரி)



## 20/20 ஆட்டத்தில் களமிறங்கும் யுவி

இந்திய அணியின் நட்சத்திர வீரர் யுவராஜ் கடைசியாக கடந்த ஆண்டு இலங்கைக்கு எதிரான 20/20 ஆட்டத்தில் பங்கேற்றார். இதன் பின் மோசமான துடுப்பாட்டம் காரணமாக உலகக்கிண்ணத் தொடருக்கான அணியிலும் இடம் கிடைக்கவில்லை.
இந்நிலையில் யுவராஜ் மெல்போர்ண் கழக அணி சார்பில் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். சசக்ஸ் அணிக்கு எதிராக டுபாயில் (மார்ச் 20) நடக்கவுள்ள எமிரேட்ஸ் 20/20 தொடரில் பங்கேற்கிறார். இந்த அணியில் இங்கிலாந்து அணியின் அலெஸ்டயர் குக், கார்பெரி நிக் காம்ப்டனும் இடம்பெற்றுள்ளனர். பகலிரவு ஆட்டமாக நடக்கவுள்ள இப் போட்டியில் நாவல் நிற பந்து உபயோகிக்கப்படும்.
இது குறித்து யுவராஜ் கூறுகையில்– 'மெல்போர்ண் கழக அணிக்காக மீண்டும் பங்கேற்பது வியப்பாக உள்ளது. வாய்ப்புத் தந்த அணி நிர்வாகத்திற்கு நன்றி. சிறப்பான வீரர்கள் அணியில் இருப்பதால் மீண்டும் வெற்றி பெறுவோம்' என்றார். (த–ரி)

## இறுதிக்கு இங்கிலாந்து வெளியேறியது இந்தியா



இக்கட்டான நேரத்தில் ரெய்லர் மற்றும் பட்லரின் பெறுமதியான இணைப்பாட்டம் கைகொடுக்க முத்தரப்பு தொடரின் இறுதியாட்டத்தில் இந்தியாவை வீழ்த்தி இறுதிக்கு முன்னேறியது இங்கிலாந்து.
ஆஸ்திரேலியா, இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையில் தற்பொழுது நடைபெற்றுவரும் முத்தரப்பு தொடரின் ஆறாவதும் இறுதியுமான லீக் ஆட்டத்தில் நேற்றயதினம் இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதின. லீக் ஆட்டத்தில் அனைத்து ஆட்டங்களிலும் வெற்றியீட்டிய ஆஸ்திரேலியா ஏற்கனவே இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றுள்ள நிலையில் ஆஸ்திரேலியாவுடன் மோதும் அணியை தீர்மானிக்கும்ஆட்டமாகநேற்றைய ஆட்டம் அமைந்தது. இதனால் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டம் என்ற கட்டாயத்தில் இரு அணிகளும் களமிறங்கின.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பினைத் தீர்மானித்தது. ஆரம்ப வீரராக களமிறங்கிய தவான் மற்றும் ரஹானே அணிக்கு சிறந்த தொடக்கத்தை அமைத்துக் கொடுத்தாலும் தேவைக்கும் அதிகமான பந்துகளை வீணடித்தனர். அணியின் ஓட்டம் 83 ஆக இருந்தபொழுது தவான் 38(65) ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து வந்த வீரர்கள் எவருமே நிலைக்கத் தவறி பதின்ம ஓட்டங்களை தாண்டுவதற்கு பெரும்சவாலை எதிர்கொண்டு சிரமப்பட்டனர். கோஹ்லி 8, ரெய்னா 1, ராயிடு 12, டோனி 17, பின்னி 7, ஜடேயா 5, அக்சர் 1 என சீரான இடைவெளியில் பவிலியன் திரும்பிக் கொண்டிருந்தனர். அணியின் இறுதி வீரரான சமி அதிரடியாக அடித்து ஆடி 25 ஓட்டங்களை பெற்றார். இந்திய அணியில் பெறப்பட்ட மூன்றாவது அதிகூடிய ஓட்டம் சமியினுடையது.
இந்திய அணி 48.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 200 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக ரஹானே 73 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக பின் 4 இலக்குகளையும், புறோட், வோக்ஸ் மற்றும் அலி தலா 2 இலக்குகளையும் அண்டர்சன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
201 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற மிக இலகுவான இலக்கினைநோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பவீரர்கள் இந்தியாவின் மூன்னணி வீரர்களைப் போலவே பெல் 17 ஓட்டங்களுடனும் அலி 10 ஓட்டங்களுடனும் வெளியேறினர். ரெய்லர் நிலைத்துநின்று போராடினாலும் மறுமுனையில் றூட் 3, மோர்கன் 2, போப்பரா 4 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப இங்கிலாந்து அணி 66 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து பரிதவித்துக்கொண்டிருந்தது. இருப்பினும் ரெய்லருக்கு பட்லர் கைகொடுக்க இருவரும் இணைந்து அணியை பலப்படுத்த ஆரம்பித்தனர். இணைப்பாட்டமாக 125 ஓட்டங்களை பகிர்ந்து அணியின் வெற்றியை படிப்படியாக உறுதிசெய்தனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 191 ஆக இருந்தபொழுது ரெய்லர் 82 ஓட்டங்களுடன் பவிலியன் நோக்கி திரும்பினார். அடுத்த பந்துப்பரிமாற்றத்திலேயே பட்லரும் 67 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 193 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்திருந்தது. முடிவில் இங்கிலாந்து அணி 46.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து201ஓட்டங்களைபெற்று 3 இலக்குகளால்வெற்றியீட்டியது.
பந்துவீச்சில் இந்தியா சார்பாக பின்னி 3 இலக்குகளையும்சர்மா 2 இலக்குகளையும் சமி மற்றும் பட்டெல் தலா ஓர்இலக்கையும் கைப்பற்றினர்.
ஆட்டநாயகனாக ரெய்லர் தெரிவானார்.
முத்தரப்புதொடரின் இறுதியாட்டத்தில் ஆஸ்திரேலியாவும் இங்கிலாந்தும் நாளை மோதவுள்ளனர். (த–ரி)

## 'டக்' முறையில் சாதனை படைத்த கிறிஸ் கெய்ல்

ஒருநாள் ஆட்டங்களில் 23 முறை 'டக்' முறையில் ஆட்டமிழந்த வீரர்கள் பட்டியலில் மேற்கிந்தியாவின் அதிரடி தொடக்கவீரர் கிறிஸ் கெய்ல் 4ஆம் இடத்தில் உள்ளார்.
செஞ்சூரியனில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடைபெற்ற 5 ஆவது ஒருநாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார். இதன் மூலம் 'கோல்டன் டக்' அடித்த மேற்கிந்தியத் தீவு வீரர்கள் பட்டியலில் முதலிடம் வகிக்கிறார். இந்த டக் ஆட்டமிழப்பின் பின்னர் கெய்லின் டக் ஆட்டமிழப்பு 23 ஆக உயர்ந்துள்ளது. இதில் இவருக்கு உலகளவில் 4ஆவது இடம்.
'டக்' முறையில் ஆட்டமிழந்த முதல் வீரர்கள் பட்டியலில் சனத் ஜெயசூரியா33முறையுடன் முதலிடத்திலும் சாகித் அப்ரிடி 26 முறையுடன் இரண்டாம் இடத்திலும் மஹேல ஜெயவர்த்தன 25 முறையுடன் மூன்றாம் இடத்திலும் கெய்ல் 23 முறையுடன் நான்காம் இடத்திலும் களுவிதாரண 23 முறையுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். (த–ரி)



# அரச அதிபர் கிண்ணத்தின் இறுதிப் போட்டிகள் இன்று



யாழ்ப்பாணம்,ஜன. 31
யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக் கழகம் நடாத்தும் 2014 ஆம் ஆண்டுக்கான அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்தின் இறுதிப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாண பிரதேச செயலக, தெல்லிப்பழை பிரதேச செயலகப் பெண்கள் அணிகளும், உதைபந்தாட்டப் போட்டியில் வேலணை பிரதேச செயலக, தெல்லிப்பழை பிரதேச செயலக ஆண்கள் அணிகளும், கிரிக்கெட் போட்டியில் வேலணை பிரதேச செயலக, கோப்பாய் பிரதேச செயலக பெண்கள் அணிகளும், ஆண்கள் கிரிக்கெட் போட்டியில் வேலணை பிரதேச செயலக, சங்கானை பிரதேச செயலக அணிகளும் மோதவுள்ளன.

யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக்கழகத் தலைவர் திருமதி.இ.மோகனேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

(த–14)

## போராடி வென்றது பாடுமீன்

யாழ்ப்பாணம், ஜன.31
யாழ்.உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவ கழகங்களுக்குகிடையில் நடத்தும் 11 வீரர்கள் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரின் ஆட்டங்கள் தற்பொழுது பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்திலும், குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்திலும் நடைபெற்று வருகின்றன.

கடந்த புதன்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இந்த இரு அணிகளுக்கும் இடையில் நடைபெறுகின்ற ஆட்டங்களை ரசிகர்கள் பெரிதும் எதிர்பார்க்கின்ற காரணத்தினாலும், இரு அணிகளும் சம பலமுடைய அணிகள் என்கின்ற காரணத்தினாலும் ஆட்டம் ஆரம்பம் முதலே விறுவிறுப்பு தன்மையை எட்டியிருந்தது.

இரு அணிவீரர்களும் பெரும் போராட்டத்துக்கு மத்தியில் எதிரணியின் பாதுகாப்பு அரண்களை உடைத்து தமது அணிக்காகக் கோல்களை அடித்தனர். இருப்பினும் சற்றுப் போராட்ட குணம் காட்டிய பாடுமீன் வி.க.அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கடந்த திங்கட்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை பாடும்மீன் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(த–23–ரி)

# சகல துறையிலும் பிரகாசித்தது சென்.ஜோன்ஸ்

யாழ்ப்பாணம், ஜன.31
இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் பிரிவு 3 இன் தரம் ஒன்றிற்கான துடுப்பாட்டத் தொடரில் கடந்த செவ்வாய், புதன் கிழமைகளில் நீர் கொழும்பு ஹரிச்சந்திரா கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து நீர் கொழும்பு ஹரிச்சந்திரா கல்லூரி அணி மோதிக் கொண்டது.

முதலாவது இன்னிங்ஸ்சிற்காக துடுப்பெடுத்தாடிய நீர் கொழும்பு ஹரிச்சந்திரா கல்லூரி சகல இலக்குகளையும் இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. அதிக பட்சமாக மிலன் பிளவர் 75 ஓட்டங்களையும், அயேசன் சில்வா 33 ஓட்டங்களையும் மதுவந்த சில்வா 11 ஓட்டங்களையும்;ஹர்சன் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் லோகதீஸ்வர் 5 இலக்குகளையும், யதுசன் 3 இலக்குகளையும், கபில்ராஜ் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்சிற்காக துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு நம்பிக்கை நட்சத்திரங்களாக அமிர்தன் மற்றும் துவாரகசீலன் ஜொலிக்க இறுதியில் அந்த அணி சகல இலக்குகளையும் இழந்து 370 ஓட்டங்களை குவித்தது. இதன் மூலம் ஹரிச்சந்திரா அணியை விட அதிகபட்சமாக 194 ஓட்டங்களை பெற்று முன்னிலை வகித்தது. அதிக பட்சமாக அமிர்தன் 120 ஓட்டங்களையும், துவாரகசீலன் 131 ஓட்டங்களையும், யதுசன் 22 ஓட்டங்களையும் கஜீபன் 30 ஓட்டங்களையும் தமது அணி பெற்றனர்.

பந்துவீச்சில் ஹரிச்சந்திரா கல்லூரி அணி சார்பில் மடுஸ்கன 3 இலக்குகளையும், மதுவந்த, குணரத்ன தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க வேண்டுமாயின் 194 ஓட்டங்களைக் கட்டாயம் பெறவேண்டும் என்ற இக்கட்டான சூழ்நிலையில் தமது இரண்டவது இன்னிங்சிற்காக துடுப் பெடுத்தாடிய நீர் கொழும்பு ஹரிச்சந்திரா கல்லூரி அணிக்கு அதன் ஆரம்பவீரர்கள் உட்பட எவருமே சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினரின் பந்து விச்சிற்கு முகம் கொடுக்க முடியாது தட்டுத்தடுமாறினர். ஒரு கட்டத்தில் ஹரிச்சந்திரா கல்லூரி அணி 8 இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது. அவ் அணியை சேர்ந்த ஏனைய இரு வீரர்களும் களத்தடுப்பின்போது காயமடைந்திருந்ததால் அவர்களால் துடுப்பெடுத்தாட முடியவில்லை. இதனால் சென்ஜோன்ஸ் அணி வெற்றி பெற்ற அணியாக அறிவிக்கப்பட்டது. இந்த ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி இன்னிங்ஸ் மற்றும் 131 ஓட்டங்களால் அபார வெற்றியை பதிவு செய்தது.

பந்து விச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் லோகதீஸ்வர் 7 இலக்குகளையும், கபில்ராஜ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

(23–ரி)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.31
கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக சனசமூக நிலையம் விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் யாழ்.மாவட்ட அணிகளுக்கான 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் லீக் ஆட்டங்கள் தற்பொழுது கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

அதில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 1 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.(த–23–ரி)

## மகாஜனாவின் மரதன் இன்று

யாழ்ப்பாணம், ஜன.31
தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியின் வருடாந்த மென்வன்மைப் போட்டியை முன்னிட்டு நடத்தப்படும் மரதன் ஓட்டப் போட்டி இன்று சனிக்கிழமை கல்லூரி அதிபர் மணிசேகரம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

ஆண்களுக்கான மரதன் ஓட்டம் கல்லூரி முன்றலில் காலை 6 மணிக்கு ஆரம்பமாகி மீண்டும் கல்லூரி முன் றலை வந்தடையும். பெண்களுக்கான மரதன் ஓட்டம் காலை 6.30 மணிக்கு மல்லாகம்சந்தியிலிருந்து ஆரம்பமாகிகல்லூரிமுன்றலைவந்தடையும். (த–23–ரி)



செய்திகள்

# ஆரம்பமானது ஐ.பி.எல். ஆதிக்கம்

இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடரில் பங்கேற்கும் வீரர்களை ஏலத்தில் எடுக்கும் நிகழ்வு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி நடக்க உள்ளது. ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்கும் அணிகளில் விளையாடும் வீரர்கள், ஏலத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர். இதற்காக ஒவ்வொரு ஆண்டும் வீரர்களின் ஏலம் நடத்தப்படும். 2015ஆம் ஆண்டு சீசனுக்கான ஐ.பி.எல். வீரர்கள் ஏலம் பெப்ரவரி 16ஆம் திகதி நடக்கிறது. யுவராஜ், கெவின் பீற்றர்ஸன், தினேஷ் கார்த்திக், ஆம்லா ஆகியோருக்கு அதிகபட்ச அடிப்படை விலையாக 2 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அணியில் இருந்து வீரர்களை விடுவித்ததால் கிடைத்துள்ள தொகையுடன் இந்த ஆண்டு வீரர்களை ஏலம் எடுக்க ஒவ்வொரு அணிக்கும் கூடுதலாக 3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டைப் போல 2 நாள்கள் ஏலம் நடக்காது எனத் தெரிகிறது. குறைந்த நேரமே ஏலம் நடக்கும் இருந்தாலும், இந்த ஆண்டுக்கான ஏலம் அனைத்து அணிகளுக்குமே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். முக்கிய வீரர்களை அணியில் இருந்து விடுவித்துள்ள டெல்லி டேர்டெவில்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் ஆகிய அணிகள் இந்த ஆண்டு ஏலத்தில் அதிக பணத்தை செலவிடும் என்று எதிர்பார்க்கலாம்.

பீற்றர்ஸன், தினேஷ் கார்த்திக், முரளி விஜய், ரோஸ் டெய்லர் ஆகியோரை விடுவித்துள்ளதன் மூலம் இந்த ஆண்டு டெல்லி அணி 40 கோடிக்கு வீரர்களை ஏலம் எடுக்க முடியும். கடந்த ஆண்டு ஏலத்தில் அதிகபட்ச தொகையான 14 கோடிக்கு ஏலம் எடுக்கப்பட்ட யுவராஜ்யை விடுவித்ததன் மூலம் றோயல் சலஞ்சர்ஸ் அணி இந்த ஆண்டு ஏலத்தில் 21 கோடிக்கு வீரர்களை ஏலம் எடுக்க உள்ளது.

இந்த ஆண்டு ஏலத்தில் 1.50 கோடி அடிப்படை விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ள மோர்கன், இர்பான் பதான், மைக்கல் ஹஸி, மத்தியூஸ், டில்சான், சாமுவேல்ஸ், வைட் ஆகியோர் உட்பட 724 வீரர்கள் ஏலத்தில் விடப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த-ரி)

# கில் கிறிஸ்ட்டை முந்தினார் சங்கா

ஒருநாள் சர்வதேச ஆட்டங்களில் 474 வீரர்களை ஆட்டமிழக்கச் செய்து உலக சாதனை நிகழ்த்தினார் சங்கக்கார. இதன் மூலம் ஆடம் கில் கிறிஸ்ட் சாதனையை முறியடித்து முதலிடம் பிடித்தார்.

நேற்றுமுன்தினம் வெலிங்டன் மைதானத்தில் நியூஸிலாந்துக்கு எதிராக நடைபெற்ற 7ஆவது ஒருநாள் ஆட்டத்தில் சங்கக்கார 2 பிடியெடுப்புக்களை செய்ததன் மூலம் 474 இலக்குகள் விழக் காரணமானவர் என்ற வகையில் ஆஸ்திரேலிய விக்கெட் கீப்பர் ஆடம் கில் கிறிஸ்ட் (472) சாதனையை முறியடித்து புதிய சாதனையைப் படைத்தார்.

ஒருநாள் ஆட்டங்களில் தற்போது சங்கக்காரா 474 ஆட்டமிழப்புக்களை நிகழ்த்தி முதலிடத்திலும், கில்கிறிஸ்ட் 472 ஆட்டமிழப்புக்களை நிகழ்த்தி இரண்டாம் இடத்திலும், மார்க் பவுச்சர் 424 ஆட்டமிழப்புக் களை நிகழ்த்தி மூன்றாம் இடத்திலும், தோனி 314 ஆட்டமிழப்புக்களை நிகழ்த்தி நான்காம் இடத்திலும் உள்ளனர். (த-ரி)





# ரெய்னாவுக்கு நெருக்கடி

இந்திய கிரிக்கெட் அணியின் வீரர் சுரேஷ் ரெய்னா, பெண் ஒருவருடன் இருந்தது தொடர்பான விசாரணைக்கு இலங்கை கிரிக்கெட் வாரியம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2010 இல் ஆசியக் கிண்ணப் போட்டியில் பங்கேற்க இந்திய அணி, இலங்கை சென்றது. அப்போது தம்புலாவில் உள்ள ஒரு ஹோட்டலில் தங்கியிருந்த போது, ரெய்னாவுடன் ஒரு பெண் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இது குறித்து பத்திரிகையில் செய்தி வெளியாக, இலங்கை கிரிக்கெட் வாரியம், இந்திய கிரிக்கெட் சபையிடம் முறையிட்டது. இதனை இந்திய கிரிக்கெட் சபை மறுத்தது.

மேலும், அந்தப் பெண் ரெய்னாவின் ஏஜென்ட் என்றும், ரெய்னா உறவினர் ரித்திகா எனவும் கூறப்பட்டன. அதுமட்டுமல்லாது சில வீரர்களுடன் விளம்பர ஒப்பந்தம் சம்பந்தமாக பேச வந்ததாகவும் கூறப்பட்டது.

இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக விசாரிக்க இலங்கை கிரிக்கெட் வாரியம் புதிய குழு ஒன்றை நியமித்துள்ளது. இதில் தற்போதைய நிறைவேற்று குழு உறுப்பினர் ஷமி சில்வா, காமினி விக்கிரமசிங்க மற்றும் அலுவலக நிர்வாகிகளும் இடம்பெற்றுள்ளனர்.

இது குறித்து ஷமி சில்வா கூறுகையில்; இந்த விவகாரத்தில் ஊடகம் தொடர்பான புகார்கள் எழுந்துள்ளன. இலங்கை கிரிக்கெட் சபைக்கு இதனுடன் தொடர்பில்லாத நிலையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், சூதாட்ட பிரச்சினை என்பது முக்கியமான விடயமாக உள்ளது. பாதுகாப்பு ஆலோசகராக உள்ள லோரன்ஸ் பெர்னாண்டோ, எந்தவித அறிக்கையும் கொடுக்காத நிலையில் அவரைத் தொடர்பு கொண்டு இது தொடர்பாக விசாரிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (த)


வெற்றித்தேர்வு பரீட்சைகள் ஆரம்பமாகின்றன

வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப் பிரிவு
2015ஆம் ஆண்டிற்கான வெற்றித்தேர்வு
தொடர் போட்டிப் பரீட்சைகள் ஆரம்பமாகின்றன.

தரம் 5 - 30 பரீட்சைகள். தரம் 4 - 25 பரீட்சைகள்.

முதலாவது பரீட்சை 01.02.2015 ஞாயிறு

ஞாயிற்றுக்கிழமைகளில் பின்வரும் நேரப்படி பரீட்சைகள் நடைபெறும்
காலை 6.00, 8.00, 10.00 மணி மாலை 2.00 மணி, 4.00 மணி
விரும்பிய நேரத்திற்கு பரீட்சைகள் எழுதலாம்.

வினாத்தாள்கள் திருத்தப்பட்டு விடையுடன் புள்ளிகள் வழங்கப்படும்.
அதிகூடிய புள்ளிகளைப் பெறுவோர்க்கு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும்.
சித்தியடையும் மாணவர்கள் வெற்றித்தேர்வு வெற்றியாளர்களாக கௌரவிக்கப்படுவர்.
உடன் பதிவுசெய்து அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இடம்: சயன்ஸ் அக்கடமி, நல்லூர்
(நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக 100m தூரத்தில்)
தொடர்புகளுக்கு: 0775388471, 0773126807





VACANCY
ACCOUNTS EXECUTIVE [FEMALE]

Harikanan Printers is a leading regional business service provider of document and information management, printing and out sourcing solutions. We are currently looking for suitable candidate for above position.

Pre Requisite
- GCE A/L In Commerce Stream
- Knowledge in Accounting Package
- Should be Computer Literate
- Honest and Good Communication Skills
- Be a Good Team Player
- Committed Worker

Application should be forwarded to us within 7 Days from date of Advertisement

Harikanan
PRINTERS OF THE NORTH

Head Office:
#681, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
W www.harikanan.com
E print@harikanan.com
T +94 21 222 2717|8



ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் நம்பகரமான சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136 நாடுகளில் 1040 கிளைகள். பிரெஞ் ஆசிரியரிடம் சரியான உச்சரிப்புடன் படிக்கலாம், இலங்கையில் நாம் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS ஐ வழங்குகிறோம். யாரும் படிக்கலாம். Embassy: www.ambafrance-lk.org மொழிபெயர்ப்புகள்... யாழ், வன்னி, வவுனியா, & மன்னாரைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே FRANCE செல்கிறார்கள்.

ஆரம்பம் 7.02.2015 at 11am இன்றே அனுமதி பெறுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி → புகையிரதக்கடவை → AF or ஆரியகுளம், ஸ்ரான்லி றோட் → றக்கா றோட் → AF


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.